அறைவு 04 இயம் 03 August 15-21, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

அனைவரும் அணிதிரண்டு வாக்களியுங்கள்
வாக்கு உங்களது உரிமை




திருகோணமலையில் கடும் போட்டி


# "தெரிவாகப்போகும் தமிழர் யார்?"

நாடாளுமன்றத் X தேர்தல் 2015

திருகோணமலை நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு கடும் போட்டி நிலவுவதை அடுத்து நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் தரப்பாகத் தெரிவாகப் போவது யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது.

திருகோணமலைத் தேர்தல் களத்தில் பல தமிழ்க் கட்சிகளும் சுயேட்சைகளும் போட்டியிடுகின்ற போதிலும் வடக்கு கிழக்கின் ஏனைய மாவட்டங்களைப் போலவே இங்கும் அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும். தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையே கடும் போட்டி எழுந்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் முதன்மை 17




## "தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்காகப் பேசும் கட்சிக்கே வாக்களியுங்கள்"

### - வடமாகாண முதல்வர் வெளிப்படையாக அறிவிப்பு -

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தங்களது கடமையை செய்ய தவறின், அது ஒட்டுமொத்த தமிழினத்திற்கும் கேடாய் அமைந்து விடும் எனவும் மக்கள் தங்களது வாக்கு பலத்தை சரியான முறையில் பயன்படுத்தி, சிறந்த பிரதிநிதி ஒருவரை நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் எனவும் வட மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு முதலமைச்சர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் 17

**"ஆரோக்கியமான அகமுரண்பாடுகள் அவசியமானவை யாயினும்கூட, ஒரே கட்சிக்குள் இருந்து கொண்டு ஒரே கொள்கைக்காகத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் ஒருவரை ஒருவர் தூற்றிக் கொண்டும், வசைபாடிக்கொண்டும், அரசியல் நாகரீகம் அற்ற முறையில் ஒருவர் மற்றவருக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமையினைக் காணும் போது பக்கச் சார்பற்ற நடுநிலைத் தன்மை என்ற எனது முடிவு சரியானது என்றே நான் கருதுகின்றேன்"**



## "தமிழ்த் தேசமே தமிழர்களின் தீர்வு"

### அமெரிக்கப் பிரதிநிதிகளிடம் இரா.ஸ்ரீஞானேஸ்வரன்

தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வு "தனித் தமிழ்த் தேசம்" ஆகவே அமையும் என அமெரிக்க துாதுவராலய அரசியல்துறைப் பிரதிநிதி-களிடம் இரா. ஸ்ரீஞானேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராலயத்தின் அரசியல் துறைப் பிரதிநிதி ஜோசப் ஸ்சலர் மற்றும் அரசியல்துறைப் பயிற்சியாளர் ரமீஸ் வதூத் ஆகியோர் இரா. ஸ்ரீஞானேஸ் - வரனின் பிரத்தியேக அலுவலகத்தில் சந்திப்பை மேற்கொண்ட போதே இக்கருத்துக்களை அவர் அமெரிக்கப் பிரதிநிதிகளிடம் 17

## முள்ளிப்பொத்தானை தமிழ் மயானம் கைநழுவுமா?

முள்ளிப்பொத்தானையில் காலங்காலமாக தமிழர்களுக்கும் உரித்தாகியிருந்த பொதுமயானம் கைநழுவிப் போகும் அபாயத்தை எதிர்கொண்டு - ள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் சிங்கள மக்கள் மட்டும் பயன்படுத்திவந்த சுமார் எட்டு ஏக்கர் பரப்பளவுள்ள இந்த பொதுமயானத்தில் தமக்குரிய பகுதியைச் சிங்கள மக்கள் வேலியிட்டுப் பாதுகாத்ததை 17

# அனைத்துத் தமிழ் மக்களும் தயவுசெய்து வாக்களியுங்கள்


## "அனல் மின்நிலையப் பணிகளை முன்னெடுக்க ஆதரவு வழங்க வேண்டும்"

## மீள்குடியேறிய மக்களுக்கு அச்சுறுத்தல்

மீள்குடியேறியுள்ள சம்பூர் மக்களுக்கு அரச அதிகாரிகள் அச்சுறுத்தலை விடுத்து வருவதாக மக்கள் மலைமுரசிற்குத் தெரிவித் துள்ளனர்.

அனல் மின்நிலையப் பணிகளுக்கு எவ்விதமான இடையூறுகளையும் மீள் குடியேறிய மக்கள் 17





## சம்பூரில் அனல்நிலையம் உருவாகினால் த.தே.கூவின் வேட்பாளர் நால்வரும் அங்கு வசிப்பார்களா?

### புனர்வாழ்வளிக்கப்பட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ரூபன் கேள்வி...?

சம்பூரில் அமையும் அனல் மின் நிலையத்தை வெளிப்படையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் எதிர்க்கவில்லை என புனர்வாழ்வளிக்கப்பட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரான திரு. ரூபன் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்திற்கே கடும் அழிவுகளை உருவாக்கும் என அறிவுள்ள தரப்பினரால் கடுமையாக எதிர்க்கப்படும் சம்பூர் அனல் மின்நிலைய உருவாக்கத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தே வருகின்றது எனக் கூறிய அவர் அம் மின்நிலையத்தால் தமிழர் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் உண்மையை மட்டும் உலகிற்கு வெளிப்படுத்தும் கிழக்கின் வார இதழ் -

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## ஒரு வாக்கு – செய்திகளோ பல!!!!

இன்னும் இரண்டு நாட்களில் நாங்கள், எமது வரலாற்றுக் கடமையொன்றை, எமது உரிமையை நிலைநாட்டுவதற்காக, வாக்களிக்கச் செல்லவுள்ளோம்.

முதலில் தமிழ் மக்களாகிய நாங்கள் அனைவரும் வாக்களிக்கச் செல்ல வேண்டும் என்பது மிக முக்கியமானது.

ஏனெனில் வாக்களிப்பது என்பது தமிழரின் உரிமையினை நிலைநாட்டுவதன் ஒரு வகிபாகம் ஆகும்.

ஆனால் தமிழ் மக்கள் மெல்ல மெல்ல வாக்களிப்பில் இருந்து விலகிச் செல்வதை நாம் காண்கின்றோம். வாக்களிப்பு வீதத்தில் எழும் வீழ்ச்சியே அதனை நிரூபிக்கின்றது.

இவ்வாறு வாக்களிக்கச் செல்லவிருப்பின்றி இருப்பதற்கான முக்கியமான காரணங்களில் ஒன்று இலங்கையின் நாடாளுமன்றத்தின் மீது தமிழ் மக்கள் மெல்ல மெல்ல நம்பிக்கையை இழந்து வருவதாகும்.

அவ்வாறு நம்பிக்கை இழப்பதற்கான முக்கியமான காரணம் யாதெனில் தமிழ் மக்களை தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து தமிழ்த் தலைமைகள் ஒதுக்கி வைத்திருப்பதே!

அரசியல் என்பது தெரிவு செய்தலுடன் முடிவடைந்து விடுகின்றது என தமிழ் மக்கள் எண்ணத் தலைப்பட்டு விட்டனர். தெரிவு செய்யப்படுபவர்களும் அவ்வாறான நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்படுவதையே விரும்புகின்றனர்.

இவ்வாறான நிலையே தொடர்வதால் தமிழர்கள் சலிப்படைந்து தமது அரசியல் தொடர்பான சிந்தனாவோட்டத்தின் எல்லையில் சோம்பிக்கிடக்கும் நிலை ஏற்பட்டு விடுகின்றது.

ஸ்ரீலங்காவில் வாழும் மூன்று இனங்களிடையே தமிழினம் மட்டுமே தனது விடுதலைக்காக இரத்தம் சிந்தியதொரு சுதந்திரப் போராட்டத்தை நடாத்தியது என்பது வரலாறு.

அந்தச் சுதந்திரப் போராட்டத்தின் முடிவில் அந்த இனம் தனது சுதந்திரத்தைத் தக்க வைத்துக் கொள்ளவில்லை. ஆனால் சுதந்திர விடுதலைப் போராட்டத்தைப் பலம் மிக்க அடித்தளமொன்றில் இருந்து அரசியல் வழியில் கொண்டேகக் கூடிய வலுவைப் பெற்றிருந்தது.

ஆகவே ஏனைய இரண்டு இனங்களையும் விட சிறந்ததொரு அரசியல் முனைப்புடன் செயற்பட வேண்டிய அரசியல் நிலையே தமிழர்களுக்கு உண்டு.

தமிழர்களின் அரசியலானது ஸ்ரீலங்காவில் உள்ள ஏனைய இரண்டு இனங்களைப் போன்று வெறும் நாற்காலிக்கான அரசியலாக அல்லாமல் விடுதலையை வென்றெடுக்க வேண்டிய தீரமிகு அரசியலாகவே இருக்க வேண்டும்.

விடுதலையை வென்றெடுக்க வேண்டிய தீரமிகு அரசியலில் இருந்த தமிழர்கள் அவ்வரசியலை விட்டு வெளியேறிச் செல்தென்பது எமக்கான சாபக்கேடுகளில் ஒன்றாக இருக்கின்றது.

தமிழ்த் தலைமை தமிழர்களை அரசியல் பாதையில் இருந்து வெளியேற்றிச் செல்வதால் இந்தச்சாபக் கேட்டிலிருந்து ஒரு விடுதலை வேண்டும். விடுதலை என்பது முதலில் எம்மில் இருந்தே ஆரம்பமாகின்றது.

அவ்வாறான விடுதலையை பெற்றுக்கொள்ள புதிய அரசியல் தலைமையொன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழல் எழுந்திருப்பதாகத் தெரிகின்றது.

காலம் அத்னைச் செய்ய முனைந்திருக்கும் போது வாக்கு எங்களின் கைகளில் தவழ்கின்றது.

ஒரு புள்ளடி உலகிற்குப் பல செய்திகளைச் சொல்லப் போகின்றது. தமிழர்கள் தமக்கான தீர்வாக எதனை விரும்புகின்றார்கள் என்பதை.... அவர்கள் தமது தலைமைத்துவமாக யாரை தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்பதை..... அத்தலைமைத்துவத்தின் பின்னர் மக்கள் அணிவகுக்கத் தயாராகிவிட்டதை... தம்மை அரசியல் பாதையில் இருந்த அகற்றியவர்களைத் தாம் புறக்கணித்துள்ளோம் என்பதை.....

ஆகவே வாக்களியுங்கள்!

## சத்தியப்பிரமாண நிகழ்வு - ஸாஹிர்

சேனையூர் நிருபர்



பாராளுமன்ற பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் களமிறங்கியுள்ள நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் வேட்பாளர் டாக்டர் ஸாஹிரின் சத்தயப் பிரமாண நிகழ்வு செவ்வாய்க்கிழமை இரவு மூதூரில் இடம்பெற்றது.

மூதூர் நத்வதுல் உலமா அரபுக் கல்லாரி சந்திக் கருகில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் நஜா முஹம்மத், பிரச்சார செயலாளர் சிராஜ் மஷ்ஹூர், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஐ.அஸ்மின் உள்ளிட்ட முன்னணியின் முக்கியஸ்தர்களோடு நூற்றுக் கணக்கான மக்களும் கலந்து கொண்டனர்.

வேட்பாளர் டாக்டர் ஸாஹிரினால் செய்யப்பட்ட சத்தியப் பிரமாணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைப்பில் ஐக்கிய தேசிய கட்சியில் 4ஆம் இலக்க வேட்பாளராக திருகோணமலை மாவட்டத்தில் களமிறங்கியுள்ள கச்சு முஹம்மது ஸாஹிர் ஆகிய நான் இன்ஷா அல்லாஹ் எதிர் வரும் தேர்தலில் வெற்றியீட்டி பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தினை பொறுப்பேற்கின்ற போது பின்வரும் உறுதி மொழிகளின் அடிப்படையில் செயற்படுவேன் என சத்தியப் பிரமாணம் செய்கின்றேன்.

ஆகஸ்ட் 17ஆம் திகதி நடக்கவிருக்கின்ற தேர்தலில் மக்கள் வழங்கும் ஆணைக்கேற்ப பாராளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதியாக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் எனக்கு வழங்கப்படும் பொறுப்புக்களையும் கடமைகளையும் உரிய முறையில் நிறைவேற்றி மக்களிடையிலான சகல செயற்பாடுகளிலும் எவ்வித தன்னலமும் இன்றி நீதியாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்வேன் என இறைவனின் பெயரால் இந்தச் சத்தியப் பிரமாணத்தினை இங்கு கூடிஉள்ள பொதுமக்கள், இம்முன்னணியின் தலைமைத்துவ சபை உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் முன்னால் மேற்கொள்கின்றேன், சொன்ன உறுதிமொழிகளை அல்லாஹ்வை முன்னிறுத்தியவனாக, அல்லாஹ் மீது சத்தியம் செய்தவனாக இச்சபை முன்னாள் வழங்குகின்றேன் எனத் தெரிவித்தார்.

## வள்ளங்களுடன் 18வர் கைது

திருகோணமலை கடற்பரப்பில் சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் 18 பேரை கடந்த வியாழக்கிழமை இரவு கைதுசெய்ததாக துறைமுக காவல்துறையினர் தெரிவித்தனர். ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டுவரும் கிண்ணியா மற்றும் உப்புவெளி பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள், சட்டவிரோதமான மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக கடற்படையினருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து இவர்களுடைய வள்ளங்களை சோதனை செய்த வேளையில் சட்டவிரோதமான மீன்பிடி உபகரணங்களும் மீட்கப்பட்டு காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மூன்று வள்ளங்களுடன் இந்தப் 18 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரியவருகின்றது.

## நிலாவெளியைச் சேர்ந்த ஒருவர் சவுதியில் மரணம்

திருகோணமலை, குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலாவெளி கச்சுனைக்கால் பிரதேசத்தில் வசித்து வந்த நான்கு பிள்ளைகளின் தந்தையொருவர், சவுதி அரோபியா, றியாத் நகரில் உயிரிழந்துள்ளார் என குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர். 54 வயதுடைய வகாப் முகம்மது சுஜப் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சாரதியாகக் கடமையாற்றும் இவர், சுகயீனம் காரணமாகவே உயிரிழந்துள்ளதாகவும் ஜனாஸாவை சவுதி அரோபியாவில் நல்லடக்கம் செயவதற்கு உறவினர்கள் விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் குச்சவெளி கால்துறையினர் மேலும் தெரிவித்தனர்.

## நீர்ப்பிரச்சினையை எதிர்நோக்கும் கண்ணியா வாழ் மக்கள்

தன்யா

கண்ணியா பிரதேச பாடசாலையின் நீர்ப் பிரச்சினை மலைமுரசினால் தீர்த்து வைக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் அவ்வூர் மக்கள் தமது பாவனைக்கான நீரைப் பெற்றுக் கொள்வதிலும் சிரமத்தை எதிர்கொள்வதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

கட்டப்பட்டிருக்கும் கிணறுகள் சுமார் 20 அடி ஆழத்தில் அமைந்துள்ளதாகவும், இக்கிணறுகள் கோடை காலத்தில் விரைவாக வற்றிப் போய்விடுவதாகவும் பின் மழை காலம் வரை நீர்ப் பிரச்சினையை அனுபவித்து வருவதாவும் மலைமுரசிற்கு தெரிவித்துள்ளனர்.

## விடுதலை செய்யப்பட்ட நபர் மீண்டும் கைது

சேனையூர் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஈச்சிலம்பற்று புன்னையடி கிராமத்தில் வசித்து வந்த சுமதிபால சுரேஸ்குமார் (வயது 48) என்ற குடும்பஸ்தர் 03.08.2015 அன்று கொழும்பில் இருந்து வந்த இலங்கை புலனாய்வு துறையினரால் அன்று மாலை 7 மணியளவில் புண்ணையடியில் வைத்து கைதுசெய்யப்பட்டு கொழும்பில் உள்ள 4ம் மாடிக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார் என சுரேஸ்குமாரின் மனைவி சிவந்தா தெரிவித்தார்.

சுரேஸ்குமாரின் மனைவி சிவந்தா இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் எனது கணவர் சுரேஸ்குமார் 2009ம் ஆண்டு ஓமந்தை பகுதியில் வைத்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அவருக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு 2013ம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார். விடுதலை பெற்று வந்ததும் எனது கணவர் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு எமது குடும்பத்தை காப்பாற்றி வந்த நிலையில் மீண்டும் அவர் கைது செய்யப்பட்டிருப்பது எனது குடும்ப வாழ்வை மிகவும் பாதிக்கின்றது என கண்ணீருடன் தெரிவித்தார்.

## வீரகேசரியின் கிளை முகாமையாளர் தாக்கப்பட்டார்

சேனையூர் நிருபர்

வீரகேசரி பத்திரிகையின் திருகோணமலை கிளையின் முகாமையாளர் துரைநாயகம் சஞ்சீவன் (வயது 31) மற்றும் அவரது சகோதரர் துரைநாயகம் சஜீவன் (வயது 24) ,ருவர் மீதும் மதுபோதையில் வந்த பெரும்பான்மையினத்தவர்கள் 09.08.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில் திருகோணமலை விநாயகபுரத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.



தாக்குதலுக்கு உள்ளான ,ருவரும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். ,ச்சம்பவம் ,டம்பெற்ற அப்பகுதிக்கு பொலிசார் அன்று மாலை 6.45 மணியளவிலேயே வருகை தந்தனர். ,ச்சம்பவம் தொடர்பாக திருகோணமலை பொலிசார் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர். ,து போன்ற சம்பவம் ,வர்களுக்கு மூன்றாவது தடவையாக ,டம்பெற்றுள்ளதாக அப்பகுதியில் உள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாயம் வாக்களியுங்கள்

## அது எமது கடமையும் உரிமையும் கூட

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிப்பு வீதத்தினை அதிகரிக்க செய்யும் வகையிலான விழிப்புணர்வு நடவடிக்கையொன்றை கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கம் மேற்கொண்டுவருகின்றது. மக்களே வாக்களிப்பது உங்கள் கடமை என்னும் தலைப்பில் துண்டுப்பிரசுரங்களை வழங்கி இந்த போராட்டத்தினை முன்னெடுத்துவருகின்றனர். இதன்நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மாலை மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலய முன்றிலில் நடைபெற்றது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளரும் கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினருமான கே.சங்கர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதன்போது வாக்களிப்பினை வலியுறுத்தி துண்டுப்பிரசுரங்களும் வழங்கிவைக்கப்பட்டன. 2010ஆம் ஆண்டு 43வீதமானோர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாராளுமன்ற தேர்தலில் வாக்களிக்கவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

தேர்தலில் வாக்களிப்பது வாக்காளர்களின் உரிமையென்பதுடன் அவர்களின் கடமையெனவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிக்க தகுதிபெற்ற அனைவரும் வாக்களிக்கவேண்டும் எனவும் தெரிவித்தனர்.



# மலைமுரசு MALAIMURASU மட்டக்களப்புச் செய்திகள்

## பள்ளிவாயல் தலைவரை தாக்க முயற்சி தடுத்த இருவருக்கும் பலத்த அடி

வாழைச்சேனை பிறைந்துரைச்சேனையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளதாக வாழைச்சேனை காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். நூரியா முஹைதீன் ஜும்ஆப் பள்ளிவாயலில் கடந்த வியாழக்கிழமை ஜும்ஆத் தொழுகையின் பின் பள்ளிவாயல் தலைவரைத் தாக்க வந்த குழுவினரின் தாக்குதலில், இரு இளைஞர்கள் தாக்கப்பட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரம் தொடர்பாக பள்ளிவாயல் தலைவரிடம் விளக்கம் கேட்க வந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள், பள்ளிவாயல் தலைவரைத் தாக்க முயன்ற போதே தகராறு ஏற்பட்டதாக தெரிய வருகின்றது

## வீரமுனை படுகொலை தினம் அனுஷ்டிப்பு

அம்பாறை மாவட்டத்தின் வீரமுனையில் 1990-08-12ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டவர்களின் 25ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, ஆலயத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

புதன்கிழமை மாலை இடம்பெற்ற இந் நிகழ்வில் ஆலய பரிபாலன சபையினர், உயிர் நீத்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதனை முன்னிட்டு இன்று வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தின் விசேட பூஜை நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் பெருமளவான உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கஞ்சா விற்றவர் கைது

**மட்டக்களப்பு, ஏறாவூர்** பிரிவுக்குட்பட்ட மிச் நகர் கிராமத்திலுள்ள வீடொன்றில் கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த வியாழக்கிழமை காலை 35 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரை கைதுசெய்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர். இந்த சந்தேக நபர் கஞ்சா விற்பனை செய்வதாக பொதுமக்களிடமிருந்து தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து சந்தேக நபரை கைதுசெய்ததுடன், அவரிடமிருந்து 6,130 மில்லிகிராம் கஞ்சாவை கைப்பற்றியதாகவும் மேலும் கூறினர்.

## கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது:

கடந்த மூன்று நாட்களாக மிகவும் அமைதியாக தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனை காண முடிகின்றதென கபே அமைப்பு தெரிவித்துள்ளது. தேர்தல் சட்டங்களை பாதுகாப்பதற்கு தேர்தல் திணைக்களம் போன்று காவல்துறை திணைக்களமும் அனைத்து ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா, மன்னார், புத்தளம் பிரதேசங்களிலும் ஹம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் விசேட அதிரடிப் படை மற்றும் காவல்துறை படைகளை ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நேற்று நள்ளிரவு 12 மணியின் பின்னர் தேர்தல் திணைக்களம் மற்றும் காவல்துறை திணைக்களத்துடன் இணைந்து செயற்பட கபே அமைப்பு எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கையொப்ப வேட்டை



தகவல் அறியும் உரிமையை சட்டமாக உறுதிப்படுத்தல் மற்றும் காணாமல்போன, கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் கடமையை நிறைவேற்றுவோம் எனும் தொனிப்பொருளில் ஊடக சுதந்திரத்துக்கான செயற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் கையொப்பம் சேகரிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை (14) மட்டக்களப்பில் நடைபெற்றது. இதன்போது "ஊடக சுதந்திரத்தை பாதுகாக்கும் நாடாளுமன்றத்தை தெரிவு செய்வோம்" எனும் தலைப்பில் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இதில், ஊடக சுதந்திரத்துக்கான செயற்பாட்டுக் குழுவின் கிழக்கு ஊடக வலையமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் இறுதியில், ஊடகவியலாளர்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## மாமாங்கேஸ்வரர் தீர்த்தோற்சவம்

கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் மாமாங்கேஸ்வரர் தீர்த்தக்கேணியில் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் புடைசூழ வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இராமாயண காலத்திற்கு முற்பட்ட ஆலயமாகவுள்ள மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயமானது இராம பிரான், இராவணன் ஆகியோர் வழிபட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான வருடாந்த மகோற்சவத்தில் தினமும் தம்பபூஜை வசந்த மண்டப பூஜை சுவாமி உள்வீதி மற்றும் வெளிவீதியுலா என்பன நடைபெற்றுவருகின்றன.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றை ஒருங்கே கொண்ட மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்ஸவத்தின் தேர் உற்சவம் கடந்த வியாழக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது.



## யானை தாக்கி ஒருவர் பலி

அம்பாறை பொலொன்னறுவை மாவட்டங்களின் எல்லையிலுள்ள மாதுஓயாப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணியளவில் காட்டுயானை தாக்கியதில் விவசாயி ஒருவர் பலியானதாக பதியதலாவ காவல்துறையினர் தெரிவித்தனர்.

கட்டுப்பஹர வீதி, கெஹெல் உல்ல, பதியதலாவையைச் சேர்ந்த ஆர்.எம்.கே. பண்டார (வயது 60) எனும் விவசாயியே காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி ஸ்தலத்திலேயே மரணித்தவராகும்.

இவர் தனது வழமையான விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது காட்டுக்குள் இருந்து வெளிக்கிளம்பிய கொம்பன் யானை இவரைத் தாக்கி ஸ்தலத்திலேயே கொன்றுள்ளது.

## "நாடாளுமன்றத்தில் ஹிஸ்புல்லா" நூல் வெளியீடு

நாடாளுமன்றத்தில் சட்டம் பற்றி அறிவூட்டுவதற்கான நடவடிக்கை எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்று முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார். காத்தான்குடியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற "நாடாளுமன்றத்தில் ஹிஸ்புல்லா" எனும் நூல் வெளியீட்டு வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், வெறுமனே வீதிகள், கட்டடங்கள், வீடுகள் அமைப்பதல்லாமல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு வருடத்துக்கு சட்டம் பற்றி அறிவூட்டல் செய்யும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது. முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது 20 பேர் இருக்கின்றனர். இந்த எண்ணிக்கை குறையாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்றார்.

## நியாயமான தேர்தல் இடம்பெறும்

கிழக்கு மாகாணத்தில் சுதந்திர தேர்தலுக்கான ஆசிய வலையப்பின் சர்வதேச கண்காணிப்பாளர்கள் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டனர். பணிகளை மேற்கொண்ட போது இலங்கையில் நீதியான நேர்மையான தேர்தல் நடைபெறுவதற்கான சூழல் உள்ளதாக தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவிடம் கையேந்தி நிற்கின்றாராம் முன்னாள் சனாதிபதி

வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஐதேக மற்றும் ஐமசுமு இடையேயான நேருக்கு நேர் மோதலில் முன்னணிக்கு தேவையான பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள ஐ.தே.க வில் தெரிவாகும் உறுப்பினர்களை பணத்திற்கு கொள்வனவு செய்ய மஹிந்த ராஜபக்ச தனது சிரேஸ்ட இராஜதந்திரிகள் ஊடாக சீன அரசாங்கத்திடம் பணம் கேட்டுள்ளார்.

ஒரு உறுப்பினருக்கு 200 மில்லியன் என்று கணக்கிட்டுள்ள மஹிந்த, அதிக உறுப்பினர்கள் எண்ணிக்கையை காட்டி அதற்கான பணத்தைப் பெற்றுத் தருமாறு சீனாவிடம் கேட்டுள்ளார்.

ஆனால் சிரேஸ்ட உறுப்பினர்களுக்கு குறைந்தது 500 மில்லியன் கொடுக்க வேண்டும் என மஹிந்த ராஜபக்ச தரப்பு சீனாவிடம் கூறியுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தில் 100 நாட்களில் சீனாவின் போர்ட் சிட்டி உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டதால் பில்லியன் கணக்கில் நட்டம் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மஹிந்த ராஜபக்சவின் கோரிக்கைக்கு . சீன அரசாங்கத்திடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மலைமுரசு
MALAIMURASU
தேசிய செய்திகள்

## வாக்காளர்களுக்கு பாதுகாப்பு அவசியம்

வாக்காளர்களின் பாதுகாப்பை இலங்கை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

8ஆவது நாடாளுமன்றத் தேர்தல் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. பொதுத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு நாட்களே உள்ள நிலையில் இதுவரை எண்ணிலடங்காத வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியிருப்பதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இவ்வாறான வன்முறைகளில் இருந்து வாக்காளர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய வலயத்திற்கான பணிப்பாளர் பிரேட் அடம்ஸ் வலியுறுத்தியுள்ளார். வாக்குச் சாவடிகளில் வாக்காளர்கள் செல்வதற்கு தேவையான பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கு அதிகாரிகள் முனைப்புகாட்ட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## விமான நிலையத்தில் கைது

5 கிலோ 500 கிராம் கொக்கேனை கதைப்புத்தகங்களுக்குள் வைத்து கடத்திய ஐரோப்பாவைச்சேர்ந்த 39 வயதான பெண்ணொருவரை கைதுசெய்துள்ளதாக விமான நிலைய சுங்கப்பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இந்த கொக்கேனின் பெறுமதி சுமார் எட்டரை கோடி 'ரூபாய் என்றும் சந்தேகநபரான அந்தப்பெண் பேரு இராஜியத்திலிருந்து வந்துள்ளதாகவும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்தே அந்தப்பெண்ணை கைதுசெய்துள்ளதாகவும் சுங்கப்பிரிவினர் அறிவித்துள்ளனர்.

## ஒபாமாவே வந்தாலும் ரணிலை காக்க முடியாது!!

**- விமல் -**

பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டொனி பிளேயர் வந்திருக்கின்றார். விடுமுறையை கழிப்பதற்காக வந்திருந்தால், நுவரெலியாவுக்கு போகலாம், கடற்கரைக்கு போகலாம் ஆனால், யாழ்ப்பாணத்துக்கு ஏன் போகவேண்டும்'' என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, குருநாகலில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இறுதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கேள்வி எழுப்பினார். "அவர், யாழ்ப்பாணத்துக்கு சென்றிருக்கின்றார். புதைக்கப்பட்டுள்ள புலிகளை உசுப்புவதற்கே அவர் யாழ்ப்பாணத்துக்கு சென்றுள்ளார். டொனி பிளேயர் அல்ல, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வந்தாலும் ரணிலை காப்பாற்ற முடியாது'' என்று விமல் மேலும் கூறினார்.

## கள்ள வாக்கு போடுவோருக்கு எதிராக விசேட நடவடிக்கை

**கள்ள வாக்கு** போடுவோரை கைது செய்ய விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

கள்ள வாக்கு போட முயற்சிக்கும் தரப்பினரை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த, கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எவரேனும் கள்ளமாக வாக்குகளை பதிவு செய்ய முயற்சித்தால் அவரை கைது செய்து, நீதிமன்றின் ஊடாக தடுப்புக் காவலில் வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தலின் போது எந்தவொரு சட்ட விரோத நடவடிக்கையையும் மேற்கொள்ள இடமளிக்கப்பட மாட்டாது.

ஆள் அடையாளத்தை உறுதி செய்யும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்கள் அல்லது தற்காலிக தேர்தல் அடையாள அட்டைகளை எடுத்துக் கொண்டு வாக்குச் சாவடிகளுக்கு செல்ல வேண்டும்.

அசம்பாவிதங்கள் ஏற்படக் கூடும் என சந்தேகிக்கப்படும் பகுதிகளில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.



## "இந்நாடு சிங்ஹள தேசம்"

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 105 க்கும் மேற்பட்ட ஆசனங்களைப் பெற்று மைத்திரி அணி ஆதரவாளர்களுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் கூடிய ஆட்சியை 18ம் திகதி அமைக்கும். இது உறுதியாகும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். மாவட்டத்திலுள்ள தனது இல்லத்தில் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்தும் அவர், நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஐ.தே.க. 105 ஆசனங்களுக்கு மேல் பெற்று வெற்றி பெறுமென கருத்துக்கணிப்புக்களும் ஆய்வுகளும் கூறுகின்றன. நானும் அதை ஏற்றுக் கொள்கிறேன். ஐ.ம.சு. கூட்டணியிலுள்ள மைத்திரியணியினர் ஐ.தே.க. வுடன் இணைந்து 18ம் திகதி ஆட்சி அமைப்பார்கள். அந்த ஆட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை பெற தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு நல்க காத்திருக்கிறது.

வரையப்படவுள்ள அரசியல் யாப்பில் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 65 வருடகால தமிழ் மக்களின் போராட்டத்துக்கு இதன் மூலம் உடனடி தீர்வு காணப்படுமென்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

## மாணவி தற்கொலை - அனுமதிப்பத்திரம் வழங்க மறுப்பினால்

யாழ் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் பெயரினை துஸ்பிரயோகம் செய்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அப்பட்டமான போக்கிலித் தனத்தை வெளிப்படுத்தி நிற்பதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

தற்போதைய சூழல் தொடர்பினில் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையினில் தாயகம்.தேசியம்.சுயநிர்ணயமெனும் கோசங்களை வலியுறுத்தி 'பொங்குதமிழ்' பிரகடனம் ஊடாக தமிழ் மக்களின் அங்கிகாரத்திற்காக யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நீண்டதொரு பாதையை கடந்தே வந்துள்ளது.


நடந்தது இன அழிப்பு என்பதில் மாற்றுக்கருத்தேயில்லையென்பதுடன். சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி அண்மையில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனைத்து தரப்புக்களையும் இணைத்து நடத்தியபோராட்டம் மிகப் பெரும் அவதானிப்பை பெற்றிருந்தது.

இத்தகைய சூழலில் தமிழ்த்தேசிய அரசியலில் மாற்றமொன்றை வேண்டி நிற்கும் சூழலில் தமது வங்குரோத்து அரசியல் பொய்த்துப்போகும் அச்சத்தினில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஒரு சில மாணவர்களை பயன்படுத்தி ஒட்டுமொத்த மாணவ சமூகத்தையும் விலைபேசி விற்க துணிந்துள்ளதை அம்பலப்படுத்தவேண்டியுள்ளது.

ஒரு புறம் போதைப்பொருள் பயன்பாட்டிற்கான கடுமையான பிரச்சாரங்களை மேற்கொள்வதாக கூறிக்கொண்டு இன்னொருபுறம் சாராயத்திற்காகவும். ஒரு சில ஆயிரம் 'ரூபாய்களிற்காகவும் பல் கலைக்கழக மாணவர்களில் சிலரை விலைபேசுவது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாததொன்று.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பெயரினை பயன்படுத்தி வெளியிடப்பட்ட அறிக்கையினை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். இதனை வெளியிட்டவர்களையும், பின்னணியிலிருந்தவர்களையும் விரைவில் அம்பலப்படுத்துவோம்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
UNIVERSITY STUDENTS' UNION
UNIVERSITY OF JAFFNA

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் பங்காக இருக்கும் ஆசிரியர் சங்கம் மற்றும் ஊழியர் சங்கம் என்பவை இத்தேர்தல் தொடர்பினில் விடுத்துள்ள உறுதி மிக்க முடிவை வரவேற்பதுடன் அதுவே எமது தரப்பினது நிலைப்பாடு என்பதை ஆணித்தரமாக அறியத் தருகின்றோம் என்றுள்ளது.

## உதவுக!!

கிளிநொச்சி கட்டைக்காடு - முள்ளியான் பகுதியில் கடந்த 03 ஆம் திகதி காணாமல் போன 17 வயது சிறுமியை மீட்பதற்கு பளை காவல்துறையினர் பொதுமக்களின் உதவியை கோரியுள்ளனர். தனியார் வகுப்பிற்கு சென்று வருவதாகக் கூறி சென்ற 17 வயதான எஸ்.சுமங்கலா என்ற சிறுமியே இவ்வாறு காணாமல்போயுள்ளதாக பெற்றோர் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். 4 அடி 3 அங்குல உயரமும் மெல்லிய உடல் தோற்றமும் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## சீனாவில் பாரிய வெடிப்பு

சீனாவின் வட துறைமுக நகரான தியன்ஜின்னில் கடந்த புதன்கிழமை நள்ளிரவை அண்மித்த வேளையில் இடம்பெற்ற இரு பிரதான வெடிப்புச் சம்பவங்களில் சிக்கி குறைந்தது 44 பேர் பலியானதுடன் 500 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். பலியானவர்களில் 1.2 தீயணைப்புப் படைவீரர்களும் உள்ளடங்குகின்றனர். காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அந்த நகரின் துறைமுகப் பிரதேசத்தில் அபாயகரமான இரசாயனப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த களஞ்சியசாலையிலேயெ இந்த இரு வெடிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

இந்த வெடிப்புகள் காரணமாக ஏற்பட்ட பாரிய தீயை நெடுந் தூரத்திற்கு அவதானிக்கக் கூடியதாக இருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வீட்டிற்குள் போதைச் செடி



பேசல் மண்டலத்தில் உள்ள முன்னாள் காவல்துறை அதிகாரி ஒருவர் தன்னுடைய வீட்டிற்குள் சிறிய அளவில் தோட்டம் அமைத்து கன்னாபீஸ் மற்றும் மரிஜுனா எனப்படும் போதை மருந்து செடிகளை வளர்த்து வந்துள்ளார்.

இவரது இந்த சட்ட விரோத செயலுக்கு அவரது மனைவியும் துணையாக இருந்துள்ளார். இது மட்டுமில்லாமல், காவல் துறையில் இருந்து ஓய்வு பெற்ற அவரது நண்பரான மற்றொரு நபரும் இந்த போதை மருந்து செடிகளை வளர்ப்பதற்கு உதவியுள்ளார்.

இவர்களது செயல் அண்மையில் வெளிச்சத்திற்கு வந்ததை தொடர்ந்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 40 நிமிடத்திற்கொரு முறை பெண் கற்பழிப்பு – பிரான்ஸில்



**பிரான்ஸ்** நாட்டில் கற்பழிப்பிற்கு உள்ளாகும் பெண்களின் எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகளில் 18 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக அந்நாட்டில் வெளியாகும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில், கற்பழிப்பிற்கு உள்ளாகிய பெண்களின் எண்ணிக்கை கடந்த 2010ம் ஆண்டில் 10,762 என்ற எண்ணிக்கையில் இருந்ததாகவும், இது 2014ம் ஆண்டில் 12,768 என்ற எண்ணிக்கையில் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது. இதில் குழந்தைகள் பலாத்கார குற்றச்சாட்டுகளும் சுமார் 20 சதவிகிதம் வரை அதிகரித்துள்ளது. இந்த கற்பழிப்பு எண்ணிக்கையை துல்லியமாக கணக்கிட்டால், நாடு முழுவதும் ஒரு நாளில் 33 பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள். அதாவது, 40 நிமிடத்திற்கு ஒருமுறை ஒரு பெண் கற்பழிக்கப்படுகிறார்.

## சுதந்திர தினத்தை இலக்கு வைக்கும் பாக்கிஸ்தான்

இந்தியாவின் சுதந்திர தினம் நாளைய தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில், அதை இலக்கு வைப்பதற்கான முயற்சிகளில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளதாக, இந்தியத் தரப்புக் குற்றஞ்-சாட்டியுள்ளது.

ஜம்மு, ராஜௌரி, பூஞ்ச் மாவட்டங்களில், பொதுமக்கள் குடியிருக்கும் பகுதிகளை நோக்கி பாகிஸ்தான் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது.

தாக்குதல்களைத் தொடர்ந்து, இந்தியத் தரப்பு பதில் தாக்குதல்களில் ஈடுபட்டதை உறுதிப்படுத்திய பாதுகாப்புப் பேச்சாளர் லெப்டினன்ட் கேர்ணல் மனிஷ் மெக்தா, தாக்குதல்களில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் தெரிவித்தார்.

சுதந்திர தினத்தில் ஆயுததாரிகள் தாக்குதல்களை நடாத்துவதற்கு உதவும் முகமாகவே, இத்தாக்குதல்களை பாகிஸ்தான் நடாத்துவதாக, இந்தியத் தரப்புக் குற்றஞ்சாட்டுகிறது.



## மகி மீதான பாவனை தடை நீக்கம்

நாடாளாவிய ரீதியில் மகி நூடில்ஸ்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைக்கெதிராக மகி நூடில்ஸ்களைத் தயாரிக்கும் நெஸ்லே நிறுவனம் தாக்கல் செய்த வழக்கில், அந்நிறுவனத்துக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நெஸ்லேயின் கோரிக்கையை மும்பை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்ட போதிலும், மகி நூடில்ஸ்கள் திரும்பவும் சந்தையை எட்டுவதற்கு முன்னர் புதிய சோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அறிவித்துள்ளது.

மகி நூடில்ஸ்களில் பாதுகாப்பற்ற அளவிலான ஈயம் காணப்படுவதாக இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட அறிக்கையை அடுத்து, நாடாளாவிய ரீதியில், மகி நூடில்ஸ்கள் வாபஸ் பெறப்பட்டிருந்தன.

மகி நூடில்ஸ்களை மீண்டும் கொண்டுவருவதே எண்ணம் எனக் குறிப்பிட்டுள்ள நெஸ்லேவின் பேச்சாளர்; தங்களுடைய சொந்தப் பரிசோதனைகளில், அந் நூடில்ஸ் பாதுகாப்பானதாகக் காணப்படுவதாக அறிவித்துள்ளார்.




## கர்ப்பநாடகமாடி சிறையிலிருந்து தப்பிக்க முயற்சி

சிறை தண்டனையில் இருந்து தப்பிக்க கடந்த பத்து ஆண்டுகளில் 14 முறை கர்ப்பம் அடைந்ததாக காவல்துறையினரை ஏமாற்றி வந்துள்ளார் ஒரு பெண்.

சீனாவில் உள்ள அந்தப் பெண்ணுக்கு ஊழல் வழக்கில் கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனையில் இருந்து தப்பிக்க, தான் கர்ப்பமாக இருப்பதாக அப்போதைய நீதிபதியிடம் அந்தப் பெண் தெரிவித்தார். அந்நாட்டு சட்டங்களின்படி, கர்ப்பிணிப் பெண்களை சிறையில் அடைப்பது முறையல்லை என்பதால் பிரசவத்துக்கு பின்னர் அவரை கைது செய்ய உத்தரவிடப்பட்டது. உடனடியாக ஒரு மருத்துவரை அணுகி, கருக்கலைப்பு செய்து கொண்டார். பின்னர், மீண்டும் கர்ப்பம் ஆனார். சில மாதங்களுக்கு பின்னர், அவரை தேடிவந்த காவல்துறையினர் உப்பிய வயிற்றுடன் இருந்த அந்தப் பெண்ணை கைது செய்யாமல் திரும்பிச் சென்றனர்.

இதனிடையே நீதிமன்றத்தில் முறையிட்டு கைதாவதில் இருந்து அவர் மீண்டும் விலக்கு பெற்றார். இப்படியே கடந்த 10 ஆண்டுகளாக கர்ப்பிணியாவதும் கருச்சிதைவு செய்துகொள்வதும் என காவல்துறையினரின் கண்ணில் மண்ணைத் தூவி வந்துள்ளார்.

இந்த தகவல் வெளியானதும் சுதாரித்துக்கொண்ட காவல்துறையினர், நீதித்துறை மற்றும் மருத்துவத்துறையின் உதவியுடன் இதுவரை ஏமாற்றி வந்த அந்தப் பெண்ணை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## வெளிநாட்டவர்கள் வீடுகள் வாங்க இயலாது

**கனடா**வில் வெளிநாட்டவர்கள் சொந்தமாக வீடுகளை கொள்வனவு செய்வதை கட்டுப்படுத்த வேண்டியுள்ளதாக அந்த நாட்டுப் பிரதமர் ஸ்ரிபன் ஹாப்பர் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் வெளிநாட்டவர்கள் சொந்தமாக வீடுகளை கொள்வனவு செய்வது தொடர்பில் வரப்புகள் கொண்டுவரப்படும் சாத்தியம் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

டொரண்டோ மற்றும் வன்கூவரில் நில புல செலவுகள் அதிகரிப்பதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களே காரணம் என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளியாகிய நெஞ்சை உருக்கும் வீடியோ காட்சி

மரணதண்டனை நிறைவேற்றுவதை வெளிப்படுத்தும் புதிய வீடியோ காட்சியொன்று வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி வீடியோ காட்சியானது ஆப்கானிஸ்தானில் படமாக்கப்பட்டுள்ளது. இந்த மரணதண்டனை நிறைவேற்றத்துக்கு முன்னர் குறிப்பிட்ட மலைப் பிராந்திய பகுதிக்கு குதிரைகளில் வரும் தீவிரவாதிகள், தரையில் வரிசையாக குழிகளைத் தோண்டி அவற்றுக்குள் வெடிபொருட்களை புதைத்து அவற்றை மண்ணால் மூடுகின்றனர்.

தொடர்ந்து அந்தப் பிராந்தியத்துக்கு தீவிரவாதி-களால் கண்கள் கட்டப்பட்ட நிலையில் இழுத்து வரப்படும் கைதிகள் குண்டுகள் புதைத்து வைக்கப்பட்டிருந்த தரைப் பகுதியின் மீது மண்டியிட்டு அமர்ந்திருக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். கைதிகள் தொடர்ந்து மண்டியிட்டு அமர்ந்திருக்க அங்கிருந்து நகரும் தீவிரவாதிகள் தூர இருந்து இயக்கும் முறைமை மூலம் நிலத்தின் கீழ் புதைக்கப்பட்டிருந்த குண்டுகளை வெடிக்க வைத்து கைதிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றுகின்றனர். இதன் போது கைதிகள் உடல் துண்டு துண்டாக சிதறி உயிரிழக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# வீணையடி நீ எனக்கு...

28



– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

–இது
பயணங்கள் முடித்த படகா
இல்லை
இதுவரை யாரும் பயணிக்காத படகா?
யார் சென்றது இந்தப் படகில்
பத்திரமாய்
இடம் சேர்ந்த திருப்தியில்
மௌனத் தவம் கொள்கிறதோ...
யாருக்காகவோவான காத்திருத்தலோ?
இந்தப் படகும்
நானும்
ஒன்று
யாரும் கவனிக்காத படகும்
நீ – கவனிக்காத நானும்–

– பிரபஞ்சப் பிரியன் –



மோட்டார் சைக்கிள் ஓட்டம் போன்ற சாகச விளையாட்டுகளைக் காட்டுபவர்களும், வித்தைகள் செய்பவர்களுமென வெளியூர் வியாபாரிகளின் வருகை விழாவின் பிரம்மாண்டத்தை பெரிதுபடுத்தி காட்டியது.

மாலை ஏழு மணி இருக்கும் நாதஸ்வர மேளதாளங்களுடன் கோயிலுக்குள்ளிருந்து சுவாமி வெளியே வர பக்தர் கூட்டம் தலை மேல் கரங்களை உயர்த்தி. "அரோகரா" என்ற நாமத்துடன் வணங்கத் தொடங்கினர். திருவிழாக்காரர்களின் உதவியுடன் வெளியே தூக்கிவரப்பட்ட சாமி கோயிலைச் சுற்றி வலம் வந்து, மீண்டும் கோயிலுக்குள் போக சில மணி நேரங்கள் எடுக்கும் என்பதால் அந்த சாமி தரிசனத்தைக் காணவும் வணங்கி அருள் பெறவும் கோயிலுக்கு முன்னே இருந்த மணல் வெளியில் பக்தர் கூட்டம் அலை மோதத் தொடங்கியது. கோயிலுக்கு அருகே இருக்கும் பிரசித்தி பெற்ற தீர்த்தக்குளம் முன்னைய நாளே துப்பரவு செய்யப்பட்டிருந்தது. நாளை தீர்த்தத்திற்கு ஆயத்தமாக அது சுத்தம் செய்யப் பட்டிருந்ததன் காரணமாக சில பிரபலமான இந்துப் பாடசாலையின் சாரணர் மாணவர்கள் தீர்த்த குளத்தைச் சுற்றி காவலுக்கு விடப்பட்டிருந்தனர்.

திருவிழாவுக்கு வரும் பக்தர்கள் தீர்த்தக் குளத்தை அசுத்தம் செய்து விட கூடாது என்ற முன் ஜாக்கிரதையுடன் பக்தர்களை தீர்த்தப் படிக்கட்டிலும் கூட அமர விடாமல் அவர்கள் காவலுக்கு நின்றனர்.

சாமி ஊர்வலம் ஒரு பக்கம் சென்றாலும் வியாபாரத்துக்கெனவே வந்த வியாபாரிகளின் ஒலி பெருக்கிகளின் அலறலும் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் வியாபாரிகளினதும், பொது மக்களின் சத்தமுமாக சேர்ந்து அங்கு ஒரே கூச்சலும் கும்மாளமுமாகவே இருந்தது. சனம் வருவதும் போவதுமாக இருந்தாலும் அந்த கோயில் பகுதி முழுவதும் ஒரே சனத்திரள் நிறைந்து காணப்பட்டது. பெண்கள் கூட்டத்தை கண்டவுடன் அவர்களுக்கு முன் வந்து முட்டி மோத என ஆயத்தப்படுத்தி வந்திருக்கும் சில இளைஞர் கூட்டம் அந்த பகுதியில் போவதும் வருவதுமாக இருந்தது. முன்னைய திருவிழாக்களில் இத்தகைய அனுபவங்களில் பாடம் படித்ததன் காரணமாகவோ என்னவோ பெண்கள் கூட்டம், இளைஞர்கள் வருவதைக் கண்டதும் திரும்பி நின்று தம்மை பாதுகாக்க முயன்று கொண்டிருந்தனர். தமது அலுவலகங்களை இடையிடையே திறந்து வைத்திருந்த தனியார் துறை, அரச துறை வங்கிகளும் தமக்கு புதிய வாடிக்கையாளர்களை சேர்த்து கொள்ளும் முயற்சியில் தமது விளம்பரங்களை ஒலி பெருக்கி மூலமும், துண்டு பிரசுரங்கள் மூலமும் பிரச்சாரப் படுத்தி கொண்டிருந்தனர்.

மணல் பிரதேசத்திற்கு வர முடியா விட்டாலும் வீதி ஓரங்களில் நிற்கும் ஐஸ் கிறீம் வான்களில் கேட்கும் சினிமாப் பாடல்கள் கலகலப்பை ஊட்டியது. ஒரு பக்கத்தில் சாகச விளையாட்டுகளை ரசிக்கவென அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள நுழைவுச் சீட்டுக்கள் பெறும் பகுதியில் பார்வையாளர்கள் நிறைந்திருந்தனர். ஒட்டுமொத்தத்தில் மாமாங்க ஆலயப் பகுதியும் அதனை சூழவுள்ள பகுதியும் ஒரு கலகலப்பான பிரதேசமாக காணப்பட்டது.

வெளிவாசலுக்கு வந்த சாமி சப்பரம் கோயிலைச் சுற்றிய படியே மீண்டும் வாசலுக்கு வந்தது. சாமி ஊர்வலத்தில் கலந்து கொண்டு பின்னே சென்றிருந்த பக்தர் கூட்டமும் கரங்களை உயர்த்தி "அரோகரா" என்று சத்தம் போட்ட படியே தமது பிரார்த்தனையில் ஈடுபட்டவாறு பின்னே வந்தது. ஆலய ஒலி பெருக்கியில் காவடிச்சிந்து பாடல் ஒலிபரப்பாகி கொண்டிருந்தது.

கோயிலுக்கு முன்னே இருந்த ஆலமரங்களுக்கு கீழேயும் நின்ற பக்தர் கூட்டம் தம்மையும் பிரார்த்தனையில் ஈடுபடுத்திக் கொண்டனர்.

நாளை தீர்த்தத் திருவிழாவில் கலந்து கொண்டு தீர்த்தமாடவென தூர பகுதியில் இருந்து வந்திருந்த பக்தர்களும் இரவுப்பொழுதை கழிப்பதற்காக அந்த மரங்களுக்குக் கீழேயே அடைக்கலம் தேடி இருந்தனர்.

கோயிலுக்கு எதிரே இருந்த மணல் திடலில் ஒரு மேடை கட்டப்பட்டிருந்தது. திருவிழா காலங்களில் ஒவ்வொரு நாள் திருவிழாவையும் ஒவ்வொரு பகுதி மக்கள் பொறுப்பேற்று செய்வார்கள். சில திருவிழாக்களில் பூசை முடிந்த பின்னர் அந்த மேடையில் இசைக் கச்சேரி, பட்டிமன்றம், நாடகம், நாட்டுக்கூத்து எனப் பல நிகழ்சிகள் அரங்கேறும். திருவிழாக்களை பார்ப்பவர்களின் வசதிக்கேற்றவாறு இந்த நிகழ்சிகள் அமைந்திருக்கும். சில வேளைகளில் வெளியூர்களில் இருந்து கூட கலைஞர்கள் வந்து கலந்துகொண்டுள்ளார்கள்.

அந்த மேடையின் அருகேயிருந்த ஒரு ஆலமரத்தில் கீழே ரதன், நிவேதா, சண்முகம் மாமா, கமலா அன்ரி, அவர்களது மகள் விமலா ஆகியோர் நின்றிருந்தனர். அனைவரும் தமது கரங்களை கூப்பி மீண்டும் வாசலுக்கு வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுக்கும் சாமியின் மீதே கண்களை பதித்திருந்தனர்.

நிவேதா கரம் கூப்பி சாமியை வேண்டிக் கொண்டாலும் அவளது மனசு மட்டும் என்னவோ அன்றைய தினத்தின் சம்பவங்களையே அசை போட்டிருந்தது. அதனை நினைக்க நினைக்க அவளுக்கு ஒருபுறம் வேதனையாக இருந்தாலும் ஒருபுறம் நிம்மதி கலந்த ஒருவித ஆறுதலாகவும் இருந்தது.

தனது மன ஆறுதலுக்காக 'தனக்கு ஒரு மாற்றம் தேவை. அதற்காக மாமாங்கத் திருவிழாவுக்காக டவுனில் உள்ள சண்முகம் மாமா வீட்டுக்கு போவம்' என ரதன் சொன்னதும் அவளுக்கும் அது நல்லதாகவே பட்டது. தனக்கு ஏற்பட்ட அந்த அசம்பாவிதத்தை மறக்க அவளுக்கும் ஒரு மாற்றம் தேவைப்பட்டது.

இரண்டு மூன்று நாட்கள் புதிய ஒரு இடத்தில் நிற்பதன் மூலம் மாற்றம் ஏற்படாவிட்டாலும் அந்த சிந்தனைகளில் இருந்தாவது விடுபடலாம் என அவள் நினைத்தாள். நேற்றைய தினம் புறப்பட்டு வந்த ரதனையும், நிவேதாவையும் கமலா மாமி அன்புடன் வரவேற்றாள்.

ராமநாதன் மாமாவின் மறைவைத் தொடர்ந்து நிவேதாவும், மாமியும் தனித்துப் போனது அவர்களுக்கும் வேதனையாகவே இருந்தது. நிவேதாவின் மாமியை சண்முகம் எத்தனையோ முறை தனது வீட்டில் வந்து தங்கும் படி கேட்டும் அவர் மறுத்தே வந்தார்.

அந்த இரண்டரை ஆண்டு காலப்பகுதியில் ரதனும் நிவேதாவும் பலமுறை அவர்கள் வீட்டிற்கு வந்து போனாலும் அன்றுதான் இரவு தங்குவது போன்று மாமாங்க திருவிழாவுக்கு வந்திருந்தனர்.

நிவேதாவும் ரதனும் சண்முகம் மாமா வீட்டிற்கு வரும் போது கமலா மாமி வீட்டில் நிற்கவில்லை. விமலாவே அப்போது வீட்டில் இருந்தார். அவர்கள் இருவரையும் கண்டதும் அளவற்ற மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்றாள். ஏற்கனவே பல முறை அங்கு வந்திருக்கும் போது இருந்ததை விட அன்று அவள் மிக நெருக்கமாகவே பழகினாள். அவளது பேச்சில் இருந்து அவள் அவர்களது வருகையை எதிர்பார்த்திருந்தது தெரிந்தது.

மாலை ஆறு மணி அளவிலேயே சண்முகம் மாமாவும் கமலா மாமியும் வந்தனர். அவர்களும் ஏற்கனவே மாமாங்கத் திருவிழாவுக்கு போவதற்குரிய ஒழுங்கிலேயே இருந்தனர்.

திருவிழாவின் இறுதி நாட்களாகையால் மக்கள் திருவிழாவுக்கு போவதும் வருவதுமாக பார்வீதி களைகட்டி-யிருந்தது. வீதியால் திருவிழா பார்க்க செல்லும் இளைஞர்களின் கூத்தும் கும்மாளமும் அவர்களது வீட்டிற்கும் கேட்டது.

"எல்லோரும் வெளிக்கிட்டா நேரத்தோட போயிட்டு வரலாம்." சண்முகம் மாமா சொல்லவும் திருவிழாவுக்கென புறப்பட அனைவரும் ஆயத்தமாகினர்.

தனது உடுப்பு பேக்கை விமலாவின் ரூமுக்குள் வைத்த நிவேதா குளிப்பதற்கு ஆயத்தமாக தனது டவளையும் மற்றும் உடுப்பையும் எடுத்துக் கொண்டாள்

அதற்குள் விமலா "நிவேதக்கா நான் முகம் அலம்பி விட்டு வந்திடுவேன்" எனச் சொல்லிவிட்டு போகவும் அந்த ரூமில் இருந்த மேசைக்கு பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டாள்.

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

அது விமலாவின் ஸ்ரடி டேபிளாக இருக்க வேண்டும். முழுவதும் அவளது பாடசாலை புத்தகங்களும், கொப்பிகளுமே இருந்தது. மேசைக்கு பக்கத்திலேயே அவளது கட்டிலும் இருந்தது. கதிரையில் அமர்ந்த நிவேதா தற்செயலாகத்தான் அந்த கொப்பியை புரட்டினாள். அழகான வர்ண பேப்பரில் உறையிடப்பட்டு ஒரு ரோசா பூவின் படம் ஒட்டப்பட்டு "என்றும் என் இனியவருக்கு" என எழுதி விமலா என ஒப்பமிட்டிருந்தது. கொப்பியை புரட்டியவுடன் முன் பக்கமே ஒரு கவிதை இருந்தது.

"கனவும் நீ
நினைவும் நீ
என் உயிரும் நீயே

பூவும் நீ
பொட்டும் நீ
என் பொழுதும் நீயே

வாசம் நீ
நேசம் நீ
என் தேசமும் நீயே

மணமும் நீ
மனசும் நீ
என் வாழ்வும் நீயே"

என தொடங்கும் கவிதை வரிகளைப் படிக்கவும் நிவேதாவுக்கு ஆவல் பொங்கியது. விமலா கூட எவ்வளவு அருமையாக கவிதை எழுத தொடங்கி விட்டாள் என்ற நினைப்பில் கீழே பார்த்தவள் அதிர்ந்தே விட்டாள்.

"என் ராகமே
என் ஜெய ராகமே
ரதனே......
ஜெய ரதனே........'."

என்ற வரிகள் நிவேதாவை அதிர்ச்சியடைய வைத்தது. அடுத்த பக்கத்தைப் புரட்டியதும்......" நீ என்று எங்கள் வீட்டிற்கு வந்தாயோ அன்றே நான் என்னை மறந்தேன். உன் நினைவு மட்டும் என் சுவாசமாகியது. என்னை மறந்து உன்னை நினைக்கத் தொடங்கினேன். இதுதான் காதலா....?

**வாசகர்களே! கடந்த ஆறு மாதங்களாக உங்கள் மலைமுரசு தாங்கி வந்த "வீணையடி நீ எனக்கு" எனும் குறுநாவல் விரைவில் நூலுருவில் வெளிவர உள்ளது. அந்நூலில் தங்களின் மனப்பதிவுகள் வரவிரும்பின் மலைமுரசு அலுலகத்திற்கு தங்கள் கருத்துக்களை அனுப்பிவையுங்கள்.**

**மேவும்.. .. ..**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவன்

கண்டு கொண்டேன் சில மனிதர்கள்! கற்று
விட்டேன் பல அத்தியாயம் - ஆனால்
கற்றுக்கொண்டிருக்கிறேன்
இன்னும் மாணவனாய்!

ஏணியதை தொட்டு விட
முயற்சி தொடர்கிறேன்!
எதுவித பயனுமில்லை!
நிச்சயமாய் நிலை பெறுவேன் - ஆசானாய்!

அது வரைக்கும் நான் மாணவன் தான்
வாழ்க்கைப் பள்ளியிலே!

பள்ளத்தோட்டம் சஞ்சு

## பழைய பல்லவியே பாடப்பட இருக்கிறது!!

ஐநா அறிக்கை யின்னும்
ஆறுமாத காலத் திற்கு
மௌன மாக்கப் பட்டிருக்கு
மாற்றத்தை கண்டரசால்

நீல அரசினாலும்: இங்கு
பலவர்ண ஆட்சியாலும்
கோலங்கள் போடுவதில்
கொள்கை மாற்றத்தில்
முன்னேற்ற மில்லை:

இறுதி யுத்த நேரத்திலே
இரு தரப்பும் மேற்கொண்ட மனித
உரிமை மீறல்களை
மதிப்பீடு செய்து வரும்
புனித நேய பணியாளர்களை
நுழைய விடவில்லை யிங்கு:

சர்வதேச விசாரணைக்கு
சந்தர்ப்பம் வழங்காமல்
உள்ளக விசாரணைக்கே
ஒரு தலைப் பட்ச வழி - இங்கு
முன்பும் நடந்திருக்கு அதை
மீண்டும் நடத்துதே - இந்த
நல்லாட்சி யுகத்திலும்
நடக்க இருக்கிறதாம்!

கவிக்குயிலன்
சேனையூரான்

## நன்றே!




தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு)

சந்தித்து திரண்டு பாதை
தணில் அமர்ந்துரைகள் ஆள,
அந்த நீரோட்டு வள்ள
ஆட்டமும் கண்டிறங்கி
முந்திப்போய்ப் பேருந்தேறி
முடியாமல் நின்றுமே போய்,
வந்த முன் பயணம் சொன்ன
வரலாற்றை மறக்கலாமோ?

இலங்கையின் நீண்ட பாலம்
எனும் பெயர் கிண்ணியாவுக்கே!
துலங்கும் எண்ணைந்து கொண்ட
தூண் தரும் அழகுப்பாலம்
கலங்காமல் - சுணங்கிடாமல்
கடிதினில் மலை போய்மீளம்
நலங்களை எண்ண வைக்கும்
நாட்டபிவிருத்தி நன்றே!

## புரட்டாசிச் சனி!!

கா.. கா..
கா.. கா..!

சூய்... சூய்.. ஓடு..!
சாப்பிடவும் விடாமல்
சுற்றிக் கரைகிறது..

யாரெவன் வரவுக்காய்
வாசலில் பறந்து
கூப்பாடு போடுகிறது..

எங்கிருந்தோ..
எதையெல்லாமோ எடுத்துவந்து
இங்கு கொட்டுது..

என்வீட்டுக் குப்பையையும் கிண்டி
என்னை நாறடிக்காமல்
சீ..! சனியனே ஓடு...!

எள்ளெரித்துச் சோறுவைத்தேன்
எட்டுக் கறிசமைத்தேன்..
லட்டு பாயாசம் வடை
தட்டோடு உனக்காகவே..
வா.. வா.. கா.. கா..
வணங்கியழைக்கிறேன்..
வா.. வந்து சாப்பிடு..!

தேர்தல் காலம் எங்களுக்கும்
புரட்டாசிச் சனிதான்!

-- கொட்டிய ஆரன் --

## தேடுவது....



நூல் : பொன்னாலை -
சேனையூர் இரத்தினா

வண்டுகள் தினம்
மலரைத் தேடுவதெல்லாம்
நல்ல தேனைச் சேர்ப்பதற்காக
மேகங்கள் தினம்
வானைத்தேடுவதெல்லாம்
மண்ணுக்கு
மழையைப் பொழிவதற்காக
மாணவர்கள் தினம்
நூலைத் தேடுவதெல்லாம்
வாழ்வில்
நல்லறிவைப் பெறுவதற்காக
ஆறுகள்
தினம் கடலைத்தேடுவதெல்லாம்
தாம் கலந்து கொள்வதற்காக
கவிஞர்கள்
உறவைத் தேடுவதெல்லாம்
தம் கலையுணர்வு நிலைப்பதற்காக
பேனா தாளைத் தேடுவதெல்லாம்
புள்ளடிகளைச் சேர்ப்பதற்காக
விருந்தினர்கள்
மாலையைத் தேடுவதெல்லாம்
தம் பெருமையை உணர்த்துவதற்காக
மானிடம்
மேடையைத் தேடுவதெல்லாம்
நல் வாக்கியம் பிறப்பதற்காக
துப்பாக்கிகள்
ரவையைத் தேவதெல்லாம்
தம் இலக்குகளை எட்டுவதற்காக
அதிகாலை கண்கள்
விழிப்பு தேவதெல்லாம்
சூரியனின் ரீங்காரத்திற்காக

# கவிமுரசு

## சிந்தித்து வாக்களிப்பீர்

வாக்காளப் பெருமக்களுக்கு வணக்கம்! உங்கள்
வாக்குகளின் பெறுமதியை விளங்கிக் கொள்வீர்!
பூத்துவரும் புலர்காலை நீங்கள் சென்று
போடுகின்ற 'புள்ளடி'யால் உங்கள் வாழ்வில்
மாற்றமொன்று நிகழ்ந்திடுமா? என்றே சற்று
மனந்திருத்திப் பாருங்கள் மறக்க வேண்டாம்!
தோற்றாலும் வென்றாலும் அவர்கள் வாழ்வில்
தொய்வுவர மாட்டாதே கவனம் நீங்கள்!

குளிர்கொட்டும் குடிசையிலே வாழும் நீங்கள்
கொடுக்கின்ற ஆதரவால் அவர்கள் மீண்டும்
குளிரூட்டப்பட்ட புது 'ஊர்தி'தன்னில்
'குஷி'யாகப் பயணிப்பார்! வாக்களித்தோர்
'பழங்குருடி கதவதனைத் திறநீ'என்னும்
படியாக அவலநிலை காணல் திண்ணம்!
வழமையிது பிறந்தநாள் தொட்டு நீங்கள்
வாக்களித்து வாக்களித்துக் கண்ட தென்ன?

பாட்டனுக்கு முற்பாட்டன் என்று உங்கள்
பரம்பரையே 'சாவடி'க்குச் சென்று வாக்குப்
போட்டதன் கதையாச்சு! மாற்றம், மேன்மை
புலர்வுகளைக் கிஞ்சித்தும் தரிசித் தீரா?
மாட்சிமைகள் மிக்கவராய் அமைச்சரென்னும்
மகுடத்தை அவர்சூட மூலம் ஆனீர்!
வீட்டினிலே அடிசிலுக்கு வழியே யற்றீர்
விளக்கெரிக்க எண்ணெய்க்கு எங்கே செல்வீர்?

அரிசி, மா, சீனியுடன் பால்மா மற்றும்
அடுக்களைக்கு உண்டான பொருட்கள் ஆமாம்.
எரிகின்ற விறகோடு சாமான் சட்டு
எல்லாமும் விலையேறும் வேளை எம்மைச்
சரிக்கட்ட மேடையில் பலவா றாகச்
சாற்றுகின்றோர் நடிப்புக்கு மயங்கி டாமல்
உரிமையுள்ள பெறுமதியாம் வாக்குச் சீட்டை
உத்தமர்க்கே போடுங்கள் உலுத்தர் வேண்டாம்!

பாலமுடன் மின்சாரம் 'பைப்பு'த் தண்ணீர்
பயணிக்க வீதிகளும் தருவே னென்று
காலமெலாம் மேடையிலே உரைப்போர் தம்மின்
கதைகேட்டு விலைபோக வேண்டாம் மக்களே!
காலையிலே ஒன்றுரைத்து மதியம் ஒன்றாய்
கங்குலிலே வேறுகதை பேசும் கு(க)ள்ளர்
நாளையென்ன நமக்கிங்கே செய்யப்போறார்?
நடைபெற்றால் தேர்தலது தம்பி வேறாள்!

மூளைகெட்டு வாழுகின்ற மூடர் என்று
முழுநாளும் நினைக்கின்றோர் விருப்பம் போல
ஏழைகளை எடுத்தெறிந்து பேசு கின்ற
ஏமாற்றுக் காரர்களை இனங்காணுங்கள்!
கோழைகளாய் கொத்தடிமை நிலையி லின்னும்
கோடியிலே வாழுகின்ற வாழ்வை மாற்ற
நாளைவரும் தேர்தலெனும் வேளை பார்த்து
நன்றாக சிந்தித்தே வாக்களிப்பீர்!

அ.கௌரிதாசன்,
ஆலங்கேணி கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசம் நோக்கிப் பயணிப்போம்... மாற்றத்திற்காக வாக்களிப்போம்

**நாங்கள் உங்களுடன் பேசவே விரும்புகின்றோம். தயவு செய்து சில நிமிடங்களை எமக்காக ஒதுக்குங்கள்!!**

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாங்கள் தமிழர்களின் இன்னல்களுக்கான தீர்வாக **"ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி அதிகாரம் கொண்ட ஒரு தமிழ் தேசத்தை"** பெற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொண்டே எமது அரசியல் நடவடிக்கையை முன்னெடுக்கின்றோம்.

எமது அரசியல் நடவடிக்கை வெறும் கதிரைக்கானது அல்ல ....
எமது அரசியலை விடுதலைக்கான அரசியலாகவே கட்டியெழுப்ப முனைகின்றோம்....

**தமிழ்த் தேசம் என்றால் என்ன?**
தேசம் என்பது தமிழ்த் தேசிய இனமானது தனது பூர்வீக வாழ்விடத்தை தனக்கேயுரித்தான . நிலப்பிரதேசத்தை உன்னதமான தனது கலாசார எல்லை-களால் வரையறுத்துக் கொள்வதைக் கருதும்.

**நாம் தேசிய இனமா? சிறுபான்மை-யினரா?**
தமிழர்கள் ஒரு தேசிய இனமே. தேசிய இனமொன்றின் மிக அடிப்படையாக அமைவது மொழி. எமக்கென்று ஒரு மொழி உண்டு. அது தான் உலகம் போற்றும் செம்மொழி எம் தமிழ்மொழி.

**தேசிய இனத்திற்கான எஞ்சிய தேவைப் பாடுகள் என்ன?**
நிலப்பிரதேசம், அரசு, ஒரு படித்தான வாழ்க்கை முறை, சமூகமரபு நிலை, இலக்கியம்.

**தமிழர்களின் பூர்வீக வாழ்விடம் எது?**
தமிழர்களின் தாயகம் இலங்கையின் வடக்குக் கிழக்கு பிரதேசம். இப்பிரதேசங்கள் திட்டமிட்டு, பேரினவாதி-களினால் பிரிக்கப்பட்டுள்ளது.

**தமிழ் தேசம் என்பது சாத்தியமா?**
சாத்தியமே. ஏனெனில் உலகில் பல நாடுகள் தேசங்களின் கூட்டாகவே காணப்படுகின்றது. உதாரணமாக ஐக்கிய இராச்சியத்தை எடுத்துக் கொண்டால், அந்நாடு லண்டன், அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ் ஆகிய தேசங்களின் கூட்டாகவே இருக்கின்றது. அவ்வாறே கனடாவை எடுத்துக் கொண்டால் கியுபெக் பிராந்தியம் ஒரு தேசமாகவே காணப்படுகிறது.

**ஹொங்கொங் ஒரு நாடா தேசமா?**
ஹொங்கொங் ஒரு தேசம். அது சீனா என்ற நாட்டின் ஒரு பகுதியாகும். ஹொங்கொங்கின் முப்படைகளும் அதாவது தேசத்தின் பாதுகாப்பும் ஹொங்கொங்கின் வெளி-விவகாரக் கொள்கையும் நடவடிக்கைகளும் சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. ஏனைய அனைத்து உரிமைகளும் ஹொங்கொங்கிற்கு உண்டு.

**சிங்கள பேரினவாதத்தையும் தாண்டி தமிழ்த் தேசத்தை பெற்றுக் கொள்ள முடியுமா?**
பெற்றுக்கொள்ள முடியும். அதற்கான வாய்ப்புக்கள் எம்மை நாடி வரும் போது அவ்வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்வதன் ஊடாக தேசத்தை வென்றெடுக்க முடியும். உதாரணமாக ஜனவரி 8ஆந் திகதி இலங்கையில் மேற்குலகின் ஆதரவு அணிகளான ஆசிய சக்திகளும் ஒன்றித்துச் செயற்பட்ட போது ஸ்ரீலங்காவின் சனாதிபதியை மாற்றிய முயற்சிக்கு தமிழர்களின் வாக்குகள் முக்கியமான-வையாக இருந்தன. அன்றைய தினத்தில் சர்வதேச மட்டத்தில் தமிழர்களிடம் பேரம் பேசும் ஆற்றல் இருந்தது. ஆனால் அந்த வாய்ப்பு பயன்படுத்தப்படவில்லை.

**தற்போதுள்ள வாய்ப்புக்கள் எவை?**
செப்டெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் வெளியிடப்-படவுள்ள போர்க்குற்றம் தொடர்பான அறிக்கையின் அடிப்படையில் சுதந்திர சர்வதேச விசாரணை ஒன்றை இலங்கையில் முன்னெடுக்க தமிழர்களின் அரசியல் தலைவர்கள் கோருவதன் ஊடாக தேசம் ஒன்றை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. இதே போல் வாய்ப்புக்கள் வரும் போது அவற்றை பயன்படுத்த வேண்டும்.

**தமிழ்த் தேசத்தை பெற்றுக் கொள்வதற்காக நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்?**
தமிழ்த் தேசம் ஒன்றே ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு என்பதை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஒலிக்கச் செய்ய வேண்டும். அதேநேரத்தில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் தமிழர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி தமிழர்களுக்கான தீர்வு தனித்தேசம் என்ற கோரிக்கையை அவர்களும் ஒலிக்கச் செய்ய வேண்டும். ஏற்படுகின்ற ஒவ்வொரு வாய்ப்புக்களும் தமிழ்த் தேசத்தை பெற்றுக் கொள்ளும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். இவற்றிற்காக தமிழர்களால் தேர்வு செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களாக நாம் உருவாக வேண்டும்.

**அதிகாரப் பரவலாக்கல் தமிழர்களின் நிரந்தரத் தீர்வாக அமையுமா?**
முதலில் அதிகாரப் பரவலாக்கம் என்பது தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு அல்ல. தீர்வை அடைவதற்கான வழிமுறை ஒன்றாக பேரினவாதத்தி-னால் முன்வைக்கப்படும் செய்முறையைத்தான் அதிகாரப்-பரவலாக்கம் எனலாம். அதிகாரப் பரவலாக்கம் மிகவும் ஆபத்தான அபத்தமான வழியாகும். ஸ்ரீலங்காவை நாடாளுமன்றத்தினால் தமிழ்த் தாயக பிரதேசத்தில் வசிக்கும் தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படுவதே அதிகாரப் பகிர்வாகும். இங்கு உள்ள ஆபத்து என்னவெனில் பரவலாக்கப்பட்ட அதிகாரத்தை எந்த நேரத்திலும் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடிய வலு நாடாளுமன்றத்திடம் உள்ளது. இதனாலேயே அதிகாரப் பரவலாக்க-த்தை ஆபத்தானது என நான் கருதுகிறேன்.

**அதிகாரப் பரவலாக்கம் ஏன் அபத்தமானது?**
அதிகாரங்களை இலங்கையின் நாடாளுமன்றமே தமிழர்களுக்கு வழங்கவேண்டும். நாடாளுமன்றத்தில் அதிகாரங்களை பகிர்வதற்கான அனுமதியை பேரினவாத சக்திகளே தீர்மானிக்கின்றன. இந்நிலையில் ஈழத்தமிழர் நிம்மதியாக தமது வாழ்விடங்களில் வாழ்வதற்குத் தேவையான அதிகாரங்களை பேரினவாத சக்திகளால் தடுக்க முடியும். இவ்வாறு தடுக்கப்பட்டமை-தான் எமது வரலாறு. அதனால் தான் அதிகார பரவலாக்கம் அபத்தமானது என்கின்றோம்.

**வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெறப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டா?**
ஆம். மிக அண்மையில் கூட திவிநெகும சட்டம் ஊடாக மாகாணசபைகளிடமிருந்த சில அதிகாரங்களை மத்திய அரசு மீளப் பெற்றுக்கொண்டது. இதனால்தான் நாங்கள் அதிகாரப் பரவலாக்கம் என்பது தமிழர்களுக்கான தீர்வுக்கான வழியாக அமையாது என்கின்றோம்.

**நாங்கள் போட்டியிட்டால் தமிழர் பிரதிநிதி-த்துவம் திருமலையில் இழக்கப்படுமா?**
இல்லை. 2004ம் ஆண்டில் 84,000 தமிழ் மக்கள் வாக்களிக்கும் தகைமையை கொண்டிருந்த போது சுமார் 33,000 வாக்குகளே தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு கிடைத்தது. எஞ்சியவை எங்கே? இவ்வருடம் சுமார் 1 லட்சம் தமிழர்களுக்கு வாக்களிக்கும் தகைமை உண்டு. அவர்கள் எமக்கு மட்டும் வாக்களித்தால் 2 ஆசனங்க-ளையும் எமக்கும் வாக்களித்தால் நாமும் ஒரு ஆசனத்தையும் வெல்லும் வாய்ப்பு உண்டு.

## திருகோணமலை மாவட்டத்தில் நாம் உடனடியாக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள்

- சம்பூரில் அமைக்கப்பட்டுள்ள அனல் மின்நிலையத்திற்கான கடும் எதிர்ப்பை வெளிவிடுவதுடன் அனல் மின்நிலையத்தை எதிர்த்தியங்கும் அமைப்புக்களை ஒன்றிணைத்து அவற்றின் குரலை நாடாளுமன்ற-த்தில் ஒலித்தல்.
- சம்பூர் அனல் மின்நிலையம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுற்றுச் சூழல் ஆய்வறிக்கை[illegible] மக்கள் அங்கு மீள்குடியேற்றப்படாத பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற படியால் அவ்வறிக்கை நிராகரிக்கப்-பட வேண்டும் என்பதை வலியுறுத்துதல்.
- பாடசாலை மாணவர்களுக்கும், கிராமத்தில் தொழில் வாய்ப்பற்றி-ருக்கும் இளைஞர்களுக்கும் போதைப்பொருள் விநியோகிப்-பவர்களை அடையாளங் கண்டு நடவடிக்கை எடுப்பது.
- தமிழ்ப் பிரதேசங்களை அழித்தொழி-க்கும் மண்அகழ்வு நடவடிக்கைகள் (உதாரணம் - இறால்குழி) களிமண் அகழ்வு நடவடிக்கைகள் (உதாரணம் - இருதயபுரம்) காணி மீள் பங்கீடு நடவடிக்கைகள் (உதாரணம் - தென்னை மரவாடி, மூதூரில் படுகாடு) ஆகியவற்றிற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல்.
- திருகோணமலை மாவட்டத்திற்கான பொது வலைத்தளத்தை உருவாக்குதல். அவ்வலைத்தளத்-தினூடாக திருகோணமலை மாவட்ட-த்தின் அனைத்து தகவல்களையும் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதியினையும் வழங்குதல்.
- கைவிடப்படும் முதியோர்களையும், மனநலம் குன்றியோர்களையும் பராமரிக்கும் காப்பகம் ஒன்றை உருவாக்குதல்
- மக்கள் குறை கேள் அலுவலகங்களை முறையே திருமலை நகரம், குச்சவெளி, பாலதடிச்சேனை ஆகிய பிரதேசங்களில் திறத்தல்.
- காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக உருவாக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு சனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையை வெளியிடுமாறு அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்தல்.
- கையகப்படுத்தப்பட்டுள்ள நீலிஅம்மன் கோவில் (இலங்கைத்-துறை முகத்துவாரம்) கையகப்படுத்தப்படும். ஆபத்தை எதிர்கொண்டுள்ள அகத்தியர் தாபனம் (கங்குவேலி) நன்னீர் மீன்பிடிக் களப்பு (இலங்கைத்துறை முகத்துவாரம்) தென்னைமரவாடி கந்த சாமி மலை, பிள்ளையார் கோவில் ஆகியவற்றைக் காக்க நடவடிக்கையை முன்னெடுத்தல்.

## திருகோணமலை மாவட்டத்தில் நாம் திட்டமிட்டுள்ள சில எதிர்கால நடவடிக்கைகள்

**பொருளாதார அபிவிருத்தி**

வீட்டுத்தோட்டத்தை ஊக்குவித்தல். அதனூடாக பெறப்படும் உற்பத்திகளை சந்தைப்படுத்து-வதற்கான திட்டத்தை அறிமுகப்-படுத்தல்.
ஒவ்வொரு கிராமங்களின் வளப்பரம்பலுக்கு ஏற்ப அந்தந்தக் கிராமங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை கிராமிய இளைஞர்களை முன்நிறுத்தி உருவாக்குதல்
சிறு கைத்தொழிலை செய்வதற்கான நிதி உதவியினை பெற்றுக்கொடுத்தல் அல்லது நிதிஉதவியைப் பெற வழிவகுத்தல்.
வருமானத்தை உருவாக்கக் கூடிய வாழ்வாதார திட்டங்களை உருவாக்குதல்.

**கல்வி அபிவிருத்தி**

திருகோணமலை மாவட்டத்தில் பொறியியல் கல்லூரியினை உருவாக்குதல்.
கல்வி நிலையங்கள் என்ற பெயரில் நடைபெறும் ஏமாற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்தல்.
தமிழ் கிராமங்களில் ஆங்கில மற்றும் கணித அறிவு விருத்தி தொடர்பான பொதுவான திட்டம் ஒன்றை முன்னெடுத்தல்.
கிராமப்புற பாடசாலைகளில் காணப்படும் ஆசிரிய பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
கிராமங்கள் தோறும் படிப்பகங்களை (Library) உருவாக்குதல்.
திருகோணமலை மாவட்ட வரலாற்றினை தொகுத்தல், அத்துடன் திருகோணமலையின் வரலாற்றினை எடுத்தியம்பும் கல்வெட்டுக்களை பாதுகாத்தலும் [illegible]க்கும் அல்லது மறைக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுக்களை புதிதாக கண்டுபிடித்தலும்.
திருகோணமலை மாவட்ட திரைப்பட கல்லூரியை உருவாக்கல்.
திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தை சமூக மயப்படுத்துவதற்கு வளாக கல்வியியலாளர்களுடன் சேர்ந்து திட்டங்களை வகுத்து செயல்படுத்தல்.

**ஓர் பார்வை**

**த.தே.ம.மு**

**கலை கலாசார அபிவிருத்தி**

தமிழ்க் கலாசார மத்திய நிலையத்தை உருவாக்குதல்
திருகோணமலையின் முக்கிய மூன்று பிரதேசங்களில் இலவசமாக கற்பிக்கக் கூடிய கலை கலாசார கல்லூரிகளை ஸ்தாபித்தல்.
தமிழர்களின் பாரம்பரிய கலையான கூத்துக்களையும் விருப்பமுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ளல்.
சிலம்பக் கலையை கிராமங்கள் தோறும் கற்பிக்க நடவடிக்கை எடுத்தல்.
திருகோணமலையின் மூன்று பிரதேசங்களில் மாதந்தோறும் கலை நிகழ்வுகள் நடைபெறுவதை ஒழுங்கமைத்தலும் உருவாக்குதலும்.

**மகளிர் அபிவிருத்தி**

கிராமங்கள் தோறும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் விபரங்களை திரட்டி தகவல் தளத்தை உருவாக்குதல் அவர்களுக்கான நிரந்தர வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் திட்டங்களை முன்னெடுத்தல்.
வாழ்வாதார உதவிகளை வழங்குதல்.
வன்முறைக்குள்ளாகும் பெண்களை பாதுகாக்கும் பொருட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
எதிர்பாராமல் பிரசவிக்கப்படும் தமிழ் குழந்தைகள் கைவிடப்படும் போது அவர்களை பாதுகாத்து வளர்க்கும் "மழலைச் சோலை" யை உருவாக்குதல்.

**விளையாட்டுத்துறை அபிவிருத்தி**

கிராமங்கள் தோறும் விளையாட்டுக் கழகங்களை உருவாக்குதல். – ஏற்கனவே உள்ள விளையாட்டுக் கழகங்களை வளப்படுத்துதல்.
கிராமங்கள் தோறும் கிராமிய விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல். அதன் தொடர்ச்சியாக மாவட்ட கிராமிய விளையாட்டு விழாவினை நடாத்துதல்.
தேசிய விளையாட்டுக்களை ஊக்குவித்தல்.
திருகோணமலை மாவட்ட பூப்பந்தாட்ட சங்கத்திற்கு புத்துயிர் அளித்து பாடசாலைகள் தோறும் அவ்விளை-யாட்டினை ஊக்கப்படுத்துதல்.
மாகாண விளையாட்டு விழாவில் திருகோணமலை மாவட்டம் முதல்நிலையினை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல்.
பாடசாலைகள் தோறும் யோகாசனப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான முதற்கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுதல்.

**சட்டமும் மனித உரிமையும்**

தமிழ் மக்களின் மனித உரிமைகள் மீறப்படும் போது அவற்றிற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
திருகோணமலையில் உருவாக்கப்படும் மக்கள் குறைகேள் அலுவலகத்தில் வறியவர்களுக்கு இலவச சட்ட உதவியை வழங்கும் வகையில் சுழற்சி முறையில் சட்டவாளர்களை தருவித்தல்.
சட்ட உதவி ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, மனித உரிமை விருத்திக்கும் பாதுகாப்பிற்குமான அமைப்பு, சிறுவர் நன்னடத்தை அதிகார சபை ஆகியவற்றுடன் இணைந்து ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைகளை தேவையான இடங்களில் மேற்கொள்ளல்.

**சைக்கிளுக்கு வழங்கப்படும் எங்களது வாக்கு தமிழர்களுக்கு தேசமே தீர்வு என்பதை உலகத்திற்குச் சொல்லும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அலசல்

# சுமந்திரனுக்குள் சுருங்கிவிடப் போகிறதா சுதந்திரப் போராட்டம்

வெள்ளைத் தோல் அதிகாரிகளைத் தூதுவரலாயங்களில் சந்திப்பதும், கைகுலுக்குவதும் இராஜதந்திர நடவடிக்கையாகக் கொள்ள முடியாது. அது மாதிரியான சம்பவங்கள் அனேக இடங்களில் தகவல் பெறுதலுக்கும், அறிக்கை கையளித்தலுக்குமே நடக்கும்.

இதேபோல இந்திய அரசின் நிகழ்ச்சி நிரலில் இயங்குவதற்கும் பெயர் இராஜதந்திரமல்ல.. இந்தியாவின் சார்பில் நின்று பார்த்தால் அது இந்தியாவுக்கு இராஜதந்திரம். இந்தியாவின் நிகழ்ச்சி நிரலை கேட்டு இயங்குவதற்குத் தமிழர்கள் எப்படி இராஜதந்திரம் என அர்த்தம் கொடுக்க முடியும். இந்தியாவிடம் பணத்தை வாங்கிக் கொண்டு தொண்டு நிறுவன பணி செய்வதற்கும், கூட்டமைப்பு செய்யும் அரசியலுக்கும் என்ன வித்தியாசத்தைப் பார்க்க முடியும்?

பேரம்பேசும் சக்தி எனும் சொல்

நம் எதிர்த்தரப்பிடம் இருக்கும் ஒன்றை, நம்மிடமிருக்கும் பலமான ஒன்றை வைத்துப் பெறுவதற்காக முயற்சித்தலே பேரம்பேசுதல் ஆகும். அதாவது, "நான் இதைத்தாறன், நீ அதைத் தா" என்பதுதான். 2010க்குப் பின்னர் தமிழர்களிடம் இருக்கும் பேரம்பேசும் சக்திக்கான பொருள் வாக்குச் சீட்டுக்கள் தான். தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழர்களின் வாக்குகளைப் பெற்று அதிக உறுப்பினர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதன் மூலமாக ஒருவகை பேரம்பேசுதலையும், ஜனாதிபதி தேர்தலின்போது தமிழர்களின் வாக்குகளைத் திரட்டி சிங்களத் தலைமைகளுக்குத் தாரைவார்க்கும் போது ஒரு வகை பேரம்பேசுதலையும் கைக்கொள்வது வழமை. வடக்கு கிழக்கிலிருந்து அதிகளவான உறுப்பினர்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்றத்துக்கு தமிழர்கள் அனுப்பிய போதும், ஆள்பலத்தை வைத்து ஏதாவது பேரம்பேசல் இதுவரையில் இடம்பெற்றுள்ளதா? இல்லை.

இரண்டாவது, ஜனாதிபதி தேர்தலின் போது தமிழர்களின் வாக்குகளைத் திரட்டி சிங்கள ஆட்சியாளர் ஒருவருக்கு கொடுத்துப் பேரம்பேசுவது. இது ராஜபக்ஷவின் காலத்தில் சாத்தியமாகவில்லை. ஆனால், கடந்த ஆட்சி மாற்றத்தின்போது அருமையான-தொரு அரசியல் சந்தர்ப்பம், தமிழ் மக்களின் வாக்குகளை முன்வைத்துப் பேரம்பேசுவதற்குக் கிடைத்தது. மைத்திரியா? மஹிந்தவா? என்ற போட்டி வருகையில் இரு தரப்பினருக்குமே தமிழர்களின் வாக்குள் அவசியப்பட்டன. அதனை இருவரும் வெளிப்படையாகவே கூறினார்கள். ஆனால், தமிழ் தேசிய கூட்டமைப்பு எவ்வித பேரம்பேசலையும் மேற்கொள்ளாது மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து, வாக்கு வீணடிப்பைச் செய்தது. தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழர் அரசியலில் செய்த தவறுகளுல் மிகப் பிரதானமானதாக இதைத்தான் குறிப்பிடலாம்.

புலிகள் தொடர்பிலான கூட்டமைப்பின் நிலைப்பாடு

இப்போது தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற எவருமே விடுதலைப் புலிகளை ஆதரித்தவர்-களோ, அவர்களின் கொள்கைகளின் மீது விசுவாசம் கொண்டவர்களோ அல்ல. நாடாளுமன்றத்தில் புலிப் பயங்கரவாதி எனத் தூற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள், தேர்தல் காலங்கள் வந்ததும் விடுதலைப் புலி வீரர்கள், விடுதலைப் போராளிகள் எனப் புகழ்பாடத் தொடங்கிவிடுவர். தேர்தலில் வெற்றி பெற்றதும் புலிகளும், அவர்களின் தலைவர் பிரபாகரனும் பயங்கரவாதி-களாகிவிடுவர். தமிழ் தேசிய கூட்டமைப்பைப் பொறுத்தவரையில், விடுதலைப் புலிகள் மற்றும் பிரபாகரன் ஆகிய சொற்கள் வாக்குகளை அள்ளிக் குவிக்கும் அட்சய பாத்திரங்கள் மாத்திரமே. தேர்தல் காலங்களில் மட்டும் மிணுக்கி எடுத்தால் போதும்.

தமிழர் அரசியலில் இவ்வளவு பாடுபாதங்களையும் செய்துவிட்டு, இம்முறை மறுபடியும், தேர்தல் களத்தில் கூட்டமைப்பு இறங்கியி-ருக்கிறது. அதிகளவான குழறுபடிகள், குழிபறிப்புக்கள், தமக்கிடையே போட்டுக்கொடுத்தல்கள், ஆசனத்து-க்கான பரிமாறல்கள் என தேர்தல் கல்லாப்பெட்டி சலசலக்கிறது. இம்முறையும் அனேக புதுமுகங்கள். அதுவும் வியாபாரம், பாரிய தொழில் வைத்து நடத்துபவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் தேசியம் வியாபாரிகளின் கைகளுக்குப் போனால் என்ன நடக்கும் என்பதைக் கடந்த ஐந்து வருடத்தில் பார்த்துவிட்டோம். அதற்கு உதாரணமான புருஸர்கள் கூட்டமைப்பில் ஏற்கனவே இருக்கின்றனர். எனவே, அடுத்து வரும் ஐந்து வருடங்களுக்குத் தமிழ் தேசியம் பாரியளவிலான வியாபாரப் பண்டமாக மாறப்போகின்றது. தமிழ் தேசியம் மாபியாக்களின், வணிக கொள்ளையர்களின் உறைவிடமாக வடிவம் எடுக்கப்போகின்றது. அந்தக் கொள்ளையர்களைப் பாதுகாக்கும் சிவப்பு - மஞ்சள் குடையாகத் தமிழ் தேசிய கூட்டமைப்பு தன்னை மாற்றிக்கொள்ளப்போகிறது.




# என் மனக் கண்ணில் சிந்தும் நீர்த்துளியடா??

என் மனக்கண்ணில் சிந்தும் இரத்தத் துளி
உப்புக் கல்லை வைரமென்று சொன்னால் நம்பி
ஒப்புக் கொள்ளும் மூடருக்கு முன்னால்
உளறியென்ன? கதறியென்ன?

பாராளுமன்ற சனநாயகத்தினூடாகத் தலைமைத்துவம் பெற விரும்பும் ஒருவர், பிரதானமான சில முன்மொழிவுகளை அதி சிறந்த தெரிவுகளைத் - தன்னுடன் வைத்துக்' கொள்ளும் பண்பு - அரசியலில் தூய்மையான கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

நல்ல கொள்கைகளையும், நோக்கங்க-ளையும் கொண்ட கட்சி - அக்கட்சியின் தலைமை - அத்தலைமையின் கீழ் இயங்கும் உறுப்பினர்கள் - இவைகள் ஓர் கட்சியின் வளர்ச்சிக்குப் படிகளாக விளங்குவதை, சனநாயக அரசியலில் நாம் காண்கின்றோம்.

மேற்கூறிய கோட்பாட்டை மனதில் நிறுத்துவோம். இன்றைய காலத்தில் திருக்கோணமலைத் தமிழ் மக்களுக்கு தமிழரசுக்கட்சி அரசியல் மூலமான விடிவைக் கொடுக்குமா? நல்ல தெளிவான அரசியல் வழியைக் காட்டுமா? என்ற வினாக்களையும் நெஞ்சில் தொடுவோம்.



திருக்கோணமலை மக்களும், இலங்கைத் தமிழரசுக்கட்சியும் ஒன்றை ஒன்று பிரிந்ததில்லை - நெஞ்சில் மறந்ததில்லை. சென்ற கால வரலாற்று நிகழ்வுகளை எம்மால் மறக்க முடியாது மறுக்கவும் முடியாது. ஆனால் அந்த நிலை இன்று மாறுவதற்கான அடையாளங்கள் கல்லில் எழுதிய சொல் போலத் தென்பட ஆரம்பித்து விட்டன.

தமிழரசுக்கட்சியின் மூல வேர்களையும் - அதன் நோக்கங்களையும் - வேறுபடுத்தி,மாசுபடுத்தி, தமிழரசுக்கட்சியின் போக்கை மாற்றி எதிர்காலத்தில் திருக்கோணமலைத்தமிழ் மக்களை அரசியல் அனாதைகளாக்கும் ஈனத்தனம், துரோகத்தனம் - கட்சிக்குள் திட்டமிடப்பட்டு நடைபெறுவதை தமிழ் கூறும் நல்லுலகம் தெரிந்து கொள்ளுமா? அறிந்து கொள்ளுமா?

இத்துரோகத்தனத்தையும் - அநீதியையும் - சொல்லவே இப்பத்தியை நான் பயன்படுத்துகின்றேன். நான் இதில் சொல்ல வருவதும்,சொல்லும் விடயமும் திருக்கோணமலை மாவட்டத் தமிழரசுக்கட்சியின் விமர்சனமேயாகும்.

திருக்கோணமலை மாவட்டம் இரண்டு தொகுதிகளைக் கொண்டது. அதில் மூதூர் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்தது. சேருவிலைத் தொகுதியின் உருவாக்கத்தின் பின் அமைந்த தமிழரசுக் கட்சியைப் பற்றி மக்கள் அறிவு பூர்வமாக சிந்திக்க வேண்டும்.

இந்த வேளையில் தான் தங்கத்துரை - தன் தூய்மையானதும் - நேர்மையானதுமா: நடவடிக்கையின் மூலம் எவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தாபகரான தந்தை செல்வாவைப் புனிதப்படுத்தினர் என்பதை நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

தமிழரசுக்தட்சியினூடகத் தமிழர்களை - மூதூர் பிரதேச தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய முதல்வர் அவர்.

மூதூர் தொகுதியிலுள்ள தமிழர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து அவரைத் தெரிவு செய்தார்கள்.

தேர்தல் காலத்தில் மட்டுமல்ல எப்போதும் மூதூர் தெற்குவாழ் தமிழர்கள் ஏகோபித்து அவரின் பின்னால் திரண்டார்கள்.

அவருடைய சுறுசுறுப்பும் - துணிவும் - மனித நேயமும் எதிராளிக்கும் நியாயம் வழங்கும் நீதியான பண்பும் - எந்த ஒரு மனிதனாலும் மறக்க முடியாதவை.



தொழிற்சங்கங்களூடாக மலையக மக்களுடன் ஏற்பட்ட நட்புறவு ஏற்படுத்திய மனத்தாக்கலின் செயற்பாடு தான் தங்கத்துரையின் மனதில் ஏற்பட்ட பதிலின் எதிரொலிதான்.

**புளியடிச்சோலை – கிராமம்**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப நன்ணணித் தலைவராகவும், அக்கட்சியின் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக இருந்த தங்கத்துரை ஏனைய அரசியல் வாதிகள் போல் வாய்ப் பேச்சின் வீரராக விளங்கவில்லை. புளியடிச்சோலை தமிழ் கிராமத்தின் தோற்றமும் தங்கத்துரையும்

அவருடைய செயற்திறன் மூலம் உருவான கிராமம் புளியடிச்சோலை தொடர் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட் மலையக மக்களுக்குப் புகலிடம் புளியடிச் சோலைக் கிராமம். இன்று ஓர் தமிழ்கிராமமாக இருப்ப[illegible] தெற்கு மக்களுமே. காரண[illegible]' பேசுவோர் மூதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்து எந்த ஆதரவையும் முன்பு தரவில்லை இது உண்மையாகும்.

**மூதூர் தெற்கு மக்கள்**

கிளிவெட்டி, கங்குவேலி, மல்லிகைத்தீவு, மணற்சேனை, பெருவெளியிலிருந்து மாட்டு வண்டிகள் வந்தன. அரிசி மூட்டைகள் வந்தன. தொண்டர்கள் வந்து வீடு கட்டினார்கள் ஓலைகளால் வேயப்பட்ட வீடுகளில் உடன் பிறப்புகள் உயிர் வாழ்ந்தார்கள் - உறவோடு சங்கமித்தார்கள்.

இப்போது தமிழரசுக்கட்சியை தமது வீட்டுக் கட்சியாக மாற்றியுள்ள மூதூர் தெற்கு அரசியல்வாதியான திருவாளர் - துரைரெத்தினசிங்கம் அவர்கள் அப்பொது எங்கே இருந்தார் என மக்கள் கேட்கிறார்கள் - பதில் சொல்வாரா? மக்களே போலியை நம்பி ஏமாறாதீர்கள்.

புளியடிச்சோலை மக்கள் - நிதானித்து வாக்களிப்பீர்களா?

**சிறுநண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்
சில வேளை அதை வந்து கடல் கொண்டு போகும்
எறிகின்ற கடல் என்று மனிதர்கள் அஞ்சார்
எது வந்த போதும் என்ன அதை வென்று செல்வார்
நினைப்பதற்காக அல்ல உங்கள் நினைவிலே என்றும்
நிலைப்பதற்காக இதை எழுதுகிறேன்.**

இன்று ஒரு சபதம் எடுப்போம் எமக்கு தேவையான சரியான மனிதர்களுக்கு வாக்களிப்போம். எமது வாக்குகள் பெறுமதி யானவை இதுவே அரசியல் வாதிகளின் முதலீடாகும். எனவே உங்கள் வாக்குகள் உங்கள் தலைவிதியை தீர்மானிக்கும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.



**– – நேர்மையுடன்
எம்.இ.யோகேந்தரம்**

# சினிமுரசு

## திரை விமர்சனம்

### ஏ.எல். விஜய் இயக்கத்தில் வந்திருக்கும் "இது என்ன மாயம்" விக்ரம் பிரபு, கீர்த்தி சுரேஸ் நடிக்கும்



காதலைச் சொல்ல முடியாமல் தவிப்பவர்களுக்கு, காதல் கெமிஸ்ட்ரியை உண்டாக்கும் புதுமை யான தொழிலைச் செய்கிறார்கள் விக்ரம் பிரபுவும், நண்பர்களும். பிரபல தொழிலதிபர் நவ்தீப், தான் காதலிக்கும் பெண்ணைக் காட்டி, அவளை தன்னுடன் சேர்த்து வைக்கச் சொல்கிறார். இதற்காக ஒரு கோடி 'ரூபாய் தரவும் தயாராக இருக்கிறார். அவர் கைகாட்டும் பெண்ணான கீர்த்தி சுரேஸ் கல்லூரிக் காலத்தில் விக்ரம் பிரபுவால் காதலிக்கப்பட்டவர். ஒரு சின்ன பிரச்னை பூதாகரமாகிப் பிரிந்த காதல் அது. மாஜி காதலியை விக்ரம் பிரபு, நவ்தீப்புடன் சேர்த்து வைத்தாரா என்பது மீதி 'கதை.பிரிந்த காதலர்கள் மீண்டும் சந்திப்பதும், பிறகு வரும் நிகழ்வுகளுமாக நிறைய கதைகள் வந்துஇருந்தாலும், காதலர்களைச் சேர்த்து வைக்கும் அசைன்மென்ட், மாஜி காதலியை இன்னொருவருடன் சேர்த்து வைக்கும் பொறுப்பு, காதல் உடைந்திருந்தாலும் மனதின் அடி ஆழத்தில் ஈரத்துடன் இருக்கும் முதல் காதல் என்கிற திரைக்கதை மூலம் காதலைச் சொல்லியிருக்கிறார்கள்.

கல்லூரிப் பருவத்தின் காதல் உணர்வைக் கொண்டு வர விக்ரம் பிரபு லேசாகத் திணறியிருந்தாலும், பல வருடங்களுக்குப் பிறகு தன் காதலியைச் சந்திப்பதும், அவளை இன்னொருவருடன் சேர்த்து வைக்க வேண்டிய சூழ்நிலையையும், அதைத் தடுக்க ஏற்பாடுகளைச் செய்வதுமாக ஸ்கோர் பண்ணுகிறார். கீர்த்தியும், நவ்தீப்பும் சேர இவர்கள் போடும் ஒவ்வொரு பிளானும் 'பல்பு' வாங்கும் போது, ஒரு சின்ன புன்னகையைக் கடக்க விடுவது அழகு.

கீர்த்தி சுரேஸ் தமிழுக்கு அழகு வரவு. நடிப்பும் நன்கு வருகிறது. தன்னை தவறாகப் புரிந்துகொண்டு விக்ரம் பிரபு காதலை முறிக்கும்போது உடைந்து நொறுங்குகின்ற காட்சியே போதும், கீர்த்தியின்



கீர்த்திக்கு.ஜி.வி.பிரகாஸ் குமாரின் இசையும், பாடலும், நீரவஸாவின் ஒளிப்பதிவும் காதலுக்கு கவிதைத்தன்மையைக் கொடுத்திருக்கிறது. பாடல் காட்சிகள் படமாக்கப்பட்ட விதம், கிரிக்கெட் வீரன் ஹாக்கி விளையாடும் நேர்த்தி, அம்பிகா மற்றும் நாசரின் கேரக்டர் செதுக்கல், ரசிக்க வைக்கிறது. எனினும் விக்ரம் பிரபுவும், அவரது நண்பர்களும் செய்யும் தொழிலில் துளியளவு கூட லாஜிக் இல்லை.

எல்லாமே கைப்புள்ள விளையாட்டு. படத்தின் மையக்கரு, காதல் பிரிவு. அதற்கு வலுவான காரணம் இல்லை. இன்னொருத்திக்காக கீர்த்தி தன்னிடம் நெருங்கிப் பழகியதை விக்ரம் பிரபு ஏற்க முடியாமல்தான் பிரிகிறார். விக்ரம் பிரபுவே இன்னொருவனுக்காகத்தானே கீர்த்தியிடம் பழக ஆரம்பிக்கிறார். கடைசி நிமிட அந்த திருப்பம். உண்மையிலேயே மாயம்தான்.

## 10 எண்றதுக்குள்ள டீசர் வெளியீடு – கடா மீசையுடன் கலந்து கொண்ட விக்ரம்

விக்ரம், சமந்தா நடித்துள்ள 10 எண்றதுக்குள்ள படத்தின் டீசர் இன்று சென்னையில் வெளியிடப்பட்டது.

கோலிசோடா படத்தை இயக்கிய விஜய் மில்டன் இயக்கியிருக்கும் படம், 10 எண்றதுக்குள்ள. ரோடு மூவி வகையைச் சேர்ந்த இந்தப் படத்தை குறுகிய காலத்தில் முடிக்கும் திட்டத்தோடு எடுத்தனர். தயாரிப்பு முருகதாஸ் மற்றும் ஃபாக்ஸ் ஸ்டார் ஸ்டுடியோ. பல பிரச்சனைகளால் படப்பிடிப்பு தாமதமாகி படம் இன்னும் முடியாமல் உள்ளது. படத்தின் கிளைமாக்ஸ் காட்சியை ராஜஸ்தானில் படமாக்க உள்ளனர். இன்று நடந்த டீசர் வெளியீட்டு விழாவில் கடா மீசையுடன் விக்ரம் கலந்து கொண்டார். ஆனந்த் சங்கரின் இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் புதிய படத்தின் கெட்டப் என இது கூறப்படுகிறது.



வாசுவும் சரவணனும் ஒன்னா படிச்சவங்க திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்



## குண்டு அனுஷ்காவை புகழ்ந்த சமந்தா

அனுஷ்கா நடிப்பில் தற்போது உருவாகி வரும் படம் 'இஞ்சி இடுப்பழகி'. இதில் அனு'கா ஆர்யாவுக்கு ஜோடியாக நடித்து வருகிறார். இதில் அனு'கா குண்டான பெண்ணாக நடித்து வருகிறார். இதற்காக அவர் 15 கிலோவுக்கு மேலாக உடல் எடையை கூட்டியிருப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில் இன்று இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி இருக்கிறது. இதைப் பார்த்த சமந்தா அனு'காவை புகழ்ந்து கூறியிருக்கிறார்.

சமந்தா கூறும்போது, 'தற்போது கதாநாயகிகள் கிளாமருக்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் நிலையில், அனு'கா தன்னுடைய உடல் எடையை கூட்டி நடித்திருப்பது மிகவும் ஆச்சரியத்திருக்குரியது. தன்னால் முடிந்த அளவுக்கு படத்திற்கான ஒத்துழைப்பை கொடுத்து வருகிறார். படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அனுஷ்கா அக்கா சிறப்பான தோற்றத்தில் இருக்கிறார். படத்தை எதிர்பார்த்து காத்திருக்கிறேன்' என்றார்.

'இஞ்சி இடுப்பழகி' படம் அக்டோபர் 2ம் தேதி வெளியாக இருக்கிறது.

## விஜய் சேதுபதியுடன் மோதும் ஆர்யா

விஜய் சேதுபதி நடிப்பில் சமீபத்தில் வெளியான படம் 'ஆரஞ்சு மிட்டாய்'. இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து விஜய் சேதுபதி நடிப்பில் வெளியாகவுள்ள படம் 'நானும் ரவுடிதான்'. இதில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நயன்தாரா நடித்திருக்கிறார். இப்படத்தை காந்தி ஜெயந்தியன்று (அக்டோபர்-2) வெளியாக இருக்கிறது.



இதே தேதியில் ஆர்யா நடிப்பில் உருவாகி வரும் 'இஞ்சி இடுப்பழகி' படமும் வெளியாக இருக்கிறது. இந்த படத்தை இதில் ஆர்யாவிற்கு ஜோடியாக அனு'கா நடித்துள்ளார். இதில் அனு'கா மிகவும் குண்டான பெண்ணாக நடித்து வருகிறார்.

## ரஜினியின் கண்ணபிரான்?

ரஜினி புதிய படத்தில் நடிக்கிறார் என்றாலே அதற்கு ரசிகர்களிடம் தனி எதிர்ப்பார்ப்பு இருக்கும். இப்போது ரஞ்சித் இயக்கும் புதிய படத்தில் ரஜினி நடிக்க இருக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

MOBILE

## சில பயனுள்ள Run command

சில பயனுள்ள Run command பொதுவாக அனைவருமே Run option ல் சென்று சில settings கள் செய்வோம் அப்பபடிப்பட்ட சில command களின் பட்டியல் உங்கள் பார்வைக்கு...




1)Accessibility Options : access.cpl
2)Add Hardware : hdwwiz.cpl
3)Add / Remove Programs : appwiz.cpl
4)Administrative Tools :control admintools
5)Automatic Updates : wuaucpl.cpl
6)Wizard file transfer Bluethooth : fsquirt
7)Calculator : calc
8)Certificate Manager : certmgr.msc
9)Character : charmap
10)Checking disk : chkdsk
11)Manager of the album (clipboard) : clipbrd
12)Command Prompt : cmd
13)Service components (DCOM) : dcomcnfg
14)Computer Management : compmgmt.msc
15)DDE active sharing : ddeshare
16)Device Manager : devmgmt.msc
17)DirectX Control Panel (if installed) : directx.cpl
18)DirectX Diagnostic Utility : dxdiag
19)Disk Cleanup : cleanmgr
20)System Information : dxdiag
21)Disk Defragmenter : dfrg.msc
22)Disk Management : diskmgmt.msc
23)Partition manager : diskpart
24)Display Properties : control desktop
25)Properties of the display: desk.cpl
26)SFC (Scan next startup) : sfc / scanonce
27)SFC (Scan each démarraget) : sfc / scanboot
28)SFC (back to default settings) : sfc / revert
29)Telnet client : telnet
30)User Accounts : nusrmgr.cpl

INFOMATION TECHNOLOGY


## பென் டிரைவில் எந்த மென்பொருளுமின்றி வைரஸை நீக்க



சுலபமாக தகவல்களை கையாள நமக்கு துணைபுரிவது இந்த பென் டிரைவாகும். இதனை பல கணினிகளில் பயன்படுத்துவதன் மூலம் வைரஸ் சுலபமாக வந்துவிடுகிறது. இது போன்று வைரஸ் உள்ள பென் டிரைவினை திறக்கவோ அல்லது தகவல்களை ஏற்றவோ அல்லது இறக்கவோ முடியாது. அது எவ்வாறு என காணலாம். பென் டிரைவினை கணினியில் இணைத்தப்பின் செய்யவேண்டியது 01. START ------> RUN சென்று அதில் CMD என டைப் செய்து நுவேுைசு கீயினை அழுத்தவும் 02. இப்பொழுது Command Prompt திறக்கும். அடுத்து பென் டிரைவ் கணினியில் எந்த டிரைவில் உள்ளது என அறிந்துகொண்டு Command Prompt-y; அந்த டிரைவிற்கு செல்லவேண்டும். (உ.ம்) H டிரைவ் எனில் H : \> என மாற்றிக்கொள்ள வேண்டும். 03. பின்பு H :\ >attrib s h /s/d *.* என டைப் செய்யவேண்டும். சரியான இடைவெளியுடன் டைப் செய்தது உறுதிசெய்தவுடன் ENTER கீயினை அழுத்த வேண்டும். பின்பு சிறிது நேரம் கழித்து பென் டிரைவினை திறந்து பார்த்தால் அனைத்து தகவலும் நமக்கு கிடைக்கும்.

## 70% குறைவாக தண்ணீர் செலவு செய்யும் புதிய வகை சவர்

OTHER




வீட்டில் உள்ள டெட்டால் ஹேண்டு வா' , ஏரியல் , துணி, துவைக்கும் சோப்பு, குளிக்கும் சோப்பு, சவர், பாத்திரம் தேய்க்கும் சோப்பு, பேஸ்ட், சாம்பு இவை எல்லாம் நம் தண்ணீர் பயன்பாட்டை பலமடங்கு செலவு செய்ய வைக்கிறது.மேற்ச் சொன்ன பொருட்களில் அனேக பொருட்களை மூன்று நிறுவனங்கள் மட்டுமே உலக அளவில் விற்பனை செய்து வருகின்றன. □□இவற்றுள் குளிக்க பயன்படும் சவர் வழியே வரும் தண்ணீரை சுமார் 70% வரை குறைத்து வழங்கும் புதிய வகை சவர் மூடி ஒன்றை நீபியா எனும் நிறுவனம் தயாரித்துள்ளது.

இந்த சவர் மூடி நிறுவனத்தில் ஆப்பிள் நிறுவனத்தின் தலைமை அதிகாரி Tim Cook & கூகள் முன்னாள் தலைமை அதிகாரி Eric Schmidt போன்றோர் முதலீடு செய்துள்ளனர்.

## COMPUTER என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியுமா?

நாம் எத்தனையோ ஆண்டுகளாக COMPUTER பயன்படுத்தி வருகிறோம். ஆனால் இன்னும் சிலருக்கு COMPUTER "ன் முழு பெயர் தெரியவில்லை. அவர்களுக்காக இதை எழுதுகிறேன்.

C - Common
O - Oriented
M - Machine
P - Particularly
U - Used for
T - Trade
E - Education and
R - Research



## தமிழில் HTML கற்றுக்கொள்ள

இணையம்(Internet) என்பது இன்று உலகில் எல்லோராலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இணையத்தில் உலாவ சிறிது ஆங்கில அறிவும், அடிப்படைக் கணினி அறிவும் இருந்தாலே போதும். யார் வேண்டுமானாலும் சுலபமாக இணையத்தைப் பயன்படுத்தலாம் என்கிற நிலை. அதுவும் இப்போது தமிழிலேயே ஏறக்குறைய அனைத்துச் செயல்பாடுகளையும் மேற்கொள்ளலாம் என்பதால் இன்று நாட்டில் உள்ள ஒவ்வொருவரையும் இணையம் பரவி விரிந்து நிற்கிறது என்பதுதான் உண்மை.

இணையம் என்பது என்ன?
இணையப் பக்கம்(Web Page) என்பது என்ன?
இதற்கான அடிப்படை என்ன?
இது எப்படி உருவாக்கப்படுகிறது?

என்பதைப் பற்றிப் பார்ப்போம். முதலில் இணையப் பக்கம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

இணையப் பக்கம் உருவாக்க அடிப்படையானது HTML. இதன் விரிவாக்கம் Hypertext Markup Language என்பது. நாம் காணும் ஒவ்வொரு இணையப்பக்கமும் இந்த HTMLலைப் பயன்படுத்தித்தான் உருவாக்கப்படுகிறது. இணையப் பக்கம் உருவாக்க நிறையமொழிகள் இருப்பினும் இதுதான் அடிப்படை.இன்னும் எளிமையாக சொல்வதென்றால் நீங்கள் பார்க்கும் இணையப்பக்கத்தினை ரைட் கிளிக் செய்து View Page Source அல்லது Page Source என்பதை கிளிக் செய்தால் ஒரு பக்கம் தோன்றும். அதில் உள்ளதுதான் இணையப்பக்கத்திற்கான அடிபபடையாகும்HTML கட்டமைப்புடன் கூடிய நிரல் வரிகள் (Codings) எனப்படும். இணையப்பக்கத்திற்கான நிரல் வரிகள்





இணையதளங்களின் பக்கங்கள் மற்றும் படங்கள் அனைத்தும் இத்தகைய கோடிங்களாலேயே எழுதப்பட்டுள்ளன. பிறகு அதை நமக்கு (visual) (படங்களாக, எழுத்துக்களாக) மாற்றி அமைக்கப்பட்டு, கணினித்திரையில் இவ்வாறு இணையதளப் பக்கங்கள் காட்டப்படுகிறது.



தமிழில் HTML தொடரும்...

## நம் வலைப்பதிவை வேறொரு வலைபதிவிற்கு திருப்பிவிடுவது எப்படி?



நாம் உருவாக்கிய வலைப்பூவை ஒவ்வொரு இடுகையாக பொறுமையாக புரியும்படியாக எழுதி பிரபலமாக்கு-வதற்கு பட்ட கஸ்டம் நமக்குதான் தெரியும். அதில் ஏதாவது பிரச்சனை ஏற்ப்பட்டால் நாம் இத்தனை காலம் சேர்த்த நண்பர்கள் மற்றும் வாசகர்களையும் இழக்கநேரிடும். நமது நண்பர்கள் மற்றும் வாசகர்களுக்கு நமது பழைய வலைப்பதிவின் Address "தான் தெரியும். நாம் புதிய வலைப்பதிவு ஒன்று உருவாக்கி அதை பிரபலமாக்குவதர்க்குள் போதும் போதும் என ஆகிவிடும். அதனால் நமது பழைய வலைப்பதிவை புதிய வலைபதிவிற்கு திருப்பிவிடுவது எப்படி என்பதை பார்க்கலாம். இதனால் நமது பழைய வலைப்பதிவின் வாசகர்களை இழக்காமல் இருக்கலாம்.

## கணனி பற்றி கண்ணோட்டம் - அதன் வரலாறும், ஏற்பட்ட மாற்றங்களும்

அந்தவகையில் இன்றைய அறிவுப்பிரவாகம் பிரகாசித்துக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் வாழும் நாம் உலகின் மாற்றங்களுக்கு ஏற்ப நாமும் மாறிக் கொண்டு செல்லவேண்டியது நமது கட்டாயமாகும். அனைத்துத் துறைகளிலும் தொழிற்நுட்பத்தின் அபரிதமான வளர்ச்சி வேகத்துடன் சென்று உடனடியான பெறுபேற்றைத் தந்து கொண்டிருக்கும் அறிவுப்புரட்சியினை உள்வாங்கிக் கொண்டு பாடசாலைகளும் மாணவர்களின் கற்றலுக்குத் துணையாக இந்த கணனியின் ஊடாக கற்றலை மேற்கொள்வதற்கு ஆசிரியர்கள் தங்களைத் தயார்படுத்த வேண்டியும் உள்ளது. நவீன தொழிற்நுட்பத்தின் வளர்ச்சி வேகத்திற்கு ஈடுகொடுக்கக் கூடிய மாணவர்களைக் கொண்டுள்ள இன்றைய பாடசாலைகளில் அதற்கேற்றவாறு கற்பித்தல் முறைகளிலும் மாற்றங்களைக் கொண்டுவந்து கற்பிப்பதற்கு தங்களைத் தயார்படுத்த வேண்டியும் உள்ளது.

அந்தவகையில் பார்க்கின்றபோது அரசும் இன்றைய அசுரவேகத்தின் அடிப்படையில் மாணவர்களது மேம்பாட்டிற்குரிய சகலவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

அந்த அடிப்படையில் பார்க்கின்றபோது, போட்டிகரமான கல்வி முறைமையில் புத்தகங்களினால் பெறும் கல்வி மாத்திரம் தனிநபர் முன்னேற்றத்துக்கு காரணமாக அமையாது என்பதனை புரிந்துகொண்டு ஆக்கதிறனுக்கு சந்தர்ப்பம் வழங்கக் கூடிய வகையில் பிரயோக கற்றல் முறையினை பயன்படுத்தி பிள்ளைகளை அதில் ஈடுபடுத்தக் கூடிய மஹிந்தோதய 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தில் அடிப்படை உள்ளீடான மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை நிர்மானித்தல் மற்றும் அதற்கு தேவையான நவீன உபகரணங்களை வழங்குதலும் ஆசிரியர் வளத்தை வலுவூட்டுவதும் கடந்த 2013ம் ஆண்டில் கல்வி அமைச்சினால் எட்டப்பட்ட செயற்சாதனைகளின் முக்கிய அம்சங்களாகும்.

இதனை வெற்றிகரமான முறையில் அடைந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே இந்த வசதிகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.



தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் 66

# அடாவடித்தனங்கள் அதிகரிப்பதேன்??

(வி.என்.சந்திரகாந்தி)



எவருக்காகவும் எவரும் எதையும் செய்ய தயாரில்லை. எவரைப்பற்றியும் எவருக்கும் எந்த அக்கறையும் கிடையாது. எவர் துன்பத்தையும் எவரும் பங்குகொள்ள தயாரில்லை. அப்படியான ஒரு சூழ்நிலையில் தான் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சொல்லப்போனால் அடாவடித்தனங்கள் அதிகரிப்பதற்கேற்ற அடிப்படைச் சூழலும் இது தான். சற்று யோசியுங்கள். முற்கூறிய மூன்று நிலைப்பாடுகளும் இல்லாவிட்டால் அடாவடித்தனங்கள் நிலைப்பது எங்ஙனம்?

இன்னும் சொல்லப்போனால் சட்டமும் சமூகமும் கொடுக்கும் இடம்தான் அடாவடித்தனங்களின் அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக காணப்படுகின்றன. சட்டம் இறுக்கமாக இருந்தால் எவரும் குற்றச் செயல்களில் ஈடுபட தயக்கம் காட்டுவர். சட்டம் தளர்வாக இருப்பதனாலேயே குற்றச் செயல்களை செய்து விட்டு இலகுவாக தப்பித்து விடலாம் என்ற எண்ணம் ஏற்படுகின்றது. சட்டம் ஒரு இருட்டறை என்று கூறுவதன் பொருள் அங்கு என்ன நடக்கின்றது என்று தெரியாமையால் போலும்! குற்றவாளிகள் விடுவிக்கப்படுவதும் சுற்றவாளிகள் தண்டிக்கப்படுவதும் அடாவடித்தனங்களில் ஈடுபடுவோருக்கு உற்சாகத்தைத்தான் கொடுக்கும். இனி சட்டம் வாய் பேசா மௌனியாக இருப்பது அவர்களுக்கு மேலும் வரப்பிரசாதமாகவே இருக்கும்.

திருட்டு ஒரு குற்றச்செயல். நாட்டில் இது நடைபெறாமல் இருக்க வேண்டுமாயின் சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய பொலிசார் முதலில் அவதானிப்புடனும் கண்காணிப்புடனும் இருந்து அக் குற்றச் செயல் நிகழ்வதை தடுக்க வேண்டும். காவல் துறையினர் என்று பெயர் வைத்துக்கொண்டால் போதாது. நாட்டு மக்களுக்கு தீங்கு நேராதபடி அவர்கள் காவலாக இருக்க வேண்டும்.

குற்றச்செயல்கள் என்று இனம் காணப்படுபவற்றைத்தான் இங்கு அடாவடித்தனங்கள் என்று குறிப்பிடுகின்றோம். பிரதானமாக கொலை, கொள்ளை ஆட்கடத்தல், பாலியல்வல்லுறவு, சொத்துக்களுக்கு சேதம் உண்டுபண்ணுதல். மனித அவயவங்களுக்கு ஊறு விளைவித்தல் ஆகிய வன்செயல்களை நடைபெறவிட்டு பின்னர் சட்டத்தால் தண்டிப்பதால் பெரிய அளவில் பயனென்ன?.

குற்றச் செயல்கள் என்ன நேரத்தில் நடைபெறுகின்றன.எப்படியான பிரதேசங்களில் நடைபெறுகின்றன.எப்படிப்பட்டசமூக அமைப்பில் இடம்பெறுகின்றன என்பதை காவல்துறையினர் அறிந்து வைத்திருக்க வேண்டும்.. சொல்லப்போனால் இரவு வேளைகளிலும் சனசந்தடி அற்ற இடத்திலும் மதுவை வாழ்வின் அம்சமாக கொண்ட சமூக பின்னணியிலுமேயே பல அத்து மீறல்கள் நடைபெறுகின்றன.

இரவு வேளைகளில் காவல்துறையினரின் வாகனங்கள் வழமையான பிரதான வீதிகளில் செல்வதை எம்மால் அவதானிக்க முடியும். அதனால் எந்த வித பயனும் இல்லை. குற்றவாளிகள் குறுக்கு ஒழுங்கைகளிலும் சந்து பொந்துகளிலும் மறைந்திருந்து விட்டு பொலிஸ் வாகனம் சென்ற பின்னர் தமது கைவரிசையை காட்டுவர். குறைந்தளவிலான சனநெரிசல் உள்ள இடங்களில் உதவிக்கு எவரும் முன்வரார். அப்படியான இடங்களில் வாகனங்களில் ரோந்து செல்வது எந்த பயனையும் உண்டுபண்ணாது. காவல் துறையினரின் கண்காணிப்பு இங்கு பிரதானம். மது போதைக்கு அடிமையானவர்கள் எப்போதும் அரசியல் வாதிகளையும் சட்ட அதிகாரிகளையும் கைக்குள் போட்டு வைத்திருப்பர். அவர்களை மிகுந்த கடமை உணர்வுடன் கண்காணித்தால்தான் அவர்கள் குற்றமிழைப்பதை தடுக்க முடியும்.

அடுத்து ஒரு குற்றச் செயல் நடைபெறுவது பற்றி பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு வழங்கினால் அவர்கள் அது சம்பந்தமாக விரைந்து நடவடிக்கை எடுப்பதில்லை. அச்சம்பவம் பற்றி பிழையான வியாக்கியானங்களை முறைப்பாடு கொடுக்க சென்றவர்களுக்கு வழங்கிக்கொண்டிருப்பர். உதாரணமாக ஒரு பெண்ணை காணவில்லை என்று முறைப்பாடு கொடுத்தால் பொலிஸாரின் ஊகம் அவள் காதலுடன் ஓடிப்போய்விட்டாள் என்பதாக அமையும். அதே போன்று இரு சமூகங்களுக்கிடையே உக்கிரமான சண்டை நடைபெற்றுக்கொண்டிருப்பதாக முறைப்பாடு போகின்றது. தவிர அடிபாடு நடைபெற்று கொண்டிருக்கும் போது அங்கு போனால் தமக்கும் வாள் வீச்சு விழக்கூடுமென்ற பயம். சட்டத்தின் காவலர்களின் மந்த தன்மை காரணமாக அந்நேர அவகாசத்தில் ஒரு பெண் பலரால் வல்லுறவுக்கு உட்பட்டிருப்பாள்.

காவல்துறையினரின் அரச நடமாடும் சேவைப்பிரிவு ஒன்று உண்டு. ஏதாவது ஒரு குற்றச்செயல் நடைபெறுவது பற்றி நீங்கள் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் வழங்கினால் அவர்கள் சம்பவ இடத்துக்கு வருவார்கள். அநேகமாக அது காலம் தாழ்த்திய வரவாகத்தான் இருக்கும். நான் அறிய ஒரு சம்பவம் நடந்தது. ஒரு திருடன் ஒரு சாமத்தில் ஒரு வீட்டுக்குள் நுளைந்து விட்டான். வீட்டுக்காரர் மற்றும் அயல் வீட்டு இளைஞர்கள் அவனை துரத்திப்பிடித்து நன்றாக அடித்தும் விட்டார்கள். அவர்களில் ஒருவன் பொலிஸ் நடமாடும் சேவைப்பிரிவிற்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி விபரங்களை கூறிவிட்டான். பொலிஸார் வருவதாக கூறிவிட்டாலும் நீண்ட நேரமாக வரவில்லை. அதற்குள் செய்தி அறிந்த ஊரார் புதினம் பார்க்க வந்ததுடன் அத் திருடனுக்கு அடிக்கவும் செய்தனர். திருடன் களைத்து மயக்கமுற்று நிலத்தில் படுகிடையாக விழுந்துவிட்டான். சிலருக்கு அவன் இறந்து விட்டானோ என்ற சந்தேகம் வரத்தொடங்கியது. கூட்டம் மெதுவாக விலகத்தொடங்கியது. காவல்துறை குறிப்பிட்ட இடத்திற்கு வந்து பார்த்தபோது கூட்டத்தை காணவில்லை திருடன் உட்பட...!

அடாவடித்தனங்களின் அதிகரிப்பிற்கு சட்டம் மட்டும் தான் பொறுப்பாக முடியாது. ஒரு சமூகத்தின் பொறுப்பற்ற தன்மை பெரும் அபத்தங்களுக்கும் சீரழிவுகளுக்கும் காரணமாக இருக்கின்றது. சுயநலமே பிரதானம் என்று மட்டும் வாழும் சமூகத்தில் தான் வன்முறைகள் அதிகரித்து காணப்படுகின்றது. பக்கத்து வீட்டுக்காரனுக்கு உணவில்லை என்றால் அவனுக்கும் சேர்த்து சமைக்கும் பண்பு என்று ஒரு சினிமா பாடல் வரி வருகின்றது. இந்த வரி எப்படி நெஞ்சை தொடுகின்றது என்று பாருங்கள். சமூகபரிவும் அப்படித்தான் இருக்க வேண்டும். ஒரு கிராமத்தில் யாரோ விசமிகள் இடையிடையே ஒரு குறிப்பிட்ட வீட்டுக்கு கல்லெறிந்து வந்தார்கள். அந்த விஷமிகளை கண்டுபிடிக்க எவரும் ஒத்துழைப்பு வழங்கவில்லை. ஒரு நாள் வீட்டுக்காரன் ஒரு உத்தியை மேற்கொண்டான். விஷமிகள் தனது வீட்டிற்கு கல்லெறிந்த சமயம் அவன் அயலிலிருந்த அத்தனை வீட்டிற்கும் தானே கல்லெறிந்தான். இப்போ கல்லெறி விழுந்த அத்தனை வீட்டுக்காரரும் ஒன்று சேர்ந்து விஷமிகளை துரத்தி பிடித்துவிட்டனர். அதுதான் சமூக ஒற்றுமை!

சமூகம் ஒற்றுமையாகவும் கண்காணிப்புடனும் இருந்தால் எவரால்தான் அவர்களுக்கு தீங்கை உண்டு பண்ண முடியும்?

அடாவடித்தனங்கள் அதிகரிப்புக்கு திட்டமிடப்பட்ட சதிகளும் காரணமாக இருக்கின்றது. போதைப்பொருளின் விநியோகம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதால் மக்கள் குறிப்பாக இளைஞர்கள்,மாணவர்கள் அவற்றின் பாவனையை அதிக அளவில் மேற்கொண்டுள்ளனர். அவர்கள் வாழ்கையை அனுபவிப்பதாக கூறிக்கொண்டு குற்றசெயல்களில் ஈடுபடும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன. அக்காலத்தில் மன்னர்களின் இடுப்பில் வாள் தரித்திருப்பர். இக்காலத்தில் இளைஞர்கள் எந்த ஒரு தகுதியுமின்றி கையில் ஆளுக்கொரு வாளேந்தி போதை தலைக்கேறிய நிலையில் அலைந்து திரிகின்றார்கள். இவர்களின் கையில் பணம் எப்படி புழக்கத்தில் உள்ளது? அது சட்டபடியானதா? ஏமசாமத்தில் வீட்டுக்கு வெளியே இவர்கள் என்ன அலுவலில் ஈடுபடுகின்றார்கள்? என்பதை பெற்றோர் அறிந்து அவர்களை பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும்.

இனி வெளிநாடு சென்று அங்கு சிலகாலம் தங்கி நன்கு உழைத்து பணத்தை சேமித்த எமது இளைஞர்கள் பலர் தம்மை தாய்நாட்டு மோகம் இழுக்கின்றது என்றும் நண்பர்களின் நினைப்பு வாட்டுகின்றது என்றும். பனங்கள்ளின் சுவை பாடாய்ப்படுத்துகின்றது என்றும் கூறிக்கொண்டு விடுமுறையில் இங்கு வருகின்றார்கள். வரும் போது உயர் ரக குடிவகையை நட்பின் சின்னமாக எடுத்துவருகின்றார்கள். இங்கு வந்ததும் அவர்களது நட்பு வட்டம் அவர்களை சூழ்ந்துகொள்கின்றது. பணம் வாரி இறைக்கப்படுகின்றது. அவையெல்லாம் சேர்ந்து. அவர்களை குற்ற செயல் புரிய தூண்டுகின்றன.

எங்கள் பெண் பிள்ளைகளை நாங்கள் எங்கள் சொத்து என்று எண்ணுவது போல சமூகத்தில் உள்ள ஒவ்வொரு பெண்பிள்ளைகளையும் நாம் எங்கள் சொத்தாக எண்ணினால் எந்தப்பெண்ணுக்கும் எந்த தறுதலைகளாலும் தீங்கு உண்டு பண்ண முடியாது!

# கடந்து போகவும் கற்றுக்கொள்!!

## சஞ்சயன் செல்வமாணிக்கம்

நேற்றிரவின் அமைதியில் உறங்கிப் போவதற்காய் மின் விளக்குகளை அணைத்த பின் கட்டிலில் சாய்ந்து கொண்டேன். இருள் மெதுவாய் கண்ணுக்குப்

பழகிய பின் இருளையும் ஊடுருவிப்பார்க்க முடிந்தது. இருளின் இருளை மனதும் நுகர்வதாய் உணரத் தொடங்கினேன். எங்கும் இருள் எதிலும் இருள். இருண்ட காற்றும் சுவாசத்தினூடே உடலினுட் சென்று உயிர் வரை இருளை உணர்த்திற்று. என்றுமே



இருளை நான் இவ்வளவு அருகாமையில் ரசிக்கவில்லையோ என்று எண்ணுமளவிற்கு அந்த அனுபவம் அமைந்திருந்தது. தொடுகைக்கு அப்பாற்பட்டதாய் இருள் இருப்பினும் கூட இருளை மனதால் நுகரமுடிந்தது.

கட்டிலில் சாய்ந்திருந்த படியே இருளைப் பார்த்திருந்தேன். ஏதேதோ எண்ணங்கள் வந்து போயின. அழகான காட்சிகள் தொடக்கம் அசிங்கமான நினைவுகள் வரை இருள் எனக்குள் மிகுதியாய் இருக்கும் நினைவுகளை மீட்டிக் கொண்டிருந்தது. நான் கடந்திருக்கும் 46 வருடங்களில் இடங்கள், மனிதர்கள், நாடுகள் என்று தொடங்கி காதல், வாழ்க்கை, குழந்தைகள், வீட்டுக்கு வீடு வாசற்படிப் பிரச்சனைகள் என்று அனைத்தையும் கடந்த களைப்பில் கட்டிலில் படுத்திருப்பது போலிருந்தது.

மனதின் அயர்ச்சி என்பது உடலின் அயர்ச்சி போன்றதன்று. உடலின் அயர்ச்சியை உணவும், இளைப்பாறுதலும் போக்கிவிடுகிறது. ஆனால் மனதின் அயர்ச்சியை கடந்து செல்வதென்பது அவ்வளவு எளிதானதன்று. சாண் ஏற முழம் சறுக்கும் விதியின் விசித்திரமான விளையாட்டு அது. ஆண்டுகள் பல கடந்த பின்பும் மன அயர்ச்சியை கடக்காதவர்கள் பலர் இருக்கிறார்கள்.

"கடந்து போகவும் கற்றுக் கொள்". அதன் உள்ளர்த்தத்தின் வீரியம் எத்தகையது என்பதை அதை அனுபவித்தால் மட்டுமே உணரமுடிகிறது.

கடந்து போவது என்பது இலகுவானது அன்று. பிரஞ்ஞை பூர்வமாக சுயவிமர்சனத்துடன் இறந்த காலங்களை கடந்து கொள்வதே புத்திசாலித்தனமாக இருக்கும் என்பது எனது கருத்து. கடந்து வந்த காலத்தை கடந்து கொள்ள அசாத்திய மனத்துணிவும், மனத்திடமும் வேண்டும்.

காலம் என்பது எம்முடன் எப்போதும் வாழ்ந்து கொண்டிருப்பது போலவே உணர்கிறேன். கடந்த காலத்தின் சில செயல்கள், எச்சங்கள், நினைவுகள், உறவுகள் என்று பலவும் ஒரு மெல்லிய நூலைப் போன்று வாழ்க்கைக்காலம் முழுவதும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அவை சுவையானதாயும் சுமையானதாயும் இருக்கும். வாழ்க்கை முடியும் போது அந் நூலும் அறுந்து போகிறது.

இலங்கையில் நான் இருந்த காலங்களில் ஒரு வயதான பெண் ஒருவர் இருந்தார். அவருக்கும் கணவருக்கும் பல பல ஆண்டுகளுக்கு மேலாக பேச்சுவார்த்தை அற்றுப்போயிருந்தது. ஒரே வீட்டில் வாழ்ந்தார்கள். கணவருக்கு நேரத்துக்கு உணவு, தேநீர் கொடுப்பார். அவர் சாய்மனைக்கதிரையில் இருந்தபடியே பத்திரிகையை மேலிருந்து கீழாகவும் பின்பு கீழிருந்து மேலாகவும் படித்துக் கொண்டிருப்பார். அவர்களின் குழந்தைகள் மணமுடித்து வெளியேறி இருந்தனர். இருவரும் நேருக்கு நேர் சந்திப்பதையும் தவிர்த்தார்கள்.

ஒரு நாள் அவரிடம் என்ன பிரச்சனை உங்களுக்கிடையில் என்றேன். இவை விளங்கும் காலம் உனக்கும் வரலாம். இப்போது புரியாது என்றார். ஒன்றும் புரியாது நின்றிருந்தேன் நான். ஆனால் தற்போது அவர் பேச்சின் ஆழம் புரியும் ஞானம் கிடைத்திருக்கிறது. அவரும் அவரின் மனைவியும் அந் நாட்களில் தனது கடந்த காலத்தைக் கடந்துகொள்ள முடியாது தடுமாறிக்கொண்டிருந்தார்கள் என்பது இப்போது தான் புரிகிறது.

**"திறன் அல்ல தன் – பிறர் செய்யினும், நோ நொந்து,**
**அறன் அல்ல செய்யாமை நன்று"**

எம்மில் எத்தனைபேர் இந்தக் குறளின் அர்த்தம் உணர்ந்து வாழ்கிறோம். பலரும் கடந்த காலத்தை ஈரமான துணிமூட்டை போன்று காலமெல்லாம் தோளில் சுமந்து திரிகிறோம். அதை உலர்த்தி வாழ்வின் பாரத்தை குறைத்துக்கொள்ளும் நோக்கமற்று.

"கடந்து போகவும் கற்றுக் கொள்" என்பது இலகு, அதை கடந்து போவது என்பது கடினம். அறையின் இருட்டினூடே இதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன். தூரத்தே வெளிச்சமாய் ஏதோ தெரிவது போலிருந்தாலும் அது கானல் நீராயிருக்குமோ என்றும் அஞ்சவேண்டியிருக்கிறது. நானும் மனிதனல்லவா.

இன்றைய நாள் நல்லதாயும் இருக்கலாம்

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனைவியை தீண்டாமை!!!!



தமது மனைவியருடன் உறவு கொள்வதில்லை என சத்தியம் செய்வோருக்கு நான்கு மாதங்கள் அவகாசமுண்டு. (அதற்குள்) அவர்கள் திரும்பிவிட்டால் நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன்ளூா நிகரற்ற அன்புடையவன்.'

அவர்கள் விவாகரத்து செய்வதையே தீர்மானமாகக் கொண்டால், நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் செவியுறுபவன்ளூா நன்கறிந்தவன்.' (2:226-227)

மனைவி மீதுள்ள கோபத்தின் காரணமாக அல்லது மனைவியைத் திருத்துவதற்காக உன்னைத் தீண்ட மாட்டேன் என சத்தியம் செய்வதுண்டு. இதற்கு 'அல் ஈழா' என்று கூறப்படும். இதை நல்லதற்குப் பயன்படுத்துவது போலவே சிலர் தவறான முறையிலும் பயன்படுத்தி வந்தனர்.

உன்னைத் தீண்ட மாட்டேன் என சத்தியம் செய்து, வருடக்கணக்கில் மனைவியை உடல் சுகத்தை விட்டும் ஒதுக்கி வைத்தனர். அதே நேரம் ஆண்கள், பிற மனைவியர் மூலம் தமது உடல் தேவையை நிறைவு செய்து கொண்டு குறித்த பெண்களைப் பட்டினி போட்டு பழி தீர்த்து வந்தனர்.

இஸ்லாம் இந்த நடைமுறையைத் தடுக்காமல் வரையறை செய்தது. ஒரு ஆண் தனது மனைவியைத் தீண்டுவதில்லை என்று சத்தியம் செய்து ஒதுங்கியிருப்பதாக இருந்தால் அதிகபட்சமாக நான்கு மாதங்கள் வரை ஒதுங்கியிருக்கலாம். அதற்கு மேல் ஒதுங்கியிருக்க ஆணுக்கு அனுமதியில்லை. அப்படி மனைவியுடன் இல்லறம் நடாத்தாமல் நான்கு மாதங்களுக்கு மேல் ஒதுக்கி வைத்தால் மனைவி இது குறித்து முறையிட்டு விவாகரத்துப் பெற்று வேறு வாழ்க்கையைத் தேடிக் கொள்ளலாம் என இஸ்லாம் கூறி பெண்கள் வஞ்சிக்கப்படுவதைத் தடுத்தது.

இதே வேளை நான்கு மாதங்கள் வரை ஒருவர் ஒதுக்கி வைத்தால் நான்கு மாதங்கள் முடிவதற்கு முன்னர் மனைவியுடன் சேர்ந்து இல்லறம் நடாத்த வேண்டும். இல்லையென்றால் நல்ல முறையில் விவாரத்து செய்துவிட வேண்டும். இது ஆண்களின் கடமையாகும்.

தொடரும் .. ..

– இஸ்மையில் –

# திருச்சபையின் வரலாறு

கடந்தவாரத் தொடர்ச்சி .. ..



ரோமன் கத்தோலிக்கர் கிளெமென்ட் ரோமில் பிசப்பாக இருந்ததாக ஒரு கதையைக் கட்டி விட்டுள்ளனர். தனது சபையில் மூப்பராக இருந்ததைவிட வேறு சபைகள் மீது கிளெமென்ட் அதிகாரம் செலுத்தியதாக வரலாறு இல்லை.

இந்நிருபத்தை அடுத்து எழுதப்பட்ட இரண்டு முக்கிய நிருபங்களாக 132 இல் எழுதப்பட்ட பார்னபஸ்சின் நிருபமும், மேய்ப்பன் என்ற பெயரில் ஹேர்மஸ் 140க்கும் 150 இடைப்பட்ட காலத்தில் எழுதிய நூலையும் குறிப்பிடலாம். இவை இரண்டும் வேதத்தைப் போதிப்பவையாக இல்லாமல் எல்லைமீறிய வெறும் கற்பனைகளாக உள்ளன. அப்போஸ்தலப் போதனைகளைக் கைவிட்டுவிட்டு இவை இரண்டும் மனித சிந்தனையின் எண்ணங்களை வெளிப்படுத்தும் நூல்களாக மட்டும் இருக்கின்றன.

இவற்றை அடுத்து வரலாற்றில் வரும் முக்கிய மனிதனாக அந்தியோகியாவின் பிசப்பாக இருந்த இக்னேஸியஸைக் குறிப்பிடலாம். 110க்கும் 117க்கும் இடைப்பட்ட காலத்தில் ரோமில் இக்னேஸியஸ் கொல்லப்பட்டார். மரணத்தைத் தழுவ ரோம் நகரை நோக்கிப் போய்க்கொண்டிருந்த வேளை இக்னேஸியஸ் ஏழு நிருபங்களை வெவ்வேறு சபைகளுக்கு எழுதினார். கிறிஸ்துவின் பிறப்பையும், பரிகாரப்பலியையும் பற்றி எழுதிய இக்னேஸியஸ் அக்காலத்தில் எழுந்த போலிப்போதனையான டொஸட்டிஸத்தை அதிகம் தாக்கி எழுதினார். இப்போதனை கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தபோது உண்மையான சரீரத்தைக் கொண்டிருக்கவில்லை என்றும், அவர் தன் வாழ்வில் அனுபவித்த துன்பங்கள் வெறும் மாயை என்றும் போதித்தது. இப்-போலிப்போதனையை எதிர்ப்பதற்கு சபைத்தலைமையின் அதிகாரத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சபைத்தலைமையின் அதிகாரத்தைக் கடவுளுடைய அதிகாரமாக கருத வேண்டும் என்றும் இக்னேஸியஸ் போதித்தார்.

தொடரும் .. ..

www.bible.me

# கறிவேப்பிலை சாதம்



**தேவையான பொருட்கள்**

சாதம் - 2 கப், கறிவேப்பிலை - ஒரு கப், நல்லெண்ணை – 1 தே.கரண்டி, கடலைப்பருப்பு - ½ தே.கரண்டி, உளுத்தம்பருப்பு - ½ தே.கரண்டி, கடுகு - ½ தே.கரண்டி, பெரிய வெங்காயம் - 1, மிளகுத்தூள் - ½ தே.கரண்டி, கறி மிளகாய் - 3, பெருங்காயம் - 1 சிட்டிகை, முந்திரி – 5, எலுமிச்சை - ¼ பழம், நெய் - 1 தே.கரண்டி, உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

சிறிதளவு நெய்யில் கறிவேப்பிலையை மொறுகலாக வறுத்து, மைய பொடித்துக்கொள்ளவும். அத்துடன் பெரிய வெங்காயத்தை பொடியாக நறுக்கிக்கொள்ளவும். அரிசியை சாதமாக வடித்து உதிரி உதிரியாக ஒரு அகன்ற பாத்திரத்தில் வைக்கவும். பின் அடுப்பில் தாச்சியை வைத்து எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு போட்டு வெடித்ததும், கடலைப்பருப்பு, உளுத்தம்பருப்பு போட்டு சிவந்ததும், கறி மிளகாய், ஒரு கொத்து கறிவேப்பிலைப் போட்டு தாளிக்கவும்.

பிறகு நறுக்கிய வெங்காயம் பெருங்காயத்தூள் சேர்த்து சிவக்க வதக்கவும். பிறகு பொடித்த கறிவேப்பிலையைப் போட்டு, உப்பு சேர்த்து வதக்கவும். அதனுடன் எலுமிச்சம்பழத்தை பிழிந்து சேர்க்கவும். பின்னர் அதனுடன் மிளகுத்தூள், நெய்யில் வறுத்த முந்திரியை சேர்த்து கிளறவும். பிறகு ஆற வைத்த உதிரியாக உள்ள சாதத்தைச் சேர்த்து சாதம் குழையாமல் நன்றாகக் கிளறி அடுப்பிலிருந்து இறக்கவும்.


**குறிப்பு:**

இதில் சிறிது இஞ்சி துருவலைச் சேர்த்து வதக்கினால் இன்னும் வாசனையாக இருக்கும்.

முந்திரிக்குப் பதிலாக, வறுத்த நிலக்கடலை, வறுத்த பொட்டுக்கடலை

– – – – – – – – – – – –

# லிப்பின் இரகசியம்



முகத்தின் அழகை பிரதிபலிக்கும். பொதுவாக உதடு மென்மையாகவும், குறிப்பாக சிவப்பாக இருக்க வேண்டும். இதற்கு தமது உதடுகளை முறையாக பராமரித்து வந்தாலே போதுமானது.

**உதடுகளை அழகாக்க :**

1) மழை மற்றும் குளிர் காலங்களில் உதடுகளில் வெடிப்பு ஏற்படாதவாறு உதடுகளில், 'வாசலின்' தடவிக் கொள்ளலாம்.

2) வெயில் காலத்தில் வைட்டமின், 'இ' சத்துகள் நிறைந்த, "சன்ஸ்கிரீன் லோ'ன்" போன்றவற்றை பயன்படுத்தலாம்.

3) தரமான லிப்ஸ் ஸ்டிக்கை பயன்படுத்தலாம். தரமற்ற மற்றும் தவறான முறையில் பயன்படுத்தப்படும் லிப்ஸ் ஸ்டிக்கால் உதடுகளில் வெடிப்புகள் ஏற்பட்டு தோல் உரிய வாய்ப்புள்ளது.

4) உதடுகள் காய்ந்திருக்கிறது என்று, அடிக்கடி எச்சிலால் உதட்டை ஈரப்படுத்தும் பழக்கம் பலருக்கு இருக்கும். அவ்வாறு செய்யும் போது உதட்டில் உள்ள ஈரப்பதம் குறைவதுடன், உதட்டில் புண்கள் ஏற்படலாம்.

# பிறந்த எண் பலன்கள் 6

ஏழாம் எண்ணில் பிறந்தவர்களின் சிந்தனை, செயல்பாடு, அணுகுமுறை யாவும் தனித்தன்மை வாய்ந்ததாகவே இருக்கும். தான் பிறர் வழியில் செல்லாது தனக்கென ஒரு பாணியை வகுத்துக் கொள்வது இவர்களின் நோக்கமாகும். இவர்களை அவ்வளவு எளிதில் புரிந்து கொள்ளமுடியாது. நல்லதோ கெட்டதோ பிறருக்காக தம்மை மாற்றிக் கொள்ளமாட்டார்கள். சில நேரங்களில் கலகலப்பாக மற்றவரை சிரிக்க வைக்கும் ஆற்றல் கொண்ட இவர்கள், சில நேரங்களில் அதிக மௌனத்தை சாதிப்பார்கள். தன்னம்பிக்கையும் துணிச்சலும் பெற்றவர்களாக இருந்தாலும், ஒருவித அச்சம் மனதில் நிறைந்திருக்கும். பல்வேறு விதமான வாய்ப்புகள் வாழ்வில் முன்னேறுவதற்கு கிடைத்தாலும், பிடிவாத குணத்துடன் தன் வழியிலே செல்வார்கள்.

# இவ்வார ராசிபலன்கள்


**மேஷம்** : புத்துணர்வுடன் பணிபுரிவீர்கள் திட்டங்கள் சிறப்பாக நிறைவேறும். பொது இடங்களில் நிதானமாக பேசுவதால், சிரமம் தவிர்க்கலாம்.


**ரிஷபம்** : தடைப்பட்ட செயல்கள் நிறைவேறும். இளைய சகோதரர்களின் உதவி கிடைக்கும். உறவினர்களின் வருகை, மகிழ்ச்சி தரும்.


**மிதுனம்** : மற்றவர்கள் வி'யத்தில் தலையிட்டால், பிரச்னை வரலாம். பணவரவு குறையலாம் என்பதால், அதற்கேற்ப செலவை திட்டமிடவும்.



**கடகம்** : பேச்சில் சத்தியம், வசீகரம் இருக்கும். எதிர் கொள்ளும் நிகழ்வு இனிதாக அமையும். உடன் பிறந்தவர்கள் செய்யும் செயலை குறை சொல்ல வேண்டாம்.



**சிம்மம்** : செயல்பாடுகள் சிறப்பாக அமையும். புதிய-வர்களின் அன்பு, உதவி கிடைக்கும். வீட்டில் மங்கள நிகழ்வு ஏற்படும்.


**கன்னி** : சவால் நிறைந்த பணிகளை, இனிய அணுகுமுறையால் நிறைவேற்றி விடுவீர்கள். செலவு அதிகரிக்கும்.


**துலாம்** : ஞானமும், செல்வமும் அதிகம் பெறுவீர்கள். தர்ம காரியங்களில் ஈடுபாடு வளரும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.


**விருச்சிகம்** :உறவினர், நண்பர்கள் உங்களை நன்கு உபசரிப்பர். கடந்த கால கஷ்டங்களுக்கு தீர்வு கிடைக்கும். பயணத்தின் போது பாதுகாப்பை பின்பற்றவும்.


**தனுசு** :தபுதிய பாதை கண்ணில் படும். மனதில் நம்பிக்கை கூடும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி, அதீத அன்புடன் நடந்து கொள்வார்.


**மகரம்** : பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வாகன பராமரிப்பு செலவு அதிகரிக்கும். உடல்நிலையில் பின்னடைவு நிலை தொடர வாய்ப்புண்டு. மாணவர்கள், தவறுகளை உணர்ந்து திருத்திக் கொள்வர்.


**கும்பம்** : ஆடம்பர செலவுகளை தவிர்க்கவும். எதிர்ப்பு விலகி, பணிகளில் முன்னேற்றம் உருவாகும். கடன் கொடுத்த பணம் வசூலாகும்.


**மீனம்** :தேவையற்றதைப் பேசுவோரிடம் இருந்து விலகவும். தகுதிக்கு மீறிய வாக்குறுதி எதுவும் தர வேண்டாம். உடல்நலம் பேணுவதில் உரிய கவனம் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அவசல்

# சுமந்திரனுக்குள் சுருங்கிவிடப் போகிறதா சுதந்திரப் போராட்டம்

**ஓங்கப்போகின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவு அலை, தமிழ்த் தேசியத்தை தீவிரமான பாதையில் அழைத்துச் செல்லும் பண்புகள் நிறைந்ததாக இருக்கும் என்பதை இப்பொழுதே காணக்கூடியதாக உள்ளது.**

**தமிழ் தேசியக் கூட்டமைப்பின்** முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அண்மையில் அவுஸ்திரேலிய தமிழ் வானொலி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியின் பின்னர் அவரது பேட்டி தொடர்பாக நடைபெற்ற கருத்துக் களத்தில் கலந்துகொண்ட நேயர் ஒருவர், சுமந்திரன் இறக்கும் தினத்தை தமிழ் மக்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகக் கூறிவிட்டு தொலைபேசியை வைத்து விட்டார்.

இலங்கையின் இன்றைய தேர்தல் நிலவரத்தை எடுத்து நோக்கினால், சுமந்திரன் எனப்படும் ஒற்றைச்சொல் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் அதிகமானதும் ஆழமானதும் ஆகும். அந்தத் தாக்கம் சாதகமானதா, பாதகமானதா என்பது விவாதத்துக்குரியது.

தமிழ்த் தேசிய அரசியல் களத்தைப் பொறுத்தவரை, நெருங்கி வரும் இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல் எனப்படுவது மஹிந்தவின் சர்வாதிகார ஆட்சிப் பிடியிலிருந்து விடுபட்ட சுதந்திரமான காலப்பகுதியில் நடைபெறுகின்றது என்ற விடுதலை உணர்வினைத் தருகின்றது என்பதற்கு அப்பால், சுமந்திரன் என்கின்ற அரசியல் புள்ளியை எதிர்ப்பதற்குக் கிடைத்திட்ட மிகப்பெரும் வரப்பிரசாதமாகப் பார்க்கப்படுகிறது. சுன்னாகம் தண்ணீர் பிரச்சினை முதல் சுதந்திர தின நிகழ்வு வரை சுமந்திரன் எனப்படுபவர் என்ன கூறினார்? கூறாவிட்டால் ஏன் கூறவில்லை? கூறினால், ஏன் அப்படி கூறினார்? என்ற பாசித்தாள் பகுப்பாய்வு சோதனையின் ஊடாகத்தான் இன்றைய தமிழ்த் தேசிய அரசியலின் பெரும்பகுதி பயணித்துக்கொண்டிருக்கிறது. இந்தப் போக்கின் பாதை குறித்து ஆராய்வது தான் இந்த பத்தியின் நோக்கம். போர் முடிவுற்று ஆறு ஆண்டுகளாக தமிழ் மக்களின் ஏகபோக ஆணையைத் தொடர்ந்து பெற்றுக்கொண்டுவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களுக்கு எதுவும் பெற்றுக்கொடுக்காத வெற்றுக்கட்சியாகப் பார்க்கப்பட்டுக் கொண்டுவந்த விரக்தியின் விளிம்பில் தான் இம்முறை தேர்தல் அறிவிப்பு வெளியானது.

முன்னர் குறிப்பிட்டது போல, ஜனநாயத்தின் குரல்வளைக்கு மூச்சு விடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தில், அரசியல் கட்சிகள் பெருமெடுப்பில் தேர்தலில் குதித்து விட்டன. ஆனால், அதுவரை சிங்கள தேசத்தில் எதிரியைக் காட்டிக் காட்டி மிரட்டி வாக்கு வசூலித்த இந்தக் கட்சிகள், இம்முறை அதே வாக்காளர்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த மைத்திரியை எதிரியாகக் காண்பித்து வாக்குக் கேட்க முடியாத நிலை.

“திரும்பவும் மஹிந்த வந்துவிடக் கூடாது என்பதற்காக எம்மைப் பலப்படுத்துங்கள்” என்று கூறி வாக்குக் கேட்டாலும்கூட, உள்ளூர் தேர்தல் களத்தில் ஜனவசியம் மிக்க எதிரி ஒருவர் இல்லாமல் தமிழர் தேர்தல் களம் என்றுமே முனைப்படையாத பாரம்பரிய தேர்தல் பரணிகளை திடீரென மாற்றமுடியாத நிலை. மக்களை வாக்களிப்பு நிலையத்தை நோக்கி விரட்டிய கடந்த கால காரணிகளை எடுத்துநோக்கினால், அங்கு ஏதாவது ஒரு பொது எதிரி இருந்துகொண்டேதான் இருந்தான். விடுதலைப் புலிகளின் காலத்தில் மக்கள் தேர்தலை புறக்கணித்தாலும் கலந்துகொண்ட தேர்தல்களில் அரச சார்பு கட்சிகளுக்கு தக்க பாடம் புகட்டினார்கள். அதன்பின்னர், இடம்பெற்ற தேர்தல்களில் விடுதலைப் புலிகளின் வழிநடத்தலின் பேரில் மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தினார்கள். விடுதலைப் புலிகளின் காலத்துக்குப் பின்னர், மக்களின் வாக்குகள் மஹிந்தவுக்கு எதிரான பழிவாங்கும் வாக்களிப்பாகவும் அந்தப் பாரம்பரியம் தொடர்ந்தது.

ஆனால், இம்முறை தமிழர் தேர்தல் களம் தமக்குள்ளேயே ஒரு எதிரியை சுமந்திரன் வடிவில் உருவாக்கிக்கொண்டதுதான் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட மிகவும் துரதிஷ்டவசமான அரசியல் வங்குரோத்து நிலை. அது எவ்வளவு முரண்நிலையானது என்பதை சற்று ஆராய்ந்தால், இம்முறை நாடாளுமன்றத் தேர்தல் களமானது தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை மிகப்பெரிய ஜனநாயக வெளியாக மிளிர்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம். வடக்கு, கிழக்கை கட்சி சார்பாக எடுத்து நோக்கினால், தமிழ் மக்களின் அழிவுக்கு துணைபோன கட்சிகளும் அழிவை ஏற்படுத்திய கட்சிகளும் எந்த குற்ற உணர்வுமின்றி மக்களிடம் வந்து வாக்குக் கேட்டு நிற்கின்றன. தனிநபர்களை எடுத்து நோக்கினால், இவ்வளவு காலமும் அரச சார்பு கட்சியில் சரணாகதி அரசியல் நடத்தியவராக குற்றஞ்சாட்டப்பட்ட ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா, மக்களிடம் வாக்கு கேட்டு நிற்கிறார். விடுதலைப் புலிகள் அமைப்பில் பிளவை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பங்காற்றிய அரசியற்புள்ளி அலிஸாகீர் மௌலானா, மக்களிடம் வந்து வாக்குக் கேட்டு நிற்கிறார்.

இவர்களைவிட, காலா காலமாக அரசுடன் இணைந்து ஒட்டுக்குழுக்களாக செயற்பட்ட பல அமைப்புக்கள் இன்று ஜனநாயக வழியில் வந்து நின்று, “நீங்கள் பழையவை எல்லாவற்றையும் மறந்து விட்டு எமக்கு வாக்களிக்கவேண்டும்” என்று துணிச்சலுடன் கோரிக்கை விடுத்து நிற்கின்றன. (இவ்வாறானவர்கள் சுமந்திரன் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் உள்ளார்கள் என்பது அனைவரும் அறிந்ததே) ஆனால், வரலாறு காணாத இனஅழிப்புக்கு முகங்கொடுத்த பின்னரும், தமது பூர்வீக நிலங்களின் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் தொலைந்து போன உறவுகளைக் கண்டுபிடித்து தரக்கோரியும் தங்களுக்கான நீதி மறுக்கப்படுவதை தொடர்ந்தும் ஜீரணிக்க முடியாத உச்சத்துக்கு சென்றபோதெல்லாம் பல்வேறு போராட்டங்கள் ஊடாக கிளர்தெழுந்த மக்கள், தேர்தலுக்காக தங்கள் பிரதேசங்களுக்கு இந்த அரசியல் கட்சிகள் மேற்கொண்டுள்ள படையெடுப்புக்களுக்கு எந்த எதிர்ப்பையும் காண்பிக்காதது இந்த நாட்டில் அரசியல் கட்டமைப்பில் மிகபெரிய ஜனநாயக வெளியை இன்று காண்பித்திருப்பவர்கள் தமிழ் மக்களே என்ற யதார்த்தத்தைத்தான் வெளிக்காட்டி நிற்கிறது.

ஆனால், இவ்வாறான விசாலமான ஜனநாயக வெளியில் இன்று சுமந்திரனது தேர்தல் களம் மட்டும் மிகப்பெரிய சத்திய சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதும் அவர் சார்ந்த கட்சி இம்முறை தேர்தலில் குற்றக்கூண்டில் நிறுத்தப்பட்டிருப்பது எனப்படுவதும் ஏன்?

தமிழ்த் தேசிய அரசியல் களத்தில் மாற்றத்தை கோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற வளர்ச்சியடைந்து வரும் புதிய அரசியல் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாரின் வெற்றி எனப்படுவது சுமந்திரனின் தோல்வியின் ஊடாக மட்டுமே உறுதிசெய்யப்பட முடியும் என்ற நியதி இருவரும் போட்டியிடும் ஒரே தேர்தல் தொகுதியில் சவாலை ஏற்படுத்தியிருப்பது.

விடுதலைப் புலிகளின் அழிவுக்கு பின்னர் தமிழ்த் தேசிய அரசியல் களத்தில் கடும் தேசிய வாதக் கொள்கை கொண்டவர்களின் வளர்ச்சியையோ அவர்களுக்கான மக்கள் ஆதரவையோ விரும்பாத சர்வதேசம் மற்றும் சிங்கள தரப்புக்களால் சமாளிக்கப்படக்கூடியவர் என்று புதிய முன்னணியினரால் கருதப்படும் சுமந்திரனை தமிழர்களின் பிரதிநிதியாக அனுப்புவதில்லை என்று புதிய முன்னணியினர் உறுதி பூண்டிருப்பது, தமிழர்களின் நலன்களை முன்னிறுத்தி பேரம் பேசுவதின் ஊடாக மட்டும் தமிழ் மக்களின் சக்தியை சமரசம் செய்திருக்கக்கூடிய பல சந்தர்ப்பங்கள் கடந்த ஆறு ஆண்டு காலத்தில் கிடைத்திருந்தபோதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மித மிஞ்சிய மிதவாதப்போக்கினால் அவை தவறவிடப்பட்டதினால் ஏற்பட்ட விரக்தியும் அந்த விரக்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெளிவிவகார பொறுப்பாளர் என்றவகையில் சுமந்திரன் மீது முழுமையாக பொறிந்திருப்பது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளின் பின்னணிகளோ அவற்றின் உணர்வுபூர்வமான தாற்பரியமோ அறியாத “கொழும்பு பிள்ளையாக” வளர்ந்த சுமந்திரன் எனப்படுபவர், போருக்கு பிந்திய மக்களின் மனவடுக்களை சரியாக புரிந்து கொள்ளாது எல்லா விடயங்களையும், தனது தொழில் கண்ணாடி ஊடாக சட்டபூர்வமாக அணுகுகின்றபோது, தான் பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறும் பாமரமக்கள் முதல் ஊடகங்கள் வரை எவரையும் திருப்திப்படுத்தாத தொடர்பாடல் முறையை கொண்டிருப்பது போன்ற காரணங்களின் ஊடாக சுமந்திரன் எதிர்ப்பு படலம் எனப்படுவது விரிந்து செல்கிறது.

இந்த எதிர்ப்பு எனப்படுவது தாயகத்திலும் விட, புலம்பெயர்ந்த தமிழ்மக்களின் மத்தியில் எவ்வாறு விரிந்து செறிந்து கிடக்கிறது என்பதற்கு, இந்த கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட வானொலிச் சம்பவம் மிகச்சிறந்த உதாரணம். ஆனால், இப்போது எழுந்துள்ள கேள்வி யெல்லாம் சுமந்திரன் எதிர்ப்பு என்ற புள்ளியில் இம்முறை குவியப்படுத்தப் பட்டிருக்கின்ற தமிழ்த் தேசிய அரசியல் ஆரோக்கியமானதா? இம்முறை தேர்தலில் பிரசாரங்களும் கட்சிகளின் கொள்கை முன்னெடுப்புக்களும் மக்கள் பிரச்சினைகளையும் அவர்களின் இயல்பு வாழ்க்கையில் இன்னமும் சீர் செய்யப்படாத தேவைகளையும் விட கொள்கை அரசியல் சார்ந்ததாகவே அதிகம் பயணப்பட்டுக் கொண்டிருப்பதை காணலாம்.

தனிநபர் சேறடிப்புக்களும் துரோகி பட்டமளிப்புக்களும் எங்களில் யார் இந்த மக்களை வைத்து அரசியல் செய்வதில் அதிக வல்லமை உள்ளவர்கள் என்ற பலப் பரீட்சைக்குரிய களமாகவே இத்தேர்தல் அணுகப்படுகிறது. தாங்கள் செய்த சாதனைகளைப் பட்டியல்படுத்தி ஆளுக்காள் முகப்புத்தகங்களிலும் இதர ஊடகங்களிலும் வெளியிட்டு மக்களுக்கு ஞாபகமூட்டுமளவுக்குத்தான் இந்தக் கட்சிகளின் மக்களுக்கு சேவை செய்யும் சீத்துவும் கிடக்கிறது. இம்முறை சுமந்திரன் வென்றாலோ தோற்றாலோ இரண்டுமே தமிழர் அரசியல் களத்தில் தொடர்ச்சியான பிளவுகளையும் பிரிவுகளையும் முரண்பாடுகளையும் தேர்தலுக்கு பின்னரும் ஏற்படுத்தப்போவது நிச்சயம். சுமந்திரனின் தோல்வி எனப்படுவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோல்வியாகக் கருதப்படும். அதன் பின்னர், ஓங்கப்போகின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவு அலை, தமிழ்த் தேசியத்தை தீவிரமான பாதையில் அழைத்துச் செல்லும் பண்புகள் நிறைந்ததாக இருக்கும் என்பதை இப்பொழுதே காணக்கூடியதாக உள்ளது. இதற்கு களயதார்த்தங்கள் ஒத்துழைப்பு வழங்குமா? மக்கள் அதற்கு தயாரா என்பது ஒரு கேள்வி.

ஆனால், எந்த விகிதாசாரத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியிடம் தோற்றாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முழுமையான பிடி இந்த தேர்தலில் தளர்ந்து போகுமாக இருந்தால், இனிவரும் காலங்களில் அதன் அரசியல் எதிர்காலம் இறங்குமுகமாகவே இருக்குமே தவிர, மீட்சிக்கு இடமிருக்கப்போவதில்லை.

தமிழ் அரசியல் கட்சிகளின் கடந்த கால தோல்வி வரலாறுகள் அதையே எழுதிவிட்டுப்போயுள்ளன.



-- ப.தெய்வீகன் --

www.tamilmirror.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 33

01. இலங்கையின் தேசியக்கொடியை முதன்முதலில் ஏற்றியவர்
  i. ஸ்ரீமாவோ பண்டாரநயக்க  ii. வில்லியம் கோபல்லாவ
  iii. டி.எஸ் சேனநாயக்க  iv. மஹிந்தராஜபக்ஸ

02. துவிச்சக்கர வண்டியொன்றிற்கு அனுமதித்தகடு பெறச் செல்ல வேண்டிய நிறுவனம்?
  i. பொலிஸ் நிலையம்  ii. பிரதேச செயலகம்
  iii. கிராம செயலகம்  iv. பிரதேச / நகர சபைகள்

03. தேசிய இலச்சினையில் உள்ள சூரியன், சந்திரன் எனும் அடையாளங்கள் உணர்த்துவது
  i. தார்மீகம்  ii. தன்னிறைவு  iii. நிலைத்திருத்தல்
  iv. சௌபாக்கியம்

04. நுகர்வுக்கான வர்த்தகப் பொருட்களில் தரத்தை உறுதிபடுத்தும் இலங்கையின் தர இலட்சனை
  i. SLS  ii. ISBN  iii. ISO  iv. SLR

05. பச்சை நிறத்தைப் பெற்றுக்கொள்ள கலக்க வேண்டிய இரு நிறங்கள்
  i. சிவப்பு, வெள்ளை  ii. நீலம், மஞ்சள்
  iii. ஊதா, நீலம்  iv. சிவப்பு, மஞ்சள்

06. ஓட்டவீரர் ஓடி முடித்தவுடன் செய்ய வேண்டியது?
  i. சிறு நேரத்திற்கு நிலத்தில் கால்களை நீட்டியிருத்தல்
  ii. உடலை நீரினால் நனைத்தல்
  iii. குளிர்பானத்தைப் பருகுதல்
  iv. எளிய பயிற்சியில் ஈடுபடுதல்

07. பரப்பும் பலகையின் பயன்பாடு
  i. வயல் உழுதல்  ii. மண்ணைக்கிளறுதல்
  iii. வயலில் சேற்றை மட்டமாக்குவதற்கு
  iv. சுவரை மட்டமாக்குதல்

08. மடிப்புக்கள் குலையாமல் தற்காலிகமாகத் தைக்கப்படும் தையல்
  i. பெருநுலோடி  ii. வெட்டுக்குத்துத்தையல்
  iii. கம்பளித்தையல்  iv. மீன் முள்ளுத்தையல்

09. போமலின் இடப்பட்ட மீன்களை உண்பதால் ஏற்படக்கூடிய விளைவு
  i. சொறி ஏற்படல்  ii. வயிற்றுவலி
  iii. உடலில் தடிப்புக்கள்தோன்றுதல்  iv. உதடுகள் வீங்குதல்

### பகுதி - 02

தரப்பட்ட (01 – 15) வரையான கணித வினாக்களுக்கு விடை தருக.

01. அறுபதாயிரத்து இருநூற்று மூன்று என்பதை இலக்கத்தில் ...........

02. 8943 எனும் எண்ணில் 9இன் பெறுமானம் யாது? ...............................

03. 4/10 என்பதைத்தசம் எண்ணாக தருக? ........................................

04. 100000 இற்கு முந்திய எண்ணை தருக? ........................................

05. 24ஐ உரோமன் இலக்கத்தில் தருக? ....................

05. ஆங்கிலத்தில் பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள் :
...................................................................

03. இடைவெளிக்கு வரவேண்டிய எண்ணை எழுதுக?
2, 4, 8, 16, 32, 64, ......., .......

---

### சென்றவார விடைகள்

01. 3  02. 4  03. 3  04. 3  05. 3  06. 4  07. 4  08. 1  09. 4  10. 1
01. ரூ 410  02. 14:15  03. 2011 ஜனவரி 01
04. ஐ. நாங்கள் சாப்பிடுவோம் ஐை. எங்களால் பார்க்கமுடியும்
05. ஐ. வட்டமாக ஓடுங்கள்  ஐை. மஞ்சள் நிறம்
06. ரூ 22.50

இம்முறை பரீட்சை எழுதவிருக்கும் அனைத்து மாணவர்களுக்கும் ஆசிரியரினதும் மலைமுரசினதும் சார்பில் வாழ்த்துக்கள்!!!



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு



சிறுவர்களுக்கான குட்டிக் கதை

## சாதுர்யம் மிக்க மீனவன்

முன்னொரு காலத்தில் பாரசீக நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுக்கு மீன் என்றால் உயிர். ஒரு நாள் மீனவன் ஒருவன் மிகவும் அழகான பெரிய மீன் ஒன்றை அவைக்குக் கொண்டு வந்து அரசனிடம் தந்தான். அந்த மீனைக் கண்டு மகிழ்ந்த அரசன் மீனவனுக்கு உடனே நூறு பொற்காசுகள் பரிசளிக்குமாறு கட்டளை இட்டான். பக்கத்திலே அமர்ந்திருந்த அரசிக்கு இந்தச் செயல் பிடிக்கவில்லை.

அரசனைப் பார்த்து 'நாளைக்கே நம் வீரர்கள் யாரேனும் செயற்கரிய வீரச் செயல் செய்து வந்தால், நீங்கள் வழக்கம் போல நூறு பொற்காசுகள் பரிசளிப்பீர்கள். ஆனால், பரிசு பெறுபவன் ஒரு மீனவனுக்குக் கொடுத்ததைத் தானே அரசர் நமக்கும் தந்துள்ளார் என்று நினைப்பான். அதனால், அந்த மீனவனுக்குக் கொடுத்த பரிசை ஏதேனும் சொல்லித் திரும்ப வாங்கிக் கொள்ளுங்கள் என்றாள்.

'நீ சொல்வது சரிதான். ஆகால், கொடுத்த பரிசை மற்றவர் குறை சொல்லாதபடி எப்படித் திரும்ப வாங்குவது?' என்று கேட்டான் அரசன்.

'அந்த மீன் ஆணா? பெண்ணா?' என்று கேளுங்கள். அவன் ஆண் என்று சொன்னால் பெண் மீன் வேண்டும் என்றும் பெண் என்றால் ஆண் மீன் வேண்டும் என்றும் கூறி மீனைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்' என்றாள்.

அரசனுக்கு தன் மனைவியின் அறிவுரை பிடித்தது. மீனவனைப் பார்த்து 'நீ கொண்டு கொண்டு வந்த மீன் ஆணா? பெண்ணா? எனக் கேட்டார். அதற்கு அந்த மீனவன் பணிவாக, 'அரசே! இது ஆணுமல்ல, பெணண்ணுமல்ல பொதுவான மீன்' என்றான்.

மீனவனிடமிருந்து தான் சற்றும் எதிர்பாராத பதில் வந்ததைக் கண்டு அவனுடைய சாதுர்யம் கண்ட மகிழ்ச்சியில் மேலும் நூறு பொற்காசுகள் தரும்படி கட்டளை இட்டான்.

நடந்ததை சகித்துக் கொள்ள முடியாத அரசி செய்வதறியாது அரசரை சற்று நேரம் உற்று நோக்கினாள். மேலும் 'ஐயோ! நூறு பொற்காசுகள் கொடுத்ததே அதிகம். அதைத் திரும்ப வாங்குங்கள் என்றால், மேலும் நூறு பொற்காசுகள் தந்துவிட்டீர்களே! என்றாள் கோபத்துடன்.



**- எப்பொழுதும் சிந்தித்து செயல்படல் வேண்டும் -**

# பொது அறிவு போட்டி

**சிந்திக்க .. ..**
சுயநலம் உள்ளவன்: புறக்கணிக்கப்படுவான்
பொதுநலம் உள்ளவன் :
அனைவராலும் போற்றப்படுவான்...

இங்கு தரப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை கீழே தரப்பட்டுள்ள இடத்தில் நிரப்பி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். முடிவுத் திகதி : 25.08.2015

விடையை அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

28. மனித தலையில் உள்ள மொத்த எலும்புகள் எத்தனை?

29. ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் உறுப்புரிமை கொள்ளும் அங்கத்தவரின் இழிவு வயது?

30. புத்தர் எங்கு முதன் முதலில் போதித்தார்?

31. கண்ணின் விம்பம் விழும் பகுதி எது?

32. ஈக்களின் சுவை உணர் உறுப்பு எது?

33. வாயு நிரப்பப்பட்ட மின்சார விளக்கில் காணப்படும் மின்இழை எதனால் செய்யப்பட்டுள்ளது?

34. உலகின் சர்க்கரைக் கிண்ணம் எது?

35. தமிழில் வெளிவந்த முதல் வரலாற்று நூல் எது?

36. ஊழியர் சேமலாப நிதி எச்சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்?

37. உமிழ்நீரில் காணப்படும் நொதியம் எது?

38. கண்ணின் கிட்டப் பார்வையை திருத்த உதவுவது எது?

39. சர்வதேச சேமிப்பு தினம்?

40. புவி சூரியனை வலம் வருவதால் ஏற்படும் விளைவு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுநடப்பு

# மாமியாரும் மருமகளும் - பாவம் மகன் / கணவன்

- பாலையூற்றான் -

மாமியார்இருமருமகள்இ "லாடா" அன்று தொட்டு இன்றுவரை சகல குடும்பங்களிலும் சாதாரணமாக காணக்கூடிய சம்பவமே. முன்னைய விட இவ்விவகாரம் சற்று குறைந்துள்ளமைக்கு காரணம் இன்றைய நாகரீக முன்னேற்றமே. மேலும் கல்வி வளர்ச்சி எங்கும் பரவலாகக் காணப்படுவதால் மாமியார் மருமகள் போன்றோர் இன்று சற்று கௌரவமாக நடந்து கொள்கின்றார்கள் அதனால் என்னவோ குடும்பங்களில் அவ்வாறான பிரச்சனைகள் மிக குறைவாகக் காணப்படுகின.

இருப்பினும் நகர சூழலைவிட கிராமிய சூழல்களில் இவ்விவகாரம் இன்னமும் அதே நிலையிலே இருந்து வருகின்றன. ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மருமகள்மார் இருந்தால் அவ்வாறான விரச்சனைகளுக்கு குறைவே இல்லை. அதுவும் மருமகள்மார் சற்று படித்தவர்களாக இருந்தால் இனி சொல்லவா வேண்டும்? அவ்வாறே படிக்காத மருமகள்மார் இடையில் படித்த மாமியார் இருந்தால் பிரச்சனை பிரச்சனையே. ஆனால் அந்த காலத்தில் இருந்து இந்தக்காலம் வரை குறித்த பிரச்சினை மாமியாருக்கும் மருமகளுக்குமிடையே வந்துள்ளதே தவிர மருமகன்மார்களிடையே அனேகமாக வந்ததே இல்லை. எந்த ஒரு மாமியாரும் தம் மருமகனை குறைத்து பேசாது உயர்த்தியே பேசுவார்கள். ஒரு சில ஊதாரி மருமகன்மார்கள் தம் குடும்பத்தை கவனியாது உழைக்கப்போகாது குடித்துக்கும்மாளம் அடித்தால் மாத்திரமே அந்த குடும்பத்தில் குழப்பத்திற்கு இடமிருக்கும்.

மேலும் சில குடும்பங்களில் தனதுபேச்சுக்கு கட்டுப்பட்டு நடக்கக்கூடிய மருமகனையே மாமிமார் தேர்ந்தெடுப்பார்கள். வரப்போகும் மருமகள் வாயாடியாக இருந்தால் எப்படியும் அந்த திருமணத்தை நடாத்த விடமாட்டார் மாமியார். யாதும் சாக்கு போக்குச் சொல்லி திருமணத்தை தடுத்தே போடுவதில் பல மாமியார்கள் சிறந்த புத்திசாலிகளாக சமூகத்தில் விளங்குகின்றனர்." தனது கில்லாடித்தனத்தால் தனது சொந்த மகனின் வாழ்க்கை தள்ளி போய்கொண்டிருக்கின்றதே" என அவர்கள் சிறிதேனும் யோசிக்கவே மாட்டார்கள். சில மாமியார்களுக்கு மருமகளின் வழியில் பணம் தான் முக்கிய தேவையாகும். சிலருக்கு குணம் தேவை. இன்னும் சிலருக்கு மருமகளின் அழகு தேவை. திருமணவிடயத்தில் பணம், குணம், அழகு, இவை அனைத்துமே ஒருமித்து ஒருவரிடம் காணக்கிடைப்பதென்னவோ கஷ்டம் தான் ஆனால் சிலரிடம் மூன்றும் இருக்கும். மேலும் இவை எல்லாம் தேவையில்லை வரப்போகின்ற மருமகள் படித்து உத்தியோகம் பார்ப்பவளாக இருந்தால் அதுவே போதும் என விரும்பும் மாமியாரும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதே வேளை சில மாமிமாருக்கு படித்த உத்தியோகம் பார்க்கும் மருமகள்மாரை அறவே பிடிக்காது. காரணம் உத்தியோகம் பார்ப்பவர்கள் கர்வமாகவும், வாயாடியாகவும், இருப்பார்கள் என்பதே அவர்களின் கருத்து. இவ்வாறே மாமிமாரின் விசேட விருப்பங்களை பலவாறு பகுப்பாய்வு செய்யலாம். அதனால் பல இளைஞர்களும், யுவதிகளும் திருமணத்திற்காக பல காலங்கள் காத்துகிடக்க வேண்டியுள்ளது.

அதனால் பல குடும்பங்களில் நிச்சயிக்கப்படும் திருமணத்தை விட காதல் திருமணங்களின் எண்ணிக்கையே அதிகரித்துள்ளன. ஒரு சில மாமிமார் தங்கள் வீட்டுக்கு வாழவந்துள்ள அவர்களை தங்கள் பிள்ளைகளை விட பாசமாக வழிநடத்துவார்கள். சிலர் அவர்களை அடிமைகளாகவும், வீட்டு வேலைக்காரியாகவும் நடத்துவார்கள். சில மருமகள்மார்கள் தமது பெற்றோரை விட மாமா, மாமி மேல் மிகவும் பாசமாக நடந்து கொள்வார்கள்.

நயினாதிவை சார்ந்த நாகம்மாள் பிறப்பிலே பணக்காரப் பெண். நாகம்மாளுக்கு இன்னுமொரு புனைப்பெயரும் உண்டு அதுதான் "கல்வீட்டுக்காரி" அவருக்கு அந்த பெயர் வரக்காரணம் நயினாதீவில் முதல்முதல் கல்வீட்டுக்குரியவர் அவரே. ஆரம்ப காலத்தில் அப்பகுதி மக்களில் அனேகப் பேர் ஓலை குடிசைகளிலே வாழ்ந்து வந்தார்கள். நிரந்தரமான மனைகளை அங்கு காணக்கிடைப்பது அரிது. நாகம்மாளின் கணவர் கடல் மார்க்கமாக இந்திய பொருள் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததால் அப்பகுதியில் முதன்முதலில் கல்வீடொன்றை நிறுவினார்.

தொடர்ந்தும் அவர் கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது ஒரு நாள் கடலில் வைத்து கடற்படையினால் சுட்டுக்கொள்ளப்பட்டதால் அவர் அகாலமரணம் அடைந்தார். அதன்பின் நாகம்மாளே சகல சொத்துக்கும் உரித்தாளியானார். விதவையான அவர் தன் மகனுக்கு நல்ல இடத்தில் பெண்பார்க்க தரகர்களின் உதவியை நாடியும் நல்ல வரன் கிடைக்காததால் அந்த விடயத்தை முற்றாக கை கழுவிவிட்டார். இருப்பினும் இறைவன் மேல் பாரத்தைப் போட்டு விட்டு நடக்கிறது நடக்கட்டும் என்று இருந்து விட்டார். நாகம்மாள் தன் மகன் மார்க்கண்டனுக்கு அளவுக்கதிகமாக செல்லம் கொடுத்து வளர்த்தால் அவன் தாயின் பேச்சை கேட்காமலே பல சமூகநாசகார செயல்களில் ஈடுபட்டு வந்தான். கொலை, கொள்ளை, கற்பழிப்பு என பல புகார்கள் அவனுக்கு எதிராக குவிந்தன.

அக்காலப்பகுதியில் அரச காவல்துறையின் நிர்வாகம் அங்கு மந்த கதியில் இருந்ததால் அவன் அதை தனக்கு சாதகமாக பயன்படுத்தி செயல் பட்டுக் கொண்டிருந்தான். நாகம்மாளின் விருப்பத்திற்கு மாறாக சட்டப்படி திருமணமொன்றை செய்து கொண்டான். நாகம்மாவாள் அவனுக்கு எதிராக ஒன்றும் செய்ய முடியாமல் அவனின் மனைவியை தனது மருமகளாக ஏற்றுக் கொண்டார். மருமகளோ மிகவும் தங்கமானவள் என ஊரார் மத்தியில் புகழாரம் சூட்டுவதில் நாகம்மாள் பின் நிற்க வில்லை. "தனக்கொரு மகள் இல்லாத மனக் குறையை தனது மருமகள் பூர்த்தி செய்து விட்டாள்" என எங்கும் பெருமையாக பேசவும் மறந்துவிட வில்லை அந்த மாமி, மருமகள், உறவை ஊரார் கூட அங்கு மெச்சி வந்தனர். மகனின் மேல் காட்டாத பாசமழையை மருமகள் மீது பொழிந்து கொட்டி வந்ததால் மாமியார்-மருமகள் "லடாய்" அங்கு அறவே இருக்கவில்லை ஆனால் தனது மகனோ மருமகளை கவனிப்பது இல்லை என்ற கவலை அந்த மாமியாருக்கு இருந்துவந்தது.

திடீரென ஒரு நாள் நாகம்மாளின் காதில் விழுந்த அச் செய்தியால் அவர் மூச்சு தினறி அவசரசிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். மேலும் அச்செய்தியே அவரை அதிர்ச்சியடைய செய்தது அச் செய்தி இதுதான் "அவரின் ஆசை மகன் மார்க்கண்டன் பல சமூகவிரோத செயல்களில் தீவிரமாக நடந்து கொண்டதன் நிமித்தம் அன்றைய தமிழ் தீவிரவாதக் குழுவொன்றினால் நடுக்காட்டினுள் கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து சுடப்பட்டான்." என்னவாக இருந்தாலும் நாகம்மாளின் வயிற்றில் பிறந்தவனல்லவா அந்த சமூகவிரோத மகன் யார் விரோதித்தாலும் அந்த தாயால் அவனை விரோதிக்க முடியுமா? மருமகள் தனித்து விட்டாலும் மாமியார் கைவிடுவாரா? மகனுக்கு ஒரு வாரிசு இல்லை என்ற ஒரு கவலையை விட அந்த தாயாருக்கு வேறு ஒரு கவலையும் இருக்கவில்லை. ஆனால் மருமகளை அவளின் பெற்றோர் தங்களது விட்டுக்கு கூட்டிச் சென்று விட்டனர். அவ்விடயத்தில் மாமியார் வாதாடியும் பயனளிக்கவில்லை.

காலங்கள் கடந்தன அரசாங்கத்தினால் பிரச்சனைக் காலங்களில் காணாமல் போனோர், சுட்டு கொலை செய்யப்பட்டோர், ஊனமுற்றோர் ஆகியோரில் தங்கியிருந்தோர்களுக்கு மற்றும் பெற்றோர், கணவன் மனைவி பிள்ளைகள் போன்றோருக்கு நட்டஈட்டுத் தொகையாக ரூபா. ஒரு இலட்சம் வழங்கப்பட்டு வந்தது.

"அதுதொடரில் விபரங்கள் மருமகளுக்கு தெரியாததால் மாமியார் நாகம்மாள் தனது மகனுக்கான இழப்பீட்டு தொகையை எப்படியோ பெற்றுக் கொண்டார். மகனுக்கு குழந்தைகள் இருப்பின் அத்தொகையை தனது பேரப்பிள்ளைகளுக்கு கொடுத்திருக்கலாம் அல்லது மகனின் இழப்பால் விதவையான மருமகளுக்காவது கொடுத்திருக்கலாம் அங்கு அவ்விதமான மனிதநேய செயற்பாடுகள் ஒன்றுமே இடம் பெறவில்லை. மருமகள் இப்போது என்னுடன் இல்லை அவள் வேறு திருமணம் செய்து ஒரு பிள்ளைக்கு தாயும் ஆகிவிட்டாள் இப்பொழுது எனக்கும் அவளுக்கும் அறவே சம்பந்தமில்லாத போது நான் எப்படி எனது மகனின் சார்பில் கிடைத்தப்பணத்தை அவளுக்கு கெடுப்பது?" என்று ஊராரின் வாயை மூடவைத்தார் அந்த மாமியார்.



# "பயம்"

நேரம் தற்போது 12.30 ஐ நெருங்கியது. திடீரென "ஐயோ" என ஓர் பெண்ணின் குரல் .....

சத்தம் கேட்ட இடத்தை நோக்கினர் அனைவரும். எந்தவித அசைகளோ எதுவுமே காணப்படவில்லை. அனைவரும் ஒரு பக்கமாக திரும்பி நின்ற பொழுது பின்பக்கமாக அர்கள் அருந்திக் கொண்டிருந்த போத்தல் கீழே சளீர் என விழுந்தது. பின்பக்கம் திரும்பிய வேளையில் ஏதோ ஒன்று வேகமாக அசைந்தது போல் இருந்தது. மாறி மாறி சுற்றி சுற்றி பார்த்துக் கொண்டிருந்தனர்.

திடீரென அந்த குறிப்பிட்ட அண்ணா மயங்கி விழுந்தார். உடன் அனைவரும் ஓடிச் சென்று சுற்றிக் கொண்டனர். ஆனாலும் அவ்விரு பெண்களும் மாத்திரம் தூரத்தில் இருந்து கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது தான் ஷேலி அவன் காதில் ப்ளூடூத் இருப்பதை கண்ணுற்றாள். அவளும் கூட்டத்துடன் சென்று சேர்ந்து ஓர் குழப்பத்தை உண்டு பண்ணி எப்படியோ அவன் காதிலிருந்த ப்ளூடூத்தை கழற்றி தனது ப்ளூடூத்தை பொருத்திவிட்டு மெல்ல நகன்று வந்தாள்.

மறுமுனையில் யாரோ கதைக்கும் சத்தம் கேட்டது. உன்னித்து கேட்டாள். அவளுக்கு ஒரு விடயம் திடீரென ஞாபகம் வந்தது. அவனுடன் கதைத்த வேளையில் அடிக்கடி சஹா சஹா என கூறிக் கொண்டிருந்தான். உடன் இவளும் தனது குரலை ஓரளவுக்கு மாற்றி சஹா சஹா எனக் கூறினாள்.

பின்னரே அக்குரல் மீண்டும் கதைக்கத் தொடங்கியது. நல்லவேளையாக தப்பித்துக் கொண்டாள் ஷேலி. அங்கிருந்து சில கட்டளைகள் வந்தது. அவற்றை ஒன்றொன்றாக நிறைவேற்றினாள். அதற்கிடையில் மயங்கியவனுக்கு சோடாவுடன் மயக்க மருந்தை கலந்து கொடுத்திருந்தாள். அவன் நல்ல உறக்கத்தில் காணப்பட்டான்.

தனக்கு நம்பிக்கையான இருவரையும் தனது குழுவையும் அழைத்து விடயத்தை தெளிவு படுத்தி அவர்கள் மாத்திரம் உஷாராக இருந்தனர். அதாவது அங்கு கொள்ளை அடிப்பதற்காக ஒரு கும்பல் தயார் நிலையில் இருந்தமையே அவள் ஊகித்து எடுத்துக் கொண்ட விடயம்.

இவர்கள் அந்த கிழவனுக்காகவும் அவனது கூட்டத்தினருக்காகவும் காத்திருந்தனர்.

இரண்டு மணித்தியாலங்கள் கடந்த நிலையிலும் ஒருவரும் வரவில்லை. மணி 3யை நெருங்கியது. 4 ஆகியது. ஷேலி தனது அணியினருடன் ஓரளவு அனுமானித்த இடத்தை நோக்கிச் சென்றாள்.

ஆச்சரியமான நிகழ்வு அக்கிழவன் உட்பட மேலும் மூவர் நிலத்தில் சரிந்து கிடந்தனர். உடன் அம்புலன்ஸிற்கு அறிவித்து அவர்களை வைத்தியசாலைக்கு ஏற்றினர். அவர்களை வெளிச்சத்தில் பார்த்த போது முகத்தில் யாரோ அறைந்த கை அடையாளமும் அது நீல நிறத்திலும் காணப்பட்டது. ஒருவர் இறந்த நிலையில் அவரது சான்றிதழ் பயத்தின் மிகுதியில் நெஞ்சுவலி ஏற்பட்டு இறந்திருந்தார். ஏனைய மூவரையும் காப்பாற்றுவதற்கான தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது.

பின்னர் ஊருக்குள் சென்று விசாரித்த வேளையில் அது ஒரு மயானம் எனவும் அங்கு ஓர் அசுத்த காற்று சுற்றித் திரிவதாகவும், ஏற்கனவே இருவர் பலியாகியுள்ளதாகவும், அதன் பின்னர் இரவு வேளையில் யாரும் அவ்விடத்திற்கு செல்வதில்லை என்பதுவும் தெரிய வந்தது.

நடக்க இருந்தது என்னவோ ஆனால் நடந்து முடிந்தது என்னவோ!!

முற்றும்

தொகுப்பு - தன்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனல் மின்...

வேட்பாளராக மலைமுரசின் முன்னாள் பிரதம ஆசிரியரும், சமூகச் செயற்பாட்டாளருமான இரா. ஸ்ரீஞானேஸ்வரன் களமிறங்கியுள்ள அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ள இரா. சம்பந்தன் களமிறங்கியுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏனைய ஆறு உறுப்பினர்களும் முறையே மூதூரின் கிழக்கு, தெற்குப் பிரதேசங்களையும் தம்பலகாமம் பிரதேசத்தையும் திருகோணமலையின் வடக்குப் பிரதேசத்தையும். மற்றையோர் மீனவ சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியும் களத்திலுள்ளனர். இவர்களுள் இரவர் பெண்கள் என்பதுடன் அவர்களுள் ஒருவர் புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளி என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிநிதிகள் முறையே மூதூரின் கிழக்கை நால்வரும், நகரப்பகுதியை இருவரும் பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளதுடன் அவர்களுள் ஒருவர் பெண் வேட்பாளராக உள்ளதுடன் அவர் முன்னாள் வைத்தியராகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது தமிழருக்கான நிரந்தரத் தீர்வாக "தனித் தமிழ்த் தேசம்" என்பதை முன்வைத்துள்ள நிலையில் மாற்றமொன்றுக்காக தமிழ் மக்கள் திரண்டெழ வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது "சமஷ்டி" தீர்வைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாகவும் அதற்காக இருபது ஆசனங்களுக்கு மேல் தமக்கு வழங்கினால்தான் தம்மால் பேரம்பேச முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

## சம்பூரில்..

மக்கள் உட்பட திருகோணமலை மாவட்டமே எதிர்காலத்தில் அனுபவிக்க இருக்கும் துன்பங்களையிட்டுக் கிஞ்சித்தேனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிந்தக்கவில்லை என்றும் குற்றஞ் சாட்டினார்.

கடந்த 12ம் திகதி கட்டைப்பறிச்சான் பிரதேசத்தில் நடைபெற்ற தமிழத் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் இந்தத் தேர்தலில் திருகோண மலை மாவட்டத்தின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் நால்வர் மூதூர் கிழக்கைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நால்வரும் சம்பூரின் அனல் மின் நிலையம் அமையுமாயின் அங்கு சென்று வசிப்பார்களா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

## தமிழ் தேசிய...

கிராமங்களின் மக்கள் கலந்துகொண்டனர்.

திரு. ரூபன் அவர்கள் ஈகைச்சுடரையேற்றி அகவணக்கத்தைத் தொடங்கி வைத்ததுடன் ஆரம்பமான இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினா் அவ்வமைப்பையும் அதன் போராளிகளையும் பயங்கரவாதிகள் என நாடாளு மன்றத்தில் தெரிவித்து உலகம் முழுவதற்கும் எமது போராட்டத்தைப் பயங்கரவாதப் போராட்டம் எனப் பறைசாற்றி ஒட்டுமொத்தத் தமிழ் இனத்திற்கும் துரோகம் இழைத்து விட்டதாகத் தெரிவித்தார்.

இந்நிலையை இல்லாதொழிக்க வேண்டுமானால் மாற்றத்திற்காக வாக்களிக்க் வேண்டும் என்றும் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றிய பிரதம வேட்பாளர் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் தேசம் என்றால் என்ன? தமிழத் தேசத்தை அடைந்துகொள்வதற்கான சாத்தியப்பாடுகள் என்ன என்பதையெல்லாம் விளக்கிய அவர் தமிழர்கள் இம்முறை சைக்கிள் சின்னத்திற்கு வாக்களிப்பதன் ஊடாக மட்டுமே "தமிழர்களின் தீர்வு தனித் தமிழ்த் தேசம் தான்" என்பதை உலகிற்கு அறிவிப்பதுடன் எமது போராட்டம் ஒரு பயங்கரவாதப் போராட்டம் அல்ல என்பதையும் வெளிப்படுத்த முடியும் என்பதையும்

## ஆதரவாளர்....

தெரிவித்தார்.

தமிழர்களாகிய நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கதும், எங்களது அடிப்படைப் பிரச்சனையைத் தீர்க்கக் கூடியதுமான தீர்வொன்றைப் பெற்றுக்கொண்டால் மட்டுமே நாம் அமைதியாக வாழ முடியும் எனத் தெரிவித்த இரா. ஸ்ரீஞானேஸ்வரன் தமிழர்களின் பிரச்சனையின் அடிப்படையை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதனைச் சிதைப்பதற்கான பேரினவாத நடவடிக்கையே தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனையேயொழிய தமிழர்களுக்கான அதிகாரம் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சனை அல்ல என்பதனை அமெரிக்கப் பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்திய இரா.ஸ்ரீஞானேஸ்வரன் அதன்பாற்பட்டே தமிழர்களுக்கான தீாவாகத் தனித் தமிழ்த் தேசத்தைப் பெற்றுக்கொள்ளும் அரசியல் நடவடிக்கைகளில் தாம் முனைப்புடன் செயற்படுவதாகவும் அவர்களுக்குத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் தனித் தமிழ்த் தேசமொன்றைப் பெற்றுக்கொள்ள சர்வதேசச் சமூகம், குறிப்பாக அமெரிக்க அரசு எவ்வாறு எமக்கு உதவ முடியும் என்பது பற்றிய கலந்துரையாடலிலும் அவர் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## முள்ளிப்...

அடுத்து தமிழர்களின் மயானப்பகுதியை அபகரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன் முதற்கட்டமாக அந்த மயானக் காணியை உறுதிப்பத்திரம் ஊடாக முஸ்லிம்களுக்கு வழங்கும் முயற்சியொன்று நடைபெறுவதாக நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

துண்டாடப்பட்டு வழங்கப்பட விருக்கின்ற இக்காணிகளில் அத்துமீறிய வீடுகளைக் கட்டவும் முயற்சிகள் நடைபெறுகின்றன என தமிழ் மக்கள் அச்சம் தெரிவித்தள்ளனர்.

இவ்விடயம் தொடாபாகப் பலதடவைகள் பிரதேசச் செயலகத்திற்கும், திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கும் கொண்டு வந்த போதும் எவ்வித நடவடிக்கைகளும் தற்போதுவரை முன்னெடுக்கப் படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

---

## மூதூர் படு...

மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பக்கச் சார்பற்ற நடுநிலைத் தன்மை என்ற எனது நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உறுதியாகவுள்ளேன். ஆரோக்கியமான அகமுரண்பாடுகள் அவசியமானவையாயினும்கூட, ஒரே கட்சிக்குள் இருந்து கொண்டு ஒரே கொள்கைக்காகத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் ஒருவரை ஒருவர் தூற்றிக் கொண்டும், வசைபாடிக் கொண்டும், அரசியல் நாகரீகம் அற்ற முறையில் ஒருவர் மற்றவருக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமையினைக் காணும் போது பக்கச் சார்பற்ற நடுநிலைத் தன்மை என்ற எனது முடிவு சரியானது என்றே நான் கருதுகின்றேன்.

போரின் போது மேற்கொள்ளப்பட்ட இனஅழிப்பு எமது இனத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு கட்டமைப்புகளை சிதைத்துள்ளது. இவற்றை நாங்கள் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு அமைவாக ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களைப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுடன் நேரடியாக மேற்கொள்ளும் வாய்ப்பு நான் முதலமைச்சராக பதவியேற்ற பின் கிடைத்தது. அதனை, மிக ஆழமாக ஆராய்ந்து பார்த்த பின்பே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நடுநிலை வகிப்பதென்ற முடிவையெடுத்தேன்.

எனினும் நான் என் முன்னைய செய்தியில் இன்னொன்றைக் கூறியதையும் எம் மக்கள் மறக்கக் கூடாது. நாம் தேர்ந்தெடுப்பவர்கள் தமிழ் மக்களின் தனித்துவத்தையும் அவர்களின் சுயநிர்ணய உரிமையையும் உறுதிப்படுத்தி, எம்மக்களின் உரிமைகளையும் அவர்களுக்கான நீதியையும் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்றுங் கூறியிருந்தேன்.

தெற்கில் பூதவடிவம் பெறப்பார்க்கும் இனவெறுப்புடனான அரசியல் சிந்தனைகளை நாம் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும். எம்முடன் கைகோர்த்து வரச் சம்மதித்திருக்கும் மேற்கத்தைய நாடுகளுடனான உறவை நாம் பலப்படுத்த வேண்டும். இவ்வாறு செய்வதால் எமக்கொரு நிரந்தர அரசியல் தீர்வை நாங்கள் பெற வழி அமைக்கலாம். இதை மனதில் வைத்துத் தான் நாம் தேரந்தெடுக்கும் பிரதிநிதிகளின் தரம், தகைமை, தகுதி எவ்வாறு அமைய வேண்டும் என்று மக்களை நோக்கிய எனது முன்னைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

தேர்தல் நெருங்கி விட்டிருக்கும் இந்த நேரத்தில் எனது இனிய சகோதர சகோதரிகளுக்கும் இளைஞர்கள் யுவதிகளுக்கும் நான் ஒன்று கூறக் கடமைப்பட்டுள்ளேன். தேர்தல் விரைவில் முடிந்து விடும். பழைய வாழ்க்கை மீண்டும் திரும்பி விடும். ஆனால் உங்கள் இனிவரும் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படவேண்டுமானால் உங்களுக்கானகட்சியை நீங்கள் தேர்ந்தெடுத்தால் போதாது. அக்கட்சியில் போட்டியிடும் திறமான வேட்பாளர்களை அடையாளம் கண்டால் போதாது. நீங்கள் அனைவரும் திரண்டெழுந்து சென்று ஆகஸ்ட் மாதம் 17ந் திகதி காலையில் வாக்களிப்பது மிக முக்கியம்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னுந் தாயகம், தனித்துவம், தமிழர் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டில் உறுதியாக இருந்து வருகின்ற கட்சியாக இருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனஅழிப்புக்கு நீதிதேடுவதற்குப் பின்னிற்காத கட்சியாக, சுதந்திரமான சர்வதேச விசாரணை என்ற விடயத்தில் உறுதியுடன் உள்ள கட்சியாகத்திகழவேண்டும். தமிழ் மக்களின் கௌரவம், சமத்துவம், பாதுகாப்பு போன்ற விடயங்களில் சமரசம் செய்யாத கட்சியாக இருக்க வேண்டும். போருக்குப் பின்னரான இந்தச் சூழலில், செயற்த்திறன் மிக்க புனருத்தாரண பணிகளை முன்னெடுக்கின்ற கட்சியாக இருக்க வேண்டும். காணமல் போகச் செய்யப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிவதற்காகவும், அரசியல் கைதிகள் விடுதலைக்காகவும் இதய சுத்தியுடன் செயற்படுகின்ற கட்சியாக இருக்க வேண்டும்.

சரணகதியடையாமல், எமது தனித்துவத்தையுஞ் சுயநிர்ணய உரிமையையும் வலியுறுத்தி வரும் கட்சியை அடையாளங் காணுவது உங்களுக்குச் சிரமம் அளிக்காது என்று எண்ணுகின்றேன். அடிப்படைக் கோட்பாடுகளில் உறுதியாக இருக்கும் கட்சியில் இருக்கும் நேர்மையான, கொள்கையில் உறுதியுடைய, மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய, தூரநோக்குப் பார்வைகொண்ட, எத்தருணத்திலும் விலைபோகாத மனோதிடம் கொண்ட வேட்பாளர்களை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அதேபோல், வடகிழக்கு மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து வேட்பாளர்களும் மக்கள் நலனே முதன்மையானது என்ற இலக்கினால் ஒன்றுசேர்ந்து, ஒரு குடைக்குக் கீழ் ஒற்றுமையாய் வடகிழக்கு மக்களின் நலன் கருதி செயலாற்ற முன்வர வேண்டும் என்றும் குறித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## அனல்மின்...

நிகழ்த்தக்கூடாது என்றே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சம்பூர் அனல் மின்நிலையத்திற்கான சுடுநீர் மற்றும் குளிர் நீர்க்குழாய்களை அமைக்கும் பணிகளுக்கான காணிகளை அரசுடமையாக்கும் முயற்சிகளுக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பூர் காணிகளுக்கு வருகை தந்திருந்த அரச அதிகாரிகள் குழாய்களை அமைப்பதற்கென அடையாளப்படுத்தியுள்ள காணிகளுக்குள் கட்டுமாணப் பணிகளை முன்னெடுக்க வேண்டாம் என அறிவுறுத்தியிருந்தனர்.

இக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த மக்கள் அவ்வறிவுறுத்தலை எதிர்த்த போது அவ்வாறு எதிர்த்தால் காவல்துறையின் உதவியுடன் அக்காணிகள் கைப்பற்றப்படும் என அச்சுறுத்தியுள்ள அரச அதிகாரியொருவர் காணிகளைக் கையளிக்காது போனால் வீடமைப்புத திட்டத்தையும் முன்னெடுக்க முடியாது என்றும் தெரிவித்திருந்தார்.

அக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்த மக்கள் அவ்வாறான அச்சுறுத்தல்களையிட்டு அஞ்சாது அங்கிருந்த அரச அதிகாரிகளைக் கேள்விமேல் கேள்வி கேட்டுத் தமது எதிர்ப்பை வெளியிட்டதுடன் அக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேசத்தைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினரையும் பிரதேச சபை உறுப்பினரையும் கடுமையாக விமர்சித்ததாகவும் தெரியவந்துள்ளது.

நடைபெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இவ்விடயம் தொடர்பாகக் கடும்போக்கு பிரயோகிக்கப்படலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு.... மக்கள் முரசு

நுணுக்கமாக தன்னை வளர்த்துத்தான் இருக்கிறது. அது எங்கே புரியும் என்றால் பசுபிக் சமுத்திரத்தின் நடுவில் உள்ள சில தீவுக் கூட்டங்களில் 1941 இல் நடந்த சம்பவங்களில் இருந்து உணர்ந்து கொள்ளலாம்.

இந்த இடத்தில் ஒருவரை பற்றி பதிவிடாமல் விட்டுச் சென்றால் அமெரிக்கா எம்மை மன்னிக்காது. பிறகு அதற்கும் ஐநா வில் தீர்மானம் கொண்டு வந்து விடுவார்கள். யார் ? என்றால் அவர்தான் 1933 இல் இருந்து 1945 வரை 32 வது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த குசயமெடைை ஹுநடயெழ சுழழளநஎநடவ . அமெரிக்க வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் 3 முறைகள் அமெரிக்க ஜனாதிபதி இருக்கையை அலங்கரித்தவர். நான்காவது முறையாகவும் வந்த சில நாட்களிலேயே இருதய நோயால் 63 வயதில் இறந்துபோனார். அதள பாதாளத்தில் இருந்த அமெரிக்க பொருளாதாரத்தினை தூக்கி நிறுத்துவார் என்று மக்கள் நம்பிக்கையாக எதிர்பார்த்து ஜனாதிபதியாக தெரிவு செய்தார்கள். அப்படியே அவரும் செய்தார். அமெரிக்கா உலகப்போரில் வெல்ல வேண்டும் என்று ஆணையிட்டார்கள். அதனையும் செய்து முடித்தார். நவீன அமெரிக்கர்கள் கதாநாயகனாகவே அவரைக் கொண்டாடினார்கள். இவர் மிகவும் ஒரு மனோதிடம் கொண்டவர். அந்த விடயத்தை சொல்லியே ஆகவேண்டும். இவர் ஜனாதிபதியாக வரமுன்னர் கவர்னர் தேர்தலிலே நின்று தோற்றுப் போனார். அந்த சோகம் மறக்க எங்கோ ஒரு தீவிற்கு குடும்பத்துடன் சுற்றுலா சென்றார். போன இடத்தில் இவருக்கு போலியோ நோய் தாக்கி விட்டது. உடல் செயலிழந்தது. மருந்துகள் பெரியளவில் கண்டு பிடிக்காத அந்த காலத்தில் தனது விடா முயற்சியால் எழுத்து நடந்து தேர்தலில் வென்று கவர்னர் ஆகி பின்னர் 3 தடவைகள் ஜனாதிபதியாகி சாதித்தவர். 2 ம் உலக யுத்தத்தில் இவரை விட வேறு யாரும் ஜனாதிபதியாக இருந்திருந்தால் அமெரிக்காவின் நிலை சிலவேளைகளில் வேறாகயிருக்கும்.

சரி நாம். 2 ம் உலக யுத்தத்தில் அமெரிக்காவின் பங்கு என்ன? என்று பார்த்தால் லேட்டா வந்தாலும் லேட்டஸ்ட் ஆக வாறதுதான் அமெரிக்க கொள்கை போல இருக்கிறது. 1 ம் உலக யுத்தத்திலும் போர் தொடங்கி இரண்டு வருடம் கழித்தே நுழைந்தது. 2ம் உலக யுத்தத்திலும் அப்படித்தான். 1941 இல் அதாவது போர் தொடங்கி இரண்டு வருடம் கழித்தே உள்ளே வந்தது. மன்னிக்கவும் . ஜப்பானால் வரவழைக்கப் பட்டது. இதற்குள் பல மர்மங்கள் இருக்கிறதாம். சொல்கிறார்கள். தேவை உள்ளவர்கள் அவர்களைக் கேளுங்கள்.

இந்த யுத்தத்தில் அமெரிக்காவின் நுழைவாசல் வடக்கு பசிபிக் கடலில் இருக்கின்ற அமெரிக்க சமஸ்தானமாக இருந்த எட்டு தீவுகள் சேர்ந்த ஹவாய் தீவுகளில் தான் இருந்தது. அதிலும் ஹொனொலுலு (ர்ழழெடரடர ) தீவில் மிகவும் பாதுகாப்பாக, உருமறைப்பாக, பிரமாண்டமாக, அமெரிக்க கடற்படையின் முதுகெலும்பாக இருந்த பேர்ல் துறைமுகம் பேரரசு ஜப்பான் அரசின் கடற்படை விமானப்படை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த இரகசிய நடவடிக்கையால் 1941 டிசம்பர் 07 அன்று அதிகாலையில் அமெரிக்க கடற்படையினரை நித்திரைப் பாயில் வைத்தே தாக்கி அழிக்கப் பட்டதுடன் ஆரம்பமானது. அடுத்தநாளே அமெரிக்கா ஜப்பான் பேரரசு மீது போர் அறிவித்தது. உடனேயே ஜப்பானைத் தாக்கினால் நாம் உதவிக்கு வருவோம் என்றும், அமெரிக்காவும் எமக்கு எதிரிதான் என்றும் ஜேர்மன் தேசாதிபதி ஹிட்லர் அறிக்கை விட்டார். அமெரிக்கா கோலாகலமாக போருக்குள் நுழைந்தது. அங்கே அவர்கள் ஆடிய ஆட்டங்களை அடுத்த பதிவில் பார்க்கலாம்.

இப்படி உலகபோருக்குள் அமெரிக்கா நுழைய காரணமான ஹவாய் அதுவும் 1959 இல் தான் அமெரிக்காவின் எட்டுத் தீவுகளின் நிர்வாகங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, தனியொரு ஆட்சிப் பரப்பாக, 50 வது மாநிலமாக மாறியது. இன்று உல்லாசப் பயணிகளின் சொர்க்க புரியாகவும், கல்வியியலாளர்களின் இராச்சியமாகவும் அது விளங்குகிறது. மிகப் பெரிய சிவன்கோயில் ஒன்றும் இருக்கிறது. அதனை திருத்தி பிரமாண்டமாக கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அதனைவிட தமிழர்கள் வாழ்ந்ததாக சான்றுகளும் அங்கே உண்டு. 30 வருடங்களுக்கு முன்னர் தமிழர் வாழ்ந்த தேசங்களில் ஹவாயும் அடக்கம் என்பதை மறக்க வேண்டாம். ஹவாய் பற்றியும் விரிவாக வேறு பதிவில் பார்க்கலாம்.

ஈரானுடன் அணு சக்தி, மற்றும் செறிவூட்டல் தொடர்பாக அமெரிக்கா பல சுற்று இரகசிய பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறது. என்ன பேசுகிறார்கள் என்று வெளியில் தெரியாத பொழுதும் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு அனைத்து உலக நாடுகளும் ஆவலாக காத்திருக்கின்றன. அதேநேரம் 2016 நவம்பரில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வர இருப்பதால் அங்கே மிகவும் செல்வாக்குடைய இரு பெரும் கட்சிகளான ஜனநாயக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சிகளுக்குள் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும் போட்டியில், கட்சிகளுக்குள் வாக்கெடுப்பு நடைபெறுவதால் இந்த ஈரான் விவகாரம் சூடுபிடித்த பேசு பொருளாக அமைந்திருக்கிறது.

அதனை விட இந்த மாதம் அமெரிக்க உயர் நீதிமன்றத்தால் "ஒரே பால் திருமணம்" சட்டரீதியானது என்றும் அனைத்து மாநிலங்களிலும் அமுலுக்கு வருகிறது என்றும் சட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அதாவது தனி மனித விருப்பு வெறுப்புகளை அது கணக்கில் எடுத்திருப்பதாக காட்டியிருக்கிறது.

அவை அப்படியே நிற்க. 2 ம் உலக யுத்தத்தில ஜப்பானை வைத்து 1941 இல் "அமெரிக்காவின் கர்வம்" பேர்ல் காபரை தாக்கி அமெரிக்காவை யுத்ததிட்குள் அழைத்து வந்து விட்டோம். என்னதான் மாயம் செய்வார்களோ தெரியாது அவர்கள் உள்ளே நுழைந்தால் யுத்தத்தின் போக்கு மாறுகிறது.. 1 வது உலகப் போரிலும் சரி, 2ம் உலகப் போரிலும் சரி. அமெரிக்கா நுழைந்ததுமே நேச நாட்டுப் படைகளுக்கு ஒரு கிக் கிடைத்ததாக ஆய்வாளர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதாவது 1939 தொடங்கி 1941 இன் ஆரம்பம் முதல் 2 ம் உலக யுத்தம் சூடு பிடிக்க வில்லை என்றும், ஆங்காங்கே சண்டைகள் நடந்ததாகவும், ஆனால் பெரும்பாலான வீரர்கள் ஒய்விலேயே களத்தில் இருந்தார்களாம். அந்த காலப்பகுதியை ஆய்வாளர்கள் "போலிப்போர் " (ீழழெநல றுயச) என்று குறிப்பிடுகிறார்கள். அச்சமயம் அமெரிக்கா- பிரிட்டனுக்கு ஆயுத வழங்கல் செய்ததும், அந்த கப்பல்களை தேடி ஜெர்மன் நீர்



தொடரும்

வருகை - 09

விந்தியா சாகரன்

முகப்பக்கத்திலிருந்து...

## வினோதங்கள்

### ஞாபக மறதியால் நிகழ்ந்த விபரீதம்

கனடா நாட்டில் 21 வயதான தாயார் ஒருவர் தன்னுடைய 3 குழந்தைகளை காரில் ஏற்றிக்கொண்டு தனது கணவரை அவரது அலுவலகத்தில் விட்டு வருவதற்காக சென்றுள்ளார். இறக்கி விட்டு தனது வீட்டிற்கு திரும்பிய போது அவரது இரண்டு குழந்தைகளும் கூடவே வந்துள்ளனர். தன்னுடைய 17 மாத ஆண் குழந்தையை அவர் ஞாபக மறதியால் காரிலேயே விட்டு வந்துள்ளார். சுமார் ஒரு மணி நேரத்திற்கு பிறகு வீட்டில் இளைய மகன் இல்லை என்பதை உணர்ந்த தாயார் பதறியடித்து வந்து காரில் பார்த்த போது எந்தவித அசைவும் இல்லாமல் இருந்த குழந்தையை கண்டு அதிர்ச்சி அடைந்த அவர் உடனடியாக அருகில் இருந்த மருத்துவமனைக்கு விரைந்த போதும் குழந்தை இறந்துவிட்டது. இச்செயலை அடுத்து தாயார் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்படியும் நடக்கலாம்

### தாயின் கணவரால் குழந்தை கர்ப்பம்



தென் அமெரிக்காவில் கணவர் இல்லாததால், தாயார் வேறொரு நபரை திருமணம் செய்து ஒரே வீட்டில் வசித்து வந்துள்ளனர். இந்நிலையில், தாயாரின் கணவரான அந்த நபர், 10 வயது சிறுமியை பாலியல் சித்ரவதை செய்து கற்பழித்துள்ளார். இந்த விவகாரம் வெளியில் தெரிய வர, காவல்துறையினர் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து, 10 வயதான சிறுமி கர்ப்பமடைந்துள்ளார்.

பராகுவே நாட்டின் சட்டப்படி, கர்ப்பினி பெண்ணிற்கு பிரசவ நேரத்தில் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு இருந்தால் மட்டுமே கருக்கலைப்பு செய்ய அனுமதிக்கப்படுவார்.

தாயாரின் கவனக்குறைவால் தான் சிறுமி கற்பழிப்பிற்கு உள்ளாகி இருப்பதால் அவர் மீதும் கால்துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

### அதிபரின் பெயரை சூட்டினால் குடியுரிமை கிடைக்குமாம்

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான கானாவில் உள்ள பெரெகும் நகரை சேர்ந்த 26 வயதான கர்ப்பினி ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் ஜேர்மனியில் தஞ்சம் நாடி வந்துள்ளார். தற்போது 730 புலம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள முகாமில் தன்னுடைய மகள்களுடன் வசித்து வரும் அவர், தனக்கு பிறந்த குழந்தைக்கு 'Angela Merkel Ade' என பெயர் சூட்டியுள்ளார்.

இது குறித்து அவர், தன்னுடைய குழந்தைக்கு அதிபரின் பெயரை சூட்டியுள்ளதால் தனக்கு குடியுரிமை கிடைக்கும் என நம்புவதாக கூறியுள்ளார்.



- பிரித்தானியாவில் கடந்த சில தினங்களாக பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது. இந்நிலையில் மான்செஸ்டர் பகுதியின் மான்சுனியன் பாதையில் உள்ள சாலையில் திடீரென 40 அடி பள்ளம் ஏற்பட்டது. அப்பகுதியில் பெய்த மோசமான மழையும் இதற்கு ஒரு காரணம் என்று கூறப்பட்டுள்ளது. இதனையடுத்து சாலையில் இரண்டு பக்கங்களும் மூடப்பட்டுள்ளது.
- பிரித்தானியாவில் முதியவர்கள் காப்பகத்தில் வேலை செய்யும் பெண் ஒருவர் அங்குள்ள முதியவர்களுடன் பாலியல் தொடர்பு வைத்திருந்துள்ளார். அங்கு சேர்க்கப்பட்டிருந்த 80 வயது ஆண் மற்றும் பெண்ணிடம் உடலுறவு வைத்திருந்துள்ளார். 101 வயது பெண்மணி ஒருவருக்கும் பாலியல் தொல்லைகள் கொடுத்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து கைது செய்த காவல்துறையினர் அவருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றுக் கொடுத்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

விளையாட்டு முரசு

## கிரிக்கட் சுற்றுப்போட்டி

கோல்டன் ஈகள் விளையாட்டுக்கழகமானது கழகத்தின் 27வது ஆண்டினை சிறப்பிக்கு முகமாகவும் மறைந்த எமது கழக உறுப்பினர் அ.புவிராஜா அவர்களின் 11வது ஆண்டை நினைவுகூரும் முகமாகவும் கிரிக்கட் சுற்றுப் போட்டியினை எதிர்வரும் 29,30, ஆகஸ்ட் மற்றும் 05,06 செப்தெம்பர் மாதம் 2015, ஆகிய தினங்களில் நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளனர்.

தங்கள் கழகங்களும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அழைக்கின்றனர்.

## றக்பி கிண்ணப் போட்டி

சர்ச்சைக்குரிய முறையில் மரணமான றக்பி வீரரான வசீம் தாஜுதீனின் ஞாபகார்த்தமாக இடம்பெற்ற றக்பிக் கிண்ணப் போட்டியில், சென். தோமஸ் முதல்நிலைப் பாடசாலையின் பழைய மாணவர்கள் வெற்றிபெற்றுள்ளனர். கல்கிசை சென். தோமஸ் கல்லூரியின் பழைய மாணவர்களை வெற்றிகொண்டே அவர்கள் சம்பியன் பட்டம் வென்றனர்.

இரண்டாவது வருடமாக இடம்பெற்ற இத்தொடர், கொழும்பு சி.ஆர் அன்ட் எ.ப்.சி மைதானத்தில் இப்போட்டி இடம்பெற்றிருந்தது.

வசீம் தாஜுதீன் அறக்கட்டளையினால் நடாத்தப்பட்ட இத்தொடர், இரண்டாவது வருடமாக இடம்பெற்றிருந்தது.

## மத்திய மாகாண மேசைப் பந்து போட்டிகள்

மத்திய மாகாணத்தில் நடாத்தப்பட்ட மேசைப் பந்து சம்பியன்ஷிப் தொடர் நிறைவுக்கு வந்துள்ளது. தொலுவவிலுள்ள ஜகத் ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கில் இப்போட்டிகள் இடம்பெற்றிருந்தன.

இத்தொடரின் ஆண்கள் பகிரங்கப் பிரிவில், திலின விஜேசிரியை 11-9, 11-5, 11-8 என்ற செட் கணக்கில் வெற்றிகொண்ட உதய ரணசிங்க, சம்பியன் பட்டம் வென்றார்.

பெண்கள் பகிரங்கப் பிரிவில் நிட்மி கரடனாராச்சியை எதிர்கொண்ட சமதி ஹெட்டியாராச்சி, 14-12, 13-11, 11-7 என்ற செட் கணக்கில் வெற்றிகொண்டு, சம்பியன் பட்டம் வென்றார். 15 வயதுப் பிரிவில், ஆண்களில், ஷகில கருணாரத்னவை எதிர்கொண்ட சி.எம் குணசேகர, 11-8, 11-6, 15-13 என்ற செட் கணக்கில் வெற்றிகொண்டார்.

பெண்களுக்கான பிரிவில், சமதி ஹெட்டியாராச்சியை எதிர்கொண்ட தனுஷி றொட்ரிகோ, 11-4, 4-11, 11-5 என்ற செட் கணக்கில் வெற்றிகொண்டார்.

## மூன்றாவது சுற்றுக்கு அன்டி மரே முன்னேற்றம்

றொஜர்ஸ் கிண்ண டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுக்கு பிரித்தானியாவின் முன்னணி வீரர் அன்டி மரே முன்னேறியுள்ளார். மொன்ரீயலில் நடைபெற்ற இரண்டாம் சுற்றுப் போட்டியில் ஸ்பெய்னின் டொமி றொபேடோவை 2 க்கு 0 என்ற நேர் செட் கணக்கில் அன்டி மரே வெற்றிகொண்டார்.

போட்டியின் முதல் செட்டை 6 க்கு 4 என்ற புள்ளிகள் கணக்கில் கைப்பற்றிய அன்டி மரே இரண்டாவது செட்டை 7 க்கு 5 என்ற கணக்கில் தன்வசப்படுத்தினார்.

அடுத்த சுற்றில் லக்சம்பேர்க்கின் ஜய்ல்ஸ் முல்லரை அன்டி மரே எதிர்கொள்ளவுள்ளார். மொன்ரீயலில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்கு அன்டி மரே முன்னேறும் பட்சத்தில் டென்னிஸ் வீரர்களுக்கான தரப்படுத்தலில் 2வது இடத்திற்கு அன்டி மரே முன்னேறுவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஏழாவது இடத்திலுள்ள ரபெயல் நடால், யுக்ரைய்ன் வீரர் சேர்ஜி ஸ்ரைக்கொப்ஸ்கியை இரண்டுக்கு பூஜ்ஜியம் என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.



## கிரிக்கட் வீரர்கள் விவாகரத்து செய்ய வேண்டுமா?

அவுஸ்திரேலிய அணி ஆ'ஸ் தொடரை 3-1 என்ற கணக்கில் இங்கிலாந்திடம் பறிகொடுத்தது. இதைத் தொடர்ந்து பல விமர்சனங்கள் எழுந்தன. இதனால் நெருக்கடிக்குள்ளான கிளார்க் ஆஷஸ் தொடருடன் ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இதற்கிடையில் அணியின் தோல்விக்கு வீரர்கள் தங்களது மனைவிகளை இங்கிலாந்து அழைத்து சென்றதே காரணம் என்று கூறப்பட்டது.

இது பற்றி கருத்து தெரிவித்த தெரிவுக்குழு தலைவர் மார்ஷ், தற்போது அதிகமான போட்டிகள் நடைபெறுவதால் வீரர்கள் தங்கள் குடும்பங்களை பிரிந்து இருக்க முடியாது. நீங்கள் வீரர்கள் விவாகரத்து செய்துக் கொண்டு, சோகமாக வாழ வேண்டும் என எதிர்பார்க்கிறீர்களா?

அவுஸ்திரேலிய அணியின் தோல்விக்கு வீரர்களின் செயல்பாடே காரணம். தெரிவுக் குழுவும் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என்று கூறியுள்ளார்.





## நீச்சல் போட்டியில் சாதனை

சான் அந்தோனியாவில் இடம்பெற்று வரும் ஜக்கிய அமெரிக்க சம்பியன்ஷிப் போட்டிகளில் இவ்வருட உலக சாதனை நேரத்தில் 200 மீற்றர் தனிப்பட்ட மெட்லி போட்டியை கடந்துள்ளார். வியாழக்கிழமை ரஷ்யாவில் இடம்பெற்ற உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் 1 நிமிடம் 55.81 செக்கன்களிலேயே சக அமெரிக்கரான ரயான் லொச்டே நீந்திக்கடந்து வெற்றிபெற்ற நிலையில் பெல்ப்ஸ் ஒரு நிமிடம் 54.75 செக்கன்களில் இதே தூரத்தை கடந்திருந்தார். நடைபெற்றுவரும் இந்தப்போட்டிகளில் பெல்ப்ஸ் 100 மீற்றர், 200 மீற்றர் பட்டர்பிளை பிரிவுகளிலும் இவ்வருட சாதனை நேரத்தில் நீந்திக் கடந்திருந்தார்.

கடந்த வருடம் குடிபோதையில் வாகனமோட்டியமை காரணமாக ஆறு மாதம் விதிக்கப்பட்ட தடை, 18 மாதங்களுக்கு மது உள்ளெடுக்கின்றாரா என்ற கண்காணிப்பில் உள்ளதாலேயே அவர் உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கேற்கவில்லை.

## பாக்கிஸ்தான் கிரிக்கட் சூதாட்டத்தினால் அழிகிறது

பாகிஸ்தான் கிரிக்கெட் சூதாட்டத்தினால் அழிவடைந்துள்ளதாக அந்த அணியின் முன்னாள் தலைவர் ஜாவிட் மியன்டாட் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் ஏனைய விளையாட்டுக்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக செயற்பட்டிருந்த மியன்டாட் 1999 ஆம் ஆண்டு உலக கிண்ண தொடருக்கு முன்னதாக அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார். சார்ஜாவில் நடைபெற்ற தொடரின் போது சூதாட்டத்துடன் தொடர்புபட்டுள்ளமை குறித்து சில வீரர்களுடன் அவர் முரண்பட்டிருந்தார்.


இதனையடுத்து மியன்டாட்டிற்கு எதிராக வீரர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டதை அடுத்து தலைமை பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டிருந்தார்.

## கொஹ்லியை பாராட்டிப் பேசிய தலைவர்கள்

இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வரும் இந்திய அணியின் அணித்தலைவராக விளையாடி வரும் விராட் கோஹ்லி சிறப்பாக செயல்பட்டு வருகிறார். இந்நிலையில் கோஹ்லியின் செயல்பாடு பற்றி முன்னாள் இந்திய அணித்தலைவர் கங்குலி கூறுகையில், கால்பந்து ஜாம்பவான் மரடோனாவின் வேகம் - ஆக்ரோஷம் ஆகியவற்றை விராட் கோஹ்லியிடம் பார்கிறேன் என்கின்றார். மேலும், 3வது வீரராக களமிறங்கிய ரோஹித் சர்மா சொதப்பினார். ஒரு போட்டியை வைத்து முடிவு செய்யாமல் அவருக்கும் இன்னும் வாய்ப்பு வழங்கலாம் என்று கூறியுள்ளார்.

அதே போல் முன்னாள் இந்திய அணித்தலைவர் கவாஸ்கரும் விராட் கோஹ்லியை பாராட்டி பேசியுள்ளார். கோஹ்லி தலைமை தாங்கவே பிறந்திருப்பதாகவும், 19 வயதில் அணிக்கு தலைவராக செயல்பட்ட அவர் பல விடயங்களை கற்றுக் கொண்டதாகவும் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.





## கிரிக்கட் இல்லையேல் கால்பந்து வீரராகியிருப்பார்!!

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் இளம் வீரரான மேக்ஸ்வெல் அதிரடியால் பல ரசிகர்களை தன் பக்கம் ஈர்த்தவர்.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் பிறந்த மேக்ஸ்வெல் ஆரம்ப காலத்திலே மிரட்டல் வீரராக இருந்துள்ளார். இவருக்கு ஒரு சகோதரர் ஒருவர் உள்ளார். இவர் கால்பந்து வீரர். இருவரும் இணைந்து தான் கால்பந்து விளையாடுவர்.

மேக்ஸ்வெல் கிரிக்கெட்டுக்கு வரவில்லை என்றால் கண்டிப்பாக கால்பந்து வீரராக தான் உருவாகி இருப்பார். அவருக்கும் அதுவே ஆசை. பஞ்சாப் அணியில் பல வித்தைகளை கற்றுக் கொண்டு எதிரணிகளுக்கு பேரிடியாய் அடி கொடுத்தார் மேக்ஸ்வெல். இதனாலே பஞ்சாப் இறுதிப் போட்டிக்கும் தகுதி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிறைவுத் தேர்தல் கூட்டம் கட்டைப்பறிச்சான்



திருகோணமலை மாவட்டத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிறைவுப் பிரசாரக் கூட்டம் கடந்த 11ம் திகதி கட்டைப்பறிச்சன் பொது-விளையாட்டரங்கில் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மூதூர் கிழக்குச் செயற்பாட்டாளரும் வேட்பாளர்களில் ஒருவருமான திரு . ஸீவேந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முதன்மை வேட்பாளர் திரு.இரா.ஸ்ரீஞானேஸ்வரன், கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ஹரிஹரன், வேட்பாளர்கள் திரு. சந்திரகுமார் (லிங்கன்), திரு. கேதீஸ்வரன் (ஈஸ்வரன்), திருமதி. ஆ. வாசுகி ஆகியோரும் புனர்வாழ்வளிக்கப்பட்ட மாவட்ட அரசியல்துறைப் பொறுப்-பாளர் திரு.ரூபன், கட்சியின் தீவிர ஆதரவாளர் திரு கு.பிரகாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் கட்டைப்பறிச்சான். சேனையூர், இலக்கந்தை, பாட்டாளிபுரம், பள்ளிக்குடியிருப்பு, வீரமாநகர் உட்பட மூதூர் கிழக்குக்

17

## "அணிதிரட்டத் தயாராகுங்கள்"

### கஜேந்திரகுமார் அழைக்கின்றார்

அடுத்து வரும் சிலநாட்களிற்கு சொந்தபந்தங்கள்,அயலவர்கள்,நண்பர்கள் என அனைவரையும் தொலைபேசி வழியூடாவோ,சமூக ஊடகங்களின் ஊடாகவோ விழிப்பூட்டி சைக்கிளிற்கு வாக்களிப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள அன்புடன் அழைப்பு விடுத்துள்ளார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

புலம்பெயர் உறவுகளிற்கு அவர் விடுத்துள்ள பகிரங்க அழைப்பினில்: மாற்றமொன்றிற்கான நீண்டதொரு முயற்சியின் இறுதிநாட்களில் உங்களுடன் பேசுகின்றோம்.

முள்ளிவாய்க்கால் இறுதி கணங்களினில் தூக்கமின்றி புலம்பெயர் தேசங்களின் வீதிகளெங்கும் அலைந்து திரிந்த உங்களின் அர்ப்பணிப்பின் பெறுமதி சொல்லிலடங்காதது.இன்றும் விழுந்துவிடாத வீரம் தங்கி நிற்பது தங்களாலேயே என்பதும் சொல்லித்தெரியவேண்டியதில்லை.அனைத்தும் இழந்து நட்டாற்றினில் விடப்பட்ட எம்மக்களினை மீண்டெழுந்து வாழ வைத்ததும் நீங்கள் என்பது வெறும் புகழ்ச்சியல்ல.

புதிய அரசியல் மாற்றமொன்றிற்கான அலை தமிழர் தேசமெங்கும் வீசிவரும் நிலையினில் மக்களை நாம் கிராமம் கிராமமாக தேடி அவர்களை தெளிவூட்டியுள்ளோம்.ஆனாலும் எம்மிடம் உள்ள மட்டுப்பாடான வளம்,அரச தடைகள்,உள்ளூர் ஊடகங்கள் சிலவற்றின் இருட்டடிப்பென அனைத்தையும் தாண்டியே எமது பரப்புரைகள் அமைந்திருந்தது.

அடுத்து வரும் சிலநாட்களிற்கு சொந்தபந்தங்கள்,அயலவர்கள்,நண்பர்கள் என அனைவரையும் தொலைபேசி வழியூடாவோ,சமூக ஊடகங்களின் ஊடாகவோ விழிப்பூட்டி சைக்கிளிற்கு வாக்களிப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். என அழைப்பு விடுத்துள்ளார்.

## "பன்குளம் பிள்ளையார் ஆலயத்திற்குப் புதிய சிலை" - இராதாகிருஸ்ணன் அன்பளிப்பு




திருகோணமலை பன்குளம் பிள்ளையார் ஆலயத்திற்கு ஐம்பொன்னிலான பிள்ளையார் சிலையொன்றை திருகோணமலை இலட்சுமி நாராயணன் கோவில் திரு. இராதாகிருஸ்ணன் அவர்கள் அன்பளிப்புச் செய்துள்ளார்.

நேற்று மதிய பூசை வேளையில் இச்சிலை கோவில் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட தமிழத் தேசிய மக்கள் முன்னணியின் அமைப்பாளர் திரு. இரா.ஹரிஹரன் மற்றும் செயற்பாட்டாளர்களில் ஒருவரான கு.பிரகாஸ் ஆகியோர் கையளித்தனர்.

## "ஆட்சிக்கு ஆதரவளிக்கத் தயார்"

### சம்பந்தன் தெரிவிப்பு



எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 105 க்கும் மேற்பட்ட ஆசனங்களைப் பெற்று மைத்திரி அணி ஆதரவாளர்களுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் கூடிய ஆட்சியை 18ம் திகதி அமைக்கும். இது உறுதியாகும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

மாவட்டத்திலுள்ள பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிகளை நேற்று தனது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இரா.சம்பந்தன் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஐ.தே.க. 105 ஆசனங்களுக்கு மேல் பெற்று வெற்றி பெறுமென கருத்துக்கணிப்புக்களும் ஆய்வுகளும் கூறுகின்றன. நானும் அதை ஏற்றுக் கொள்கிறேன். இதேவேளை ஐ.ம.சு.மு 70க்கும் 85 க்கும் இடைப்பட்ட ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.ம.சு. கூட்டணியிலுள்ள மைத்திரியணியினர் ஐ.தே.க. வுடன் இணைந்து 18ம் திகதி ஆட்சி அமைப்பார்கள். அந்த ஆட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை பெற தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு நல்க காத்திருக்கிறது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்கப்படுமாயின் புதிய அரசியல் யாப்பொன்று உருவாக்கப்படும் அந்த அரசில் யாப்பின் மூலம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு முன்னெடுக்கப்படும்.

வரையப்படவுள்ள அரசியல் யாப்பில் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 65 வருடகால தமிழ் மக்களின் போராட்டத்துக்கு இதன் மூலம் உடனடி தீர்வு காணப்படுமென்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

தமிழ் மக்கள் எச்சந்தர்ப்பத்திலும் விலை போனவர்கள் அல்லர். இனியும் நாம் விலைபோகப் போவதில்லை. எமது நீண்ட கால போராட்டத்துக்கு உடனடியாக தீர்வு காணக்கூடிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. இந்த வாய்ப்பை தவறவிடக்கூடாது என்பதே எமது அதீதமான நோக்கமாகும். தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே சர்வதேச சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பு. எம்முடன் பேசி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள் என சர்வதேச சமூகம் வலியுறுத்திக் கொண்டிருப்பதை நாம் அறிவோம் என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 15.08.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.